Though the disarmament process is to be overseen by the SLMM, the question is whether the SLMM could be trusted by the Tamils. We should not forget that the monitoring mission has been singularly reluctant to state openly that Karuna operates from government-controlled areas and a nexus exists between his loyalists and the security forces. It took almost two years of constant complaints by the Tigers for the SLMM to come up with a report confirming Karuna did operate from government-controlled areas in the east, a fact which a child living in Welikanda would have readily acknowledged.

Only last week, on the eve of his departure after being relieved of his duties as head of the SLMM, did Hagrup Haukland put the record straight when senior security forces personnel denied armed paramilitary groups operated in the east, "There is no doubt that such groups do exist. The army should be truthful about this issue." Such forthright statements earlier might not have endeared Haukland with the Sri Lankan security forces but put on record long ago a matter that the government came to accept in Geneva.

On the other hand, even if the monitors want to do a genuine job would they have the required wherewithal to verify whether the tasks of disarming have actually been accomplished. Wherever decommissioning of weapons becomes a sticky issue, including Northern Ireland and Kosovo verification has been a must.

If Rajapakse wants to be untruthful about disarming Karuna it could either be a result of deliberate defiance, in which case he would be intentionally violating the agreement reached in Geneva and justifying the LTTE withdrawing from the CFA. On the other hand, Karuna could refuse to disarm leading Rajapakse to resort to deceit to cover up the fact that he is a weak, ineffectual head of state unable to impose political control on those who bears arms within the geographical area supposedly under the control of the Sri Lankan state. If it is the latter it will bring Sri Lanka one step closer to being labelled by that derogatory epithet: "a failed state."

Source: Northeastern Monthly - March 2006

நூறுபடை கூறுபட

வீறுகொளும் மறவர்

மாறுபடு பகைவரை

நாட்டை விட்டே

கலைப்பர்.

ஒரு பேப்பர் ORU PAPER

Three Mules and Sister Rajani

By: Sachi Sri Kantha
for Orupaper from Japan

It seems the documentary movie 'No More Tears Sister', featuring the tragic life of Dr.Rajani Thiranagama (1954-1989) and directed by a Canadian Helene Klodawsky, is now being promoted vigorously by interested parties. One blurb I read states, "No More Tears Sister – explores the price of truth in times of war. Set during the violent ethnic conflict that has enveloped Sri Lanka over decades, the documentary recreates the courageous and vibrant life of renowned human rights activist Dr.Rajani Thiranagama." But, we all know that blurbs are merely blurbs, even if hyped by incorporating the phrase 'price of truth'. Let me present here, a contra view on Sister Rajani's career as a human rights activist in Jaffna.

I borrowed the title of this essay from an old Hollywood movie 'Two Mules for Sister Sara' (1970), featuring two endearing icons of my era – Clint Eastwood and Shirley MacLaine and directed by Don Siegel. In the wake of recent revelations which appeared in the Colombo Daily News (see below), I had humorously adopted this movie title into 'Three Mules and Sister Rajani', to refer to the so-called four Tamil human rights activists, who co-authored the much hyped Broken Palmyra (1990) book.

The 'Two Mules for Sister Sara'(1970), featured Shirley MacLaine in the title role as Sister Sara. Generally in Clint Eastwood genre, female lead characters do not stand out, with a few exceptions like this movie, or 'The Bridges of Madison County' (1995) or the recent 'Million Dollar Baby' (2004). Of course, the 'Sister Sara' in the Two Mules for Sister Sara was no authentic nun, but a prostitute in the garb of a convent Sister, of a plot set in the Mexican back-county of 1860s.

Don't misunderstand me; I'm not equating Rajani Thiranagama for a prostitute, in the popularly understood meaning of that word. Now she is being touted as the Sri Lankan near-equivalent of Mother Teresa in some circles. I hate to sin, but the dictionary in my desk [Funk & Wagnalls Standard Dictionary, Signet Printing, New York, 1980, p.639] provides two definitions for the word 'prostitute'.

(1) A woman who offers her body for hire for purposes of sexual intercourse.

(2) One who sells his services for unworthy purposes.

> 'University Teachers for Human Rights (Jaffna)' has been exposed

What I refer by the word in this context, is the second definition. The little dirty 'secret' which had been hidden from the Tamils by the three Mules [Rajan Hoole, K.Sritharan and Daya Somasundaram] and Sister Rajani for over 15 years has come out in the open. The label they carried over their heads as 'University Teachers for Human Rights (Jaffna)' has been exposed by Kumar Rupesinghe, another Sri Lankan human rights activist, who was once a son-in-law of former prime minister Sirimavo Bandaranaike, and a brother-in-law of former President Chandrika Kumaratunga.

The duel of Susantha Goonatilake and Kumar Rupesinghe

I wonder how many had followed the acrimonius exchanges Kumar Rupesinghe had with globe-trotting Susantha Goonatilake, an anti-Tamil polemicist, in the Colombo Daily News last January. Presented below is the chronological record of this vituperative exchanges.

[1] Susantha Goonatilake: NGO, INGO moles. Daily News, Jan.9, 2006.

[2] Kumar Rupesinghe: Patriotism, the last refuge of a pseudo-patriot (Reply to Susantha Goonatilake). Daily News, Jan.11, 2006.

[3] Susantha Goonatilake: Have open conference on traitors Inc.? (Susantha Goonatilake's reply to Kumar Rupesinghe). Daily News, Jan.20, 2006.

[4] Susantha Goonatilake: Have open conference on traitors Inc.?-part 2 (Susantha Goonatilake's reply to Kumar Rupesinghe). Daily News, Jan.21, 2006.

[5] Kumar Rupesinghe: Patriotism: the last refuge of a pseudo-patriot. Daily News, Jan.27, 2006.

[6] Susantha Goonatilake: Janavegaya, International Alert and the coup in Sierra Leone. Daily News, Jan.27, 2006.

[7] Susantha Goonatilake: Janavegaya, International Alert and the coup in Sierra Leone – part II. Daily News, Jan.28, 2006.

[8] Kumar Rupesinghe: Response to outrageous allegation. Daily News, Jan.28, 2006.

From these eight documents, I quote excerpts below from two – one each for Susantha Goonatilake and Kumar Rupesinghe – in which mentions were made about this dubious body which sprouted with the name, University Teachers for Human Rights.

Details on the 'Dirty' Secret on the University Teachers for Human Rights

What amused me in reading the acrimonius volley of exchanges between Susantha Goonatilake and Kumar Rupesinghe was the information which got spilled about the role of Hema Goonatilake, the wife of Susantha Goonatilake, with the University Teachers for Human Rights. To quote,

Susantha Goonatilake: "…It is true that during the period 1987-90, I interacted with many students who had JVP sympathies – then as now the major student union was JVP oriented. Consequently, at the time many leaders of the present JVP who became ministers as well as younger members of the JHU (they were all in the same student union) did indeed interact with me. The major reason: my wife had been appointed by President Premadasa on a committee to monitor student disappearances. She was at the time Vice President of the Federation of University Teachers Associations as well as the founder Secretary of the national level UTHR (after she left Sri Lanka, only the Jaffna branch now remains). So we had a front seat view of what was happening then on human rights and reported them as it happened…" [Colombo Daily News, Jan.21, 2006]

> We get the dirty secret on the three Mules and Sister Rajani.

Kumar Rupesinghe: "…Amused am I at SG's [Susantha Goonatilake] defense of his involvement with the JVP 'to merely interacting with many JVP students during 1989-1990.' The main reason he specifies is that President Premadasa appointed his wife on a committee to monitor student disappearances. She was at the same time Vice President of the Federation of University Teachers Associations as well as the founder Secretary of the national level UTHR….Hema Gunatillake was the secretary of the University Teachers for Human Rights, a Front organization of the JVP and where this organization was affiliated to four other JVP bodies – National Students Centre, National Workers Action Centre, Patriotic Peoples Armed Troops and the Patriotic Peoples Movement.

They were known in Sinhala as Jathika Shishya Maddyasthanaya, Jathika Kamkaru Satan Maddyasthanaya, Deshapremi Sannadha Balakaya and the Deshapremi Janatha Viyaparaya. All these organizations were either headed or decision making was in the hands of the Kelaniya University students, and graduates. Dr.(Mrs) Gunatillake's position as a lecturer in the Sinhala Department made her association with the Kelaniya clique of the JVP very strong. I do not wish to go into the terror of 1989-1990. The JVP and other related organizations perpetrated killings on over six thousand people but the State terror against the JVP was beyond all proportion and massive in scale…The point I wish to make here is that SG [Susantha Goonatilake] and his family were one-sided in the reporting and biased in favour of the JVP. This is why they had to flee the wrath of the [then Premadasa] Government…" [Colombo Daily News, Jan.27, 2006]

The Concocted Truth

Now we get the dirty secret on the three Mules and Sister Rajani, from one of the principals. Anti-Tamil polemicist Susantha Goonatilake had asserted that his wife Hema was the "founder Secretary of the national level UTHR (after she left Sri Lanka, only the Jaffna branch now remains)". Kumar Rupesinghe has divulged the secrets that

(1) UTHR - and by extension UTHR(Jaffna branch) manned by the three Mules and Sister Rajani - were in fact, nothing but masked Fronts of the Sinhala racist JVP.

(2) This is the reason, why the then Premadasa Government targeted them viciously.

As far as Sister Rajani is concerned, there are convincing circumstantial evidences for Kumar Rupesinghe's expose on the human rights mask worn by the UTHR (Jaffna branch).

First, Sister Rajani's husband Dayapala Thiranagama was a JVP activist and during that period, he was on the run from the long arm of the law enforcement authorities.

Secondly, check the dates of assassination of Sister Rajani and her shadow-hero Rohana Wijeweera – the then JVP leader. Rajani Thiranagama was assassinated on September 21, 1989. Rohana Wijeweera was executed on November 13, 1989. Only 52 days separate the two deaths. Coincidence? No way. The long arm of the Sri Lankan law enforcement authorities were on trail of JVP activists and their crypto-sympathizers. Sister Rajani fell as an easy prey in Jaffna.

But what did the three Mules, especially Rajan Hoole - the media-voluble Mule - do after Sister Rajani's assassination? They passed the blame onto the LTTE, and stick to their guns on the concocted 'LTTE did it' hypothesis.

(to be Continued on next issue)



Contact our services for
- Shelving
- Chillers, Freezers
- Air Conditioning systems
- Shop Fitting
- Cold Rooms etc.,

உங்களின் அனைத்து குளிர்சாதன
உபகரணங்களின் தேவை
மற்றும் பழுதுபார்த்தல் போன்றவற்றிற்கு
நாடவேண்டிய ஒரே இடம்

RADIUS SERVICES LIMITED
Unit: 23-24 Resolution Way London SE8 4NT
Tel: 020 8692 0257 / 020 8694 2786

Stumbling Peace Talks

The events that are taking place after the Peace Talks were held in Geneva on the 22nd and the 23rd of February are casting a dark shadow on the possibility of the second round of the Talks that is expected to commence on the 21st of April 2006. There are several obstacles that have to be overcome if the Peace Talks were to be a reality.

The disturbing elements are:

The President's Counsel H.L.de Silva informing the press that the Cease Fire Agreement (CFA) was "Amended" has caused lot of irritation to the Liberation Tigers of Tamil Eelam (L.T.T.E.). Both the LTTE and the government representatives spent almost a whole day on the 22nd of February 2006 arguing for and against the amendment. The leader of the government group argued that the CFA was contradictory to the constitution of Sri Lanka. Hence the CFA has to be accordingly amended he said. But the leader of the LTTE delegation Anton Balasingam said that the constitution does not bind the Tamils as it was adopted in 1972 and again in 1978 by the Sinhalese and for the Sinhalese totally against the wish of the Tamils and if at all anything were to be amended then it should be the constitution and not the CFA. He also added that the Supreme Court too has accepted the CFA to be constitutional when the P-TOMS case came up before it. He further pointed out that the CFA was an agreement reached both by the Sri Lanka Government (SL Govt.) and the LTTE after months of legal consultations and deliberations. It is not between the LTTE and a political party.

Change of the party in power

Hence a change in the party in power in the government does not alter the validity of the CFA. It stands irrespective of any change in the government. Further there are two parties viz the Sri Lanka Government and the LTTE who are the signatories in the agreement. Hence the agreement cannot be amended unilaterally by one party. When the CFA was signed the legal experts including the former attorney general of the Sri Lanka Government involved in the drafting of the same did not find anything contradictory to the SL constitution. It was pointed out that the CFA cannot be amended in order to justify the rhetoric during the pre election period by Mahinda Rajapaksha, the Jathika Vimukthi Paramuna (JVP) and the Jathika Hela Urumaya (JHU). The joint statement released by the Sri Lanka Government and the LTTE after Talks ended on the 23rd of Feb.2006 categorically stated that the CFA is to be implemented in Toto. The main reason put forward by H.L.de Silva was that the subject of "Child Recruitment" discussed and accepted by both the parties and hence an amendment has taken place. But it has to be pointed out that since the signing of the CFA several agreements were reached and accepted by both the parties. But they did not amount to amending the CFA. For example the LTTE agreeing to give up the demand for an independent Eelam State for a Federal set up is not considered an amendment to the CFA. There were several such agreements reached during the six rounds of Talks that took place in 2003. It is very childish to say that the CFA was amended because there was an agreement on Child Recruitment. The LTTE has lodged a strong protest to the Norwegian government against the utterances of H.L.de Silva.

The SLFP, JVP and the JHU coalition came into power in 2004 when the CFA was already in existence. If the CFA was found to be unacceptable to them they could have abrogated it by simply giving the required 14 days notice. Instead they went round shouting at the top of their voices that the CFA was a sell out to the Tamils by the United National Party (UNP) that was in power then.

The UNP is now going round that stating that the present government has eventually accepted the CFA in its fullest. This is contradictory to the press statement released by H.L.de Silva. The UNP is making the maximum benefit of this in their local government election platforms.

The disarming of the Paramilitary Groups as agreed in the Geneva Talks is causing problems to the government. The Karuna group has already sent a press release that they would under no circumstances hand over their weapons. Even though they unilaterally declared a "cease fire" for a limited period of time yet they are going round on a killing spree in the East. The attack on the LTTE camp at Vavunativu killing of two LTTE cadre and the abduction of 5 members of the LTTE are striking examples.

The other Paramilitary groups too have not adhered to the agreement reached in Geneva. The atrocities, committed by the Eelam Peoples Democratic Front (EPDP) in the North in connivance with the army and navy particularly in the Islands, have increased. The EPDP cadre is seen going round totting their T-56 rifles openly on the roads.

The army and navy too are causing many problems to the people in the name of "stop & search" operations. They barge into the houses of people even during the middle of the nights and arrest people arbitrarily. The Tamil fishermen are prevented or harassed in many ways from fishing. But the Sinhalese fishermen are allowed to fish freely in the coastal areas of the Tamil Homeland. The people are virtually living in fear. Already thousands of people have either moved into the Tiger controlled areas or taken the boat or plane to India. Several people fear to tread into army controlled areas. When a person of the calibre of Kotagadeniya is put in charge of defense these are to be expected. Kotagadeniya a retired Deputy Inspector of Police (DIG) joined the JHU after his retirement and that speaks volumes of his mental attitude towards the Tamils. The message is loud and clear.

The country is called the Peoples Democratic Republic of Sri Lanka. But one does not have the right to stage a peaceful demonstration. Within the past three days two peaceful demonstrations conducted by the students were forcibly dispersed by the forces. People do not have the right to live in their own houses or cultivate their own fields as vast areas – over 30% in Jaffna -- are declared as High Security Zones (HSZ)

S.P.Thamilchelvan, who sounded understandably quite annoyed over the recent incidents that are taking place here told the press that he would be talking to the Leader Mr.V.Pirabakaran on his arrival in Kilinochchi and take suitable action. All these point out that the resumption of the Talks on the 19th of April is very doubtful unless the President shows some valour and put his house in order. But will he? Or the more pertinent question is "Can he"?

- K.Mylvaganam from Vanni

LTTE could gain from Tamil Nadu realignments

Tamil Nadu's close race for power might prove a mixed bag for Sri Lanka's Tamil Tiger guerrillas, rather than the windfall it could have been for the insurgent group outlawed in India.

The moves by the state's Marumalarchi Dravida Munnetra Kazhagam (MDMK) and the Dalit Panthers of India (DPI) to contest the May assembly elections with Tamil Nadu's ruling All India Anna Dravida Munnetra Kazhagam (AIADMK) may give the Tigers political access to Chief Minister Jayaram Jayalalitha if she retains power.

MDMK chief Vaiko is now in a dilemma as his party is a member of the Congress-led federal United Progressive Alliance (UPA) government. The Congress is a bitter foe of the AIADMK.

Analysts said if the UPA ousts the MDMK from the coalition for aligning with the AIADMK, it could be a setback for the Liberation Tigers of Tamil Eelam (LTTE) whose cause Vaiko advocated with Prime Minister Manmohan Singh.

At the same time, the Tigers will be aiming at a favourable political climate in Tamil Nadu, something they have lacked since they assassinated former prime minister Rajiv Gandhi in 1991.

Some gains are already visible.

The reason Jayalalitha chose not to meet Sri Lankan President Mahinda Rajapakse when he visited India in December was because she was already thinking of roping in the MDMK and others from the Dravida Munnetra Kazhagam (DMK)-led alliance. So she did not want to host a Sinhalese political leader.

Again, Jayalalitha did not put curbs on the pro-LTTE February 14 meeting in Tamil Nadu where Vaiko was one of the key speakers, although she would have done so if she did not feel the need for MDMK.

What are the AIADMK's - and Vaiko's – compulsions? Jayalalitha does not want to repeat the blunder of May 2004 when her party lost all 39 Lok Sabha seats of Tamil Nadu. Although the odds are in her favour in the upcoming polls, she wants to consolidate as many votes as possible. For this, rallying smaller groups on her side is crucial.

The 1991 killing of Gandhi cost the LTTE dearly. It lost public support in a state that is separated from Sri Lanka by only a narrow strip of sea and where it once had key bases. Indian authorities shattered layers and layers of the LTTE network in the state built painstakingly over the years.

Although some of the known pro-LTTE Tamil Nadu leaders continued to speak in its favour, their rhetoric fell sharply. Jayalalitha jailed Vaiko for 19 months in 2002-03 for supporting the Tigers; it was a major blow to the Tigers.

The latest developments have neutralised all that to an extent.

Pro-LTTE political activists from Tamil Nadu have in recent times been visiting rebel-controlled areas in Sri Lanka. DPI leader T Tirumavalavan has met LTTE chief Velupillai Prabhakaran.

The LTTE is upset by the stridently anti-Tigers remarks of US officials. While courting the European Union, whose travel curbs of September have irked it, the Tigers would use Tamil Nadu politicians to fire salvos at Washington - and to put pressure on New Delhi.

But if Vaiko gets thrown out of UPA, it would be a setback. Vaiko not only enjoyed a personal rapport with the prime minister, Singh had begun to pay attention to what the MDMK leader said on Sri Lanka matters.

In the opinion of one Indian official, if the AIADMK wins the elections and if Vaiko enjoys a close working relationship with Jayalalitha, the Tigers might slowly start laying support networks in Tamil Nadu in six months or so.

However, that would only happen if Jayalalitha wins and leans on Vaiko to govern.

If and when the LTTE decides to resume its war in Sri Lanka or get out of the Western-brokered peace process, Tamil Nadu's politicians will be expected to speak – in India and abroad – in favour of the Tigers.

– Indo-Asian News Service

SRI SANTHOSH LUXMY JOTHIDAM

PUNDIT LANKSHMANA SHASTRY
SPECIALIST ASTROLOGER

An expert pundit at Service, past present & future of your life. Will be read over to you from your numerology, prediction in Business, Education, Job, Love, marriage, Family problem, Sickness, Promotion, Removal of Enemy etc. We also provide you protection amenities. He learn Malayalam manthrigam. Tamil, Hindi, Malayalam, Telugu Languages.

AKILAN ENTERPRISES LTD

274 HIGH STREET NORTH, EAST HAM, LONDON E12 6SA
Mob: 07984 685 157

ஸ்ரீ சந்தோஷ் லட்சுமி ஜோதிடம்

பிரபல இந்திய ஜோதிடர் பண்டித் லக்ஸ்மண சாஸ்திரி அவர்கள் கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடப்பவை, மற்றும் நடக்கப் போகின்றவை பற்றி விபரமாகக் கூறுவார். தொழில் வியாபாரம், லட்சுமிகர வியபாமான பொருத்தம், விவாகப் பொருத்தம், கிரகப் பிரவேசம், வாகனப் பொருத்தம், பிள்ளைகளின் படிப்பு, பிள்ளைகளின் குடும்ப ஒற்றுமை, கணவன் மனைவி ஒற்றுமையின்மை, கோட்டு, வழக்கு, உடல்நலமின்மை, போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று சேர்த்தல், பரிகாரம் செய்தல், எல்லா நாட்களும் ஜோதிடம் பார்க்கப்படும். இவர் கேரள மலையாளம் மந்திரம் படித்தவர். சாந்தி பூஜை, லக்சுமி பூஜை செய்யப்படும். தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி மொழிகள்.

Opening Hours: 8.00 a.m - 9.00 p.m.

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
சேயோன் - திரு
சிறி - சுஜீத்

பொறுப்பாசிரியர்
- கோபி -

விளம்பரம்
கௌரி - பாலா

அச்சு
ஊர்மிளா

வடிவமைப்பு
jasmine studio

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி - ஹபீப்

இணையத்தள வடிவமைப்பு
ரஜீவன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
செல்வி - முருகானந்தன்

வழங்கல்
உதயகுமார்-கதிர்-கரன்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
020 8640 4604
020 8286 9327

தொலைநகல் (Fax)
020 8640 6972

ஆக்கங்கள் மற்றும்
அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி

Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3LJ
Surrey

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

சற்று மாறுதலுக்காக

இது உனக்குப் புரிகிறதா?

சேயோன்
(ஒரு பேப்பர்)

சென்ற இதழுக்கு முன்னர் வந்த ஒரு பேப்பரின் முகப்பை ஞாபகம் கொள்கிறீர்களா? காதலர் தினத்துக்காக இரண்டு குரங்குகளின் படத்தினைப் பிரசுரித்து 'தாடி வளர்த்தவருக்கும் தாவணி நனைத்தவருக்கும்' என்று அர்ப்பணித்தும் இருந்தோம். காதலர்களை குரங்குகள் என்று காட்டி விட்டதாக சிலருக்கு ஒரு பேப்பர் மீது தாளாத கோபம். ஒரு பேப்பரின் நடையும், தொனியும் எள்ளல் (Satire) தன்மையுடன் கூடியவை என்பதனைப் புரிந்தோருக்கு இது ஒரு பொருட்டல்ல. மற்றும்படி வேறொரு செய்தியும் அதனுள் உண்டு. காதலர் தினம் என்பதே நமது கலாசாரம் அல்ல. அதற்காக நாங்கள் அலட்டிக் கொள்ளவும் தேவையில்லை. இந்தக் காதலர் தினம் போன்றவைகள் வியாபார நிறுவனங்கள் தங்கள் வியாபாரத்தைப் பெருக்குவதற்காக செய்யப்படும் தந்திர வகையைச் சார்ந்தவை.

அதற்காக காதல் என்ற நுண்ணுணர்வுக்கே நாங்கள் எதிராளிகள் என்று யாரும் எடை போட வேண்டாம். காதல் என்பது சந்ததி பெருக்குவதற்கான ஓர் இரசாயன மாற்றம் என்று விஞ்ஞானம் விளக்கம் சொன்னாலும், அதனை நாங்கள் ஏற்றுக்கொண்டாலும் காதல் என்னும் இனிய, அழகிய அந்த நுண்ணுணர்வை நாம் போற்றுவோம்.

காதலினால் இன்பம் உண்டாம்
கலவி உண்டாம் களிப்பு உண்டாம்
ஆதலினால் காதல் செய்வீர்

என்ற பாரதியாரின் கூற்றும் எனக்கு மெத்த உடன்பாடு.

மேலும் ஒன்றையும் சொல்ல வேண்டும். ஒரு முறைதான் காதல் வரும் என்பதில் அடியேனுக்கு ஒருசொட்டும் உடன்பாடு கிடையாது. இன்னொன்றையும் மிக்க தயக்கத்துடன் தான் சொல்கின்றேன். அடிக்க வராதீர்கள் ஒரு சமயத்தில் ஒருவருடன் மாத்திரம்தான் காதல் வரும் என்பதனையும் என்னால் அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை.

வாழ்வில் மிக இனிய அற்புதமான தருணங்களை இந்தக் காதல் தந்துவிடுகிறது. வாழ்தலில் உயிர்ப்பு நேர்ந்து விடுகின்ற கணங்கள் அவை. காதல் என்னமாய் ஆளைக் கட்டிப்போடுகிறது. மனோகரமான காலம் அது. வாழ்ந்து பார்க்க வேண்டும் அந்த வசந்த வாழ்வை.

அந்த நாட்கள் அதிகம் சுகம் உண்டான நாட்கள். சொர்க்கமாக வாழ்வு கழிந்த நாட்கள். எத்தனை வீதிகள் சைக்கிள் உழக்கினோம். எத்தனை ஊருகள் உலாத்தித் திரிந்தோம். எத்தனை நாளுகள் அழுது கழித்தோம். இப்படி இன்னும் எத்தனை எத்தனை.

பெண்களின் வாழ்விலும் இத்தனை சுகம், இத்தனை துயரம் இருந்திருக்கும். பின்னால் பலர் திரிந்திருப்பர். பின்னலைப் பின்நின்று ஒருவன் இழுத்திருப்பான். வழிந்தவர் பலவாய் இருப்பர். வாழ்வே நீதான் என்றிருப்பர் சிலர். அவள் தம்பிக்கு 'சொக்கிளேற்' வாங்கிக் கொடுத்திருப்பான் ஒருவன். அவள் அண்ணனுக்கு கராத்தே தெரியும் என்றவுடன் கழன்றிருப்பான் இன்னொருவன்.

காதல் அற்புதமானது. அதில் ஆருக்கும் சந்தேகம் வரக்கூடுமோ?

எண்ணமோ விண்மிசை இருந்தது–நம்

இதயமோ காதலின் மீதே கவியும்

என்றார் நம்மூர் மகாகவி. காதல் அத்துணை இனிமை செய்தது. ஆனால் காதல் எது? என்பதுதான் இப்போது நம் கேள்வி.

காதல் என்பது 'ஒத்த அன்பினராய் ஒருவனும் ஒருத்தியும் தம்முள் எதிர்ப்பட்டு கூடும் கூட்டத்துள் பிறந்து இன்ன வகையானது, இன்ன தன்மையானது என்று சொல்ல முடியாது தோன்றும் ஓர் உணர்வு' என்று சங்க இலக்கியம் வரைவிலக்கணம் சொல்கின்றது.

காதல் இன்னவிதமாய் வரும், இன்ன வகையாய் வரும் என்று சொல்ல முடியாதுதான். எனினும் அவ்வளவுடன் நின்று விடுவதல்ல காதல். அதற்கும் அப்பால் வாழ்கிறது. காதல் இருவரிற்கும் இடையிலான பரஸ்பர புரிந்து கொள்ளலில் இருந்து எழுகிறது.

இருவருக்கும் இடையில் ஒத்த உணர்வு, விட்டுக் கொடுத்தல், புரிந்து கொள்ளல், விளங்கிக் கொள்ளல், ஒத்த அன்பு இவையே காதலை இன்னும் இறுக்கச் செய்யும்.

கண்டதும் காதல் என்பது தமிழ்த் திரைப்படங்களிலேயே நிகழச் சாத்தியம் உண்டு. உண்மையில் கண்டதும் காதல் என்றாலே அது காதல் அல்ல, காமம்! அது உடல் மீதான வேட்கையையே அவாவி நிற்கின்றது.

காதல் என்பதில் ஒத்த அன்பும், ஒருவரை ஒருவர் புரிதலும் நிச்சயம் இருக்கும். இருக்க வேண்டும். அதே சமயம் இன்னொன்றையும் வலியுறுத்துவேன் நான். நட்புடன், தோழமை உணர்வுடன் இருத்தல் அதிமுக்கியம். இக்கட்டான சந்தர்ப்பத்தில் சாய்ந்து கொள்ள ஒரு தோளாக இருக்கும் போதுதான் காதல் இயல்பாய் மலரும்.

ஒருவர் மீதான மற்றவரின் ஆதிக்கத்தின் பெயர் காதலே அல்ல. ஆதிக்கம் செலுத்தும் இடத்தில் காதல் காணாமலே போய்விடும். அன்புக்கு அங்கு இடமில்லை. அங்கு காதல் என்பது வெறும் அர்த்தமற்ற உடன்பாடாகத் தொங்கும். அங்கு ஆணவம், அகங்காரம், அகம்பாவம் அத்தனையும் விரியும்.

காதல் என்பது உன்னதமான வாழ்வு. உன்னதமான வார்த்தை. உன்னதமான கணம். எனக்காக ஒருத்தி காத்திருக்கிறாள், எனக்காக ஒருவன் பார்த்திருக்கிறான் என்பவையெல்லாம் எத்தனை சுகமான உணர்வுகள்.

ஆயினும் வேறொன்று: எனக்கானவன் எனக்காக மாத்திரம் காத்திருக்க வேண்டும் எனக்கானவளாக மாத்திரம் வாழ்ந்திருக்க வேண்டும் என்று நினைத்தாலும் அங்கும் ஆதிக்கமே தலையெடுக்கிறது. இது அன்பால் கொண்ட ஆதிக்கம். அவள் எனக்கே ஆனவள் என்கின்ற ஆதிக்கம். இது சந்தேகமல்ல. ஆயினும் இந்த ஆதிக்கமும் உறவில் நெருடலைத் தந்துவிடும்.

காதல் இதிலிருந்தும் தப்பவேண்டும். அக்காதலே அமரத்துவமான காதல். இதுவே காதல், இனிய காதல். இது உனக்குப் புரிகிறதா?

சி. புஸ்பராசா காலமானார்.

எழுபதுகளின் முற்பகுதியில் தமிழரசு கட்சியின் வாலிப முன்னணியிலும் பின்னர் தமிழ் இளைஞர் பேரவை போன்றவற்றுடனும் சேர்ந்தியங்கிய யாழ்ப்பாணம் மயிலிட்டியை சேர்ந்த சி.புஸ்பராசா இம்மாதம் பத்தாம் திகதி பாரிசில் மரணம் எய்தினார். ஈரல் புற்று நோயினால் பாதிக்கப் பட்டிருந்த அவருக்கு இறக்கும் போது வயது 54.

விடுதலை இயக்கங்கள் முகிழ்த்துக் கொள்ள முன்னர், தமிழ் தேசியத்தை வரித்துக் கொண்டு தீவிரமாக செயற்பட்ட இளைஞர்களில் ஒருவராக கருதப்பட்டவர் மயிலிட்டி புஸ்பராசா. சரியாக நெறிப்படுத்தப்பட்ட இயங்கு தளத்தில் அவர் செயற்பட்டதற்கான சான்றுகள் எதுவுமில்லா விடினும், தீவிரவாதியாக இனங் காணப்பட்டு சிங்கள அடக்கு முறை ஆட்சியாளர்களினால் சிறை பிடிக்கப்பட்டு நெடுநாட்களாக தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்தார். அக்காலகட்டத்தில் உதிரிக்குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட புலோலி கிராமிய வங்கி கொள்ளையிலும் இவருக்கு தொடர்பிருந்ததாக நம்பப்பட்டது. ஒரு தடவை இவரது சகோதரி புஸ்பராணியும் சிறையிலடைக்கப்பட்டு பொலிசாரின் சித்திர வதைக்கு உள்ளானார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற ஆசனங்களுக்கான போராட்டத்தில் விரக்தியுற்ற இளைஞர்கள், ஈழ விடுதலை அணி என்ற அமைப்பை உருவாக்கியபோது, வரதராசா, முத்துக் குமாரசாமி, இறைகுமாரன், அங்கயற் கண்ணி போன்றோருடன் புஸ்பராசாவும் சேர்ந்து கொண்டார். பின்னர் இவ்வியக்கம் செயலிழந்து போக, அவர் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் (ஈ.பி.ஆர்.எல்.எப்) இணைந்தார். இக்காலகட்டத்தில் அவர் எவ்விதமான போராட்டங்களில் ஈடுபட்டார் எனத் தெரியவில்லை. ஆனால் விடுதலைப் போராட்ட இயக்கங்களின் செயற்பாடுகள் தீவிரமுற்ற எண்பதுகளின் ஆரம்ப பகுதியில் தனிப்பட்ட வாழ்வை மேற்கொள்ளும் நோக்கில் பிரான்சில் தஞ்சமடைந்தார்.

அண்மைக் காலத்தில் ஒரு இலக்கியவாதியாக அறியப்பட்ட புஸ்பராசா, புலியெதிர்ப்பு ஆக்கங்களை உருவாக்கியுள்ளார். ஐரோப்பாவில் சோரம் போன இலக்கியவாதிகளால் நடாத்தப்படும் 'இலக்கிய சந்திப்பு' என்ற புலியெதிர்ப்பு கூட்டங்களை ஏற்பாடு செய்வதிலும் இவருக்கு பங்கிருந்தது.

சாவடைவதற்கு சில நாட்களுக்கு முன்பதாக தமிழ் நாட்டில் வைத்து ஆனந்த விகடனுக்கு வழங்கிய செவ்வியில் புஸ்பராசா இவ்வாறு கூறுகிறார் 'ஈழத்தில் ஆயுதப் போராட்டத்தைத் துவங்கி வைத்தவர்களில் நானும் ஒருவன் என்கிற முறையில் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஈழப் போராட்டத்தைப் பொறுத்தவரை இன்றைக்குப் புலிகள் யாராலும் வெல்ல முடியாத ராணுவமாக இருக்கிறார்கள். இனி வருங்காலத்தில் ஈழச் சமூகத்தின் மீதான பெரும் பொறுப்பு புலிகளின் மீது சுமத்தப்பட்டு இருக்கிறது. ஒற்றை அமைப்பாக ஈழ விடுதலையைச் சுமக்கும் புலிகள்தான் எதிர்காலத்தில் ஈழத்தில் அமைதியையும் சுதந்திரத்தையும் கொண்டு வர வேண்டும். கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்களில் இருந்து புலிகள் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.'

செவ்வியின் முடிவில் 'நாளை அமையவிருக்கும் தமிழ் ஈழத்தைக் காண நான் உயிரோடிருக்க மாட்டேன். நான் பிறந்த மண்ணே... நான் வாழ முடியாத மண்ணே... ஒரே ஒரு கேள்வி உன்னிடம்... வெடி மருந்து வீச்சமில்லாத உன் தெருக்களில் எம் பிள்ளைகள் நடக்கின்ற நாள் என்று வரும் எம் மண்ணே?' என்று முடித்துள்ளார்.

இந்த வார்த்தைகள் காலங் கடந்த ஞானம் என்று உதாசீனப்படுத்தப்படாமல், சாவின் விளிம்பில் நின்ற ஒருவன் யாரையும் திருப்திப் படுத்துவதற்கான நிர்ப்பந்தம் இல்லாத நிலையில் தனது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்திய சத்திய வாக்குமூலமாக கருதப்பட வேண்டும். சுயலாபங்களுக்காகவும், ஈகோவினாலும் தமிழ் தேசிய அமைப்பைக் கொச்சை படுத்துவோருக்கு சில உண்மைகளை விட்டு சென்றுள்ளார் புஸ்பராசா.

- எழுபரிதி

ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு!

சென்ற இதழில் திரு.உமா மகாலிங்கம் அவர்கள் எழுதிய 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற கட்டுரையை தொடர்பான எதிர்வினை.

Every action has its reaction (ஒரு செயலினால் ஏற்படும் இன்னுமொரு விளைவு - நேர்விளைவு அல்லது எதிர்விளைவு) என்ற இயற்கை விதியை இலங்கைத் தீவின் அரசியல் வரலாற்றில் பிரயோகித்து, இந்த விதி எவ்வளவு சரியானது என்பதை மிகத்தெளிவாக கூறியுள்ளார். இலங்கை அரசாங்கங்களின் பேரினவாத போக்கில் மாற்ற மில்லையெனில் இயற்கையின் இந்த விதிப்படி சிறுபான்மை தமிழருக்கிருக்கும் பிரிந்து செல்லும் உரிமை அதன் இறுதி வடிவத்தைப் பெறும், ஈற்றில் வெற்றியும் பெறும் என திரு.மகாலிங்கம் கூறிய கூற்றில் எதுவித சந்தேகமுமில்லை.

ஒட்டுக்குழுக்கள் தமது இனத்துக்கு துரோகம் செய்யும் வகையில் செயற்படுவது இறுதியில் அவர்களின் அழிவோடு நின்றுவிடாமல் முழு தமிழினத்தின் இருப்பையும் கேள்விக்குறியாக்கி விடும் என்ற அவரது கூற்றிலும் எந்த தப்பும் இல்லை.

இருப்பினும், 'சமயத்தால் வேறுபட்டிருந்தாலும், பேசும் மொழியாலும், செய்யும் தொழிலாலும் முஸ்லிம் மக்கள் தமிழர்களாகவே ஒன்றிணைந்து... என்று தொடங்கி... 'இஸ்லாமிய இனம்' தமக்கு தனித்தரப்பு அந்தஸ்து அவசியமென வேண்டுகோள் விடுப்பது 'வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழியை உடைத்த கதைபோல் ஆகிவிடாது எச்சரிக்கையாக இருப்பீர்கள் என நம்புவோம்' என இலங்கை முஸ்லிம்களுக்கு வேண்டுகோள் விட்டுள்ளார்.

இலங்கைத்தீவின் சிறுபான்மை இனங்கள் பேரினவாத அரசாங்கங்களினால் 'அடிமைப் பிரஜை'கள் என்ற நிலைநோக்கிகொண்டுசெல்லப் படுகின்றனர் என்பது இரகசியமான விடயமென்றில்லை. இருப்பினும் பெரிய 'சிறுபான்மை' இனமான தமிழினம் சிறிய 'சிறுபான்மை' இனமொன்றை அதற்குரிய நியாயமான உரிமைகளுடன் வாழ வழிசமைக்கின்றதா? என்பது இயற்கையாக எழும் கேள்வி.

திரு.மகாலிங்கம் அவர்கள் 'இஸ்லாமிய இனம்' என்று தெரிந்தோ, தெரியாமலோ பதப் பிரயோகம் ஒன்றைச் செய்துள்ளார். ஒருவேளை இலங்கை பல்லினங்கள் வாழும் நாடு, சிங்களவர், தமிழர் போன்று இன்னும் ஒன்றோ இரண்டோ இனங்கள் உள்ளன என்பதை ஏற்றுக்கொண்டு அப்படிச் சொல்லியிருந்திருந்தால் அவரின் பதப்பிரயோகத்தில் உள்ள பிழையை சரி செய்து கொள்ளலாம். ஆனால் இன்று இலங்கையின் இனப்பிரச்சினையில் தமிழினத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலைப் புலிகள் இலங்கையில் சிங்களவர், தமிழர் என்ற இரண்டு பிரதான இனங்களைத் தவிர மற்றவர்களை தனித்தனி இனங்களாக ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை 'தமிழ் பேசும் இஸ்லாமியர்', அல்லது 'முஸ்லிம்-கலாச்சார குழு' என்ற ரீதியிலேயே இலங்கையின் தமிழருக்கு அடுத்த சிறுபான்மை இனமான இலங்கை சோனகரை (Sri Lankan Moors) வரையறை செய்கின்றனர்.

எனவே, மதத்தால் இஸ்லாமியர்களாகக் காணப்படுவோரில் 99% மானோர் இனத்தால் 'இலங்கை சோனகர்' (மிகுதி முஸ்லிம்கள் மலேய் இனத்தவர்) என்ற அவர்களின் இனத்துவம் விடுதலைப் புலிகளால் பகிரங்கமாக ஏற்றுக் கொள்ளப்படும்போது அதை ஒட்டி எழும் இதர கேள்விகளுக்கான விடைகளை மிக இலகுவாகக் கண்டுவிடலாம்.

கேள்வி ஒன்று: இலங்கை சோனகர்களுக்கு இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுக்களில் கலந்து கொள்ள 'தனித்தரப்பு' என்ற அங்கீகாரம் வழங்கப்பட வேண்டுமா?

'ஆம்', ஏனெனில் தமிழினம் சிங்கள பேரினவாத அரசாங்கங்களினால் எப்படி ஏமாற்றப்பட்டனரோ, எப்படி படிப்படியாக அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டதோ, எப்படி அவர்கள் 'அடிமை பிரஜை'கள் என்ற ஒரு நிலைக்கு கொண்டு செல்லப்படுகின்றனரோ அதே வகையான ஆபத்தொன்று தமக்கிருப்பதை, அதுவும் வடக்கு-கிழக்கு ஒன்றிணைக்கப்பட்ட தமிழீழத்தில் தமக்குண்டு என்பதை எப்போதோ சோனகர் அறிந்து கொண்டனர். இதை அண்மைக்கால நிகழ்வுகள் நியாயப் படுத்தியுள்ளன.

1) 1990ல் சோனகர் வடக்கு, வடமேற்கு, வடகிழக்கு பகுதிகளிலிருந்து 24 மணி நேரத்திற்குள் வெளியேற்றப்பட்டமை.

2) முஸ்லிம்கள் முதலில் ஒன்றுபடுங்கள், பிற்பாடு தனித்தரப்பு பற்றி யோசிக்கலாம் என்று தாய்லாந்து பேச்சுவார்த்தையின் போது திரு. அன்ரன் பாலசிங்கம் கூறி அவர்களை தனித்தரப்பாக ஏற்க மறுத்தது.

3) விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைவில் (ISGA), உத்தேச தமிழீழத்தின் பிரஜைகளாக வரவிருக்கும் இலங்கை சோனகருக்கு இடமளித்தல் பற்றி எந்த ஏற்பாடும் பொதுமக்கள் பார்வைக்கு முன்வைக்காமை.

4) சுனாமிக்குப் பின்னால் மீள்கட்டுமான அமைப்பில் (P-TOMS) முஸ்லிம்களும் இடம்பெற வேண்டுமாயின், அவர்கள் இலங்கை அரசுடன் கதைத்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்ற திரு.தமிழ்ச்செல்வனின் கூற்று.

இப்படி 2004ல் இருந்து பின்நோக்கி 1948 வரை தமிழர்-சோனகர் இனங்களுக்கிடையே காலத்துக்குக் காலம் புரிந்துணர்வில் பாதிப்புக்கள் ஏற்பட்டதை யாரும் மறுத்திடர். நடந்து முடிந்த அனைத்து சம்பவங்களையும் கிண்டிக் கிளறுவதல்ல எமது நோக்கம். மாறாக கடந்தகால நிகழ்வுகளிலிருந்து இரண்டு இனங்களும் படிப்பினை பெறவேண்டும் என்பதற்கான சிறு முயற்சி அவ்வளவுதான்.

திரு.மகாலிங்கம் அவர்கள் தனது கட்டுரையிலே போர்த்துக்கேயரால் விரட்டப்பட்ட சோனகரை கிழக்கிலங்கை தமிழர் அரவணைத்தனர் என்றும், சுல்தான் என்ற ஒருவரை யாழ் தமிழர் தமது மாநகரபிதா (Mayor) ஆக்கி கௌரவப் படுத்தினர் என்றும் கூறி, ஒரு நன்றிக்கடன் மாதிரியான எதிர்பார்ப்பில் தமிழரும் சோனகரும் சேர்ந்திருக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினார்.

இதே விதமான நன்றிக் கடனை பெரும்பான்மை சிங்கள இனம் எம்மிடம் எதிர்பார்த்து நீண்டதொரு பட்டியலை எம் கையில் திணித்தால் நாம் என்ன செய்வது? அதாவது சுதந்திர இலங்கையின் முதல் சபாநாயகர் H.S.இஸ்மாயில், டட்லி அரசாங்கத்தில் தொழில் அமைச்சராகவும், பின்னைய ஐ.தே.க. அரசாங்கத்தில் நிதி அமைச்சராகவும் இருந்த M.H.M.நெய்னாமரிக்கார். ஐ.தே.கட்சி அரசாங்கங்களில் வெளியுறவு அமைச்சராக இருந்த A.C.S.A.ஹமீது, சிறிமாவோ அரசாங்கத்தில் கல்வி அமைச்சராக இருந்த பதியுதீன் முஹம்மத், இப்படிப் பட்டியல் நீண்டு செல்கிறது. இவர்கள் சிங்கள வாக்காளர்களை பெரும்பான்மையாகக் கொண்ட தொகுதிகளிலிருந்து தெரிவாகி பாராளுமன்றம் சென்றவர்கள்.

இதேபோலவே 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணியுடன் இணைந்து நான்கு தொகுதிகளில் (புத்தளம், மூதூர், சம்மாந்துறை, கல்முனை) தமிழர் சுயநிர்ணய உரிமை கோட்பாட்டின் அடித்தளத்தில் இருந்து த.வி.கூ. வை ஏற்றுக்கொண்டு அவர்களுடன் கூட்டிணைந்து தேர்தல் களத்தில் இறங்கினர் இலங்கை சோனகர். எனவே இத்தகைய செயற்பாடுகள் எல்லாம் ஒரு ஜனநாயக ஏற்பாடுகளில் நம்பிக்கையுள்ள ஒரு நாட்டின் பிரஜைகள் யாராக இருப்பினும் அவர்களின் உரிமைகளை அங்கீகரிக்கும் சாதாரண நடவடிக்கைகளே தவிர இவற்றுக்கு புதிய விளக்கங்கள் எதுவும் கற்பிக்க முடியாது.

மேலும் திரு.மகாலிங்கம் அவதானிக்கத் தவறிய விடயம் அவர் குறிப்பிடும் போர்த்துக்கேயர். இவர்கள் இலங்கையை கைப்பற்றி ஆண்ட காலப்பகுதி 1505ல் இருந்து 1676. இக்காலப் பகுதியில் இலங்கைச் சோனகர் எப்பகுதியில் இருந்து கிழக்கிலங்கைக்கு அல்லது தென் தமிழீழத்திற்கு ஏன் . வெளியேற்றப்பட்டனர் என்பதே. ஏனெனில் போர்த்துக்கேயர் வருகைக்கு முன்பே அதாவது கி.பி.7ம் நூற்றாண்டிலிருந்தே மன்னார்-குதிரைமலைப் பகுதி தொடக்கம் வில்பத்து, காரைதீவு, கற்பிட்டி, புத்தளம் ஊடாக சிலாபம்-கொழும்பு உள்ளடக்கி தெற்கில் காலி தென்கிழக்கு மூலையில் கிரிந்த வரையான கடற்கரை ஒட்டிய பிரதேசங்களில் சோனகர் வாழ்ந்தனர். மேலும் புத்தளத்தில் இருந்து அக்குறனை ஊடாக கண்டி நகர்வரை சோனகர் கிராமங்கள் இன்றும் காணப்படுகின்றன. இதை விடவும் குதிரைமலைப் பிரதேசத்து அருவி ஆற்றுக்கும் சிலாபம் நகரில் பாய்ந்து செல்லும் மாயன் ஆறு (மகாஓயா) க்கும் இடைப்பட்ட பிரதேசம் 'சோனகம்' என்று தமிழ்நாட்டின் நெல்லை மாவட்ட கல்வெட்டு கூறுவதாகவும், சோழ மன்னனால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் 'சோனகம்' என்று ஈழத்துடன் சேர்க்காமல் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதும் வரலாறு. ஆக போர்த்துக்கேயரால் வெளியேற்றப்பட்ட சோனகர் இத்தனை இடங்கள் தாண்டி ஏன் கிழக்கே சென்றனர் என்பதும் ஒரு கேள்வி? அது அப்படித்தான் எனில் அவர்கள் வெளியேற்றம் பிழையான ஒரு செயல் என்ற ரீதியிலேயே அன்று நல்லிதயம் கொண்ட தமிழர் புகலிடம் கொடுத்திருக்க வேண்டும்.

மேலும் எனது நேரடி அனுபவத்துடன் சம்பந்தப்பட்ட விடயம். 1983ன் தமிழருக்கெதிரான இனக் கலவரத்தின்போது கொழும்பில் இருந்து தப்பியோடி வந்த அனேகமாக வடபகுதி லொறிகள் புத்தளம் நகருக்குள் பாதுகாப்புக்காக கொண்டு வரப்பட்டன. புத்தளத்து சோனக இளைஞர்கள் இரவிரவாக பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு, தமிழருக்கு ஆபத்து வராதவாறு அவர்களை சிங்கள இனவாத காடையர்களிடம் இருந்து காப்பாற்றினர், பாதுகாத்தனர் என்பதற்காக அவர்கள் இன்னும் தமிழர்களிடமிருந்து நன்றிக் கடன் எதிர்பார்த்திருக்கவில்லை.

சிங்கள பேரினவாத அரசாங்கங்கள் சிறுபான்மை தமிழினத்தின் விடயத்தில் எவ்வளவு மிலேச்சத்தனமாக நடந்துகொள்கின்றனரோ அதேவிதமான நடத்தையை சோனகர் தமிழினத்திடமிருந்து வருவதை ஏற்கமறுக்கின்றனர். அதன் வலுவான வெளிப்பாடே கிழக்கில் சோனகருக்கான 'தனியான நிர்வாக அலகு' கோரிக்கை. இதை நாம் இலங்கை அரசிடம் கேட்கவில்லை. ஏனெனில் இப்பிரதேசம் ஒன்றிணைக்கப்படும் வடக்கு-கிழக்கு ஆட்சிப் பிரதேசத்தில் வரவிருக்கும் நிலப்பரப்பு. ஆகவே இந்த 'தனி அலகு' கோரிக்கை இப்போதைக்கு விடுதலைப் புலிகளிடமும் தமிழீழம் என்ற ஒரு தனி ஆட்சி அதிகாரப்பகுதி அமையுமானால் அப்போது அங்கே ஆட்சிக்கு வரவிருக்கும் தமிழ் அரசாங்கத்திடம் முன்வைக்கப்படும் நியாயமான கோரிக்கை.

கேள்வி இரண்டு: கிழக்கில் 'தனியான ஆட்சி அலகு' என்பதுதான் இலங்கை சோனகரின் இறுதி அரசியல் அபிலாசையா? இதற்கு எனது தனிப்பட்ட விடை இல்லை என்பதே. ஏனெனில், தமிழீழப் பகுதிக்குள் வரவிருக்கும் வாழப்போகும் சோனகரின் பாதுகாப்பும் அவர்களின் ஜனநாயக ரீதியிலான உரிமைகளும் செயலுருவிலான உத்தரவாதம் பெறும்போது சோனகர் தமது 'தனி ஆட்சி அலகு' என்ற இப்போதைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்வர்.

கேள்வி மூன்று: 'செயலுருவிலான உத்தரவாதம்' என்றால் என்ன?

செயலுருவிலான உத்தரவாதத்தின் முதல்படி, 'இலங்கை சோனகர்' அவர்கள் தனியானதொரு இனம் என்பதை விடுதலைப்புலிகள் முதலில் அங்கீகரிக்க வேண்டும். இரண்டாம்படி இனப்பிரச்சினை தீர்வுக்கான நேரடிப் பேச்சுக்கள் நடாத்தப்படும் காலம் வரும்வரை அதாவது சண்டை நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் இலங்கை சோனகரை தனித்தரப்பாக ஆகக் குறைந்தது 'பார்வையாளர்' நிலையிலேனும் பங்குபற்ற அனுமதித்தல். அடுத்தபடியாக இறுதிக் கட்ட தீர்வு பேச்சுக்களில் முழு அங்கீகாரத்துடனான தனித்தரப்பாக கலந்துகொள்ள அனுமதித்தல்.

இதைத் தொடர்ந்து இடைக்கால தன்னாட்சி நிர்வாக சபை அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும் வரை கொள்கையளவிலாவது சோனகருக்கு இத்தனை விகிதாசாரம் பிரதிநிதித்துவம் என்பதை வெளிப்படையாக அறிவித்தல்.

சோனகர் செறிந்து வாழும் இடங்களின் மீள்கட்டுமான அமைப்பில் அவர்களுக்கு நியாயமான அளவு தன்னிச்சையாக இயங்கும் அதிகாரத்தை வழங்க வசதிகள் செய்யப்படுதல்.

மேற்சொன்னவைகள் நடைமுறைப்படுத்தத் தவறும் பட்சத்தில் ஒன்றுபடுதல் என்பது கேள்விக்குறியே. இது வேதனைக்குரிய விடயம் என்றாலும் மறுதலிக்க முடியாத உண்மை என்பதோடு இது அனைவருக்கும் தீங்காகும் என்பதையும் நாம் மறுத்தலாகாது.

- *முஹம்மட் எஸ்.ஆர்.நிஸ்தார்*

என்றும் இவர்க்கினி
எடுபிடி செய்து நாம்
உண்டு களித்திட
மாட்டோம்.

வோல்த்தம்ஸ்ரோ

திருவருள் மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்

2-4 Bedford London E17 4PX Tel: 020 8527 3819

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது பழமொழி. ஆனால் ஆலயம் அமைப்பது சாலவும் இலகு என்ற கருத்து மேற்கு நாடுகளில் ஆழமாக பரவி பல ஆலயங்கள் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமாக சந்திக்கு சந்தி கட்டப்பட்டுள்ளன. இக்கால கட்டத்தில் வோல்த்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயம் 02.09.2006 மகா கும்பாபிஷேகத்துடன் ஆரம்பிக்கப்பட்டு ஆன்மீக வளர்ச்சியுடன் சமூக வளர்ச்சிகள் பல கண்டு வளர்ந்துவருகிறது. வாஸ்து சாஸ்திர முறைப்படி கட்டப்பட்ட

எமது ஆலயத்தின் கும்பாபிஷேகம் காலஞ் சென்ற டாக்டர் சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

ஆன்மீக சமூக வளர்ச்சியே குறிக்கோளாக வைத்து ஆரம்பிக்கப்பட்டு வாஸ்து சாஸ்திர முறைப்படி உருவாக்கப்பட்டதினால் கற்பக வினாயகர் ஆலயம் கிழக்கு லண்டனில் ஓர் ஒளிவிளக்காக திகழ்கிறது

ஆலய விசேட வழிபாடுகள்

செவ்வாய்க்கிழமை	காலை, நண்பகல், இரவு - காயத்திரி மந்திர ஜபம்
	மாலை சகஸ்ரநாம அர்ச்சனை
வெள்ளிக்கிழமை	தமிழில் போற்றி வழிபாடு
	நண்பகல் பூசையைத் தொடர்ந்து விநாயகர் அகவல் பாராயணம்

விநாயகர் ஆலய திருவிழாக்களின் சிறப்பு அம்சங்கள்

இந்தியாவின் தன்னிகரற்ற சொற்பொழிவாளர்கள் திரு.சுகி சிவம், இரா செல்வ கணபதி, திரு. நாதைமுகுந்தன், இலங்கையின் புகழ்வாய்ந்த திரு.ஜெயராஜ், தமிழருவி சிவகுமார் எமது ஆலய திருவிழாக்களில் சொற்பொழிவாற்றினார்கள். விநாயகர், முருகன், அம்பாள் கடந்த இரண்டு வருடங்களாக மூன்று தேர்களில் திருவீதிவலம் காட்சி கற்பக விநாயகர் ஆலயத்தில் மாத்திரமே காணக்கூடியதாக இருந்தது. கடந்த வருடம் முதன்முறையாக ஒரு அடியார் எமது ஆலயத்தில் பறவைக் காவடி எடுத்து தனது நேர்த்திக்கடனை நிறைவேற்றினார்.

ஆலயத்தின் சமூக பணிகள்

கற்பக விநாயகர் குறுகிய காலத்தில் தோன்றினாலும் சமூகப் பணிகளில் முன்னோடியாக விளங்குகிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக சனிக்கிழமை காலை யோகாசன வகுப்புகளும், செவ்வாய்க்கிழமையில் முதியோர் ஒன்றுகூடலும் தொடர்ந்து நடைபெறுகிறது.

கடந்த மூன்று வருடங்களாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் திருநாவுக்கரசு குருகுலத்தில் 32 அநாதை சிறார்களை பராமரித்து வருகிறது. சுனாமி அனர்த்த வேளையில் பணம், மருந்து முதலியன நாட்டிற்கு அனுப்பிய முதல்தர ஆலயங்களில் ஒன்றாக விளங்கியது.
கடந்த நான்கு ஆண்டுகளாக வருடப்பிறப்பு, தேர்த்திருவிழா போன்ற விசேட நாட்களில் பக்தர்களிடம் பெற்ற காணிக்கை வெண்புறாத் திட்டத்திற்கு கையளிக்கப்பட்டது.

அண்மையில் கேணல் கிட்டுவின் ஞாபகார்த்தமாக ஈழத்தமிழ் தேசிய விளையாட்டு கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிக்கு தேசிய விளையாட்டு கழக துணைத்தலைவர் இன்பனிடம் £2000 பவுண்கள் கையளிக்கப்பட்டது.

புதிய திட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 50 அறைகள் கொண்ட முதியோர் இல்லம் அமைக்கும் முயற்சியை கற்பக விநாயகர் ஏற்றுள்ளது. இம்முயற்சிக்கு பக்தர்களின் உதவிக்கரம் வேண்டும்.

ஓர் பிரசித்தி பெற்ற ஆலயம் பராமரித்து வந்த அநாதை சிறார்களை கைவிடும் பட்சத்தில் அத்தனை சிறார்களையும் கற்பக விநாயகர் ஆலயம் பொறுப்பேற்க உத்தேசித்துள்ளது.

கற்பக விநாயகர் ஆலய நிர்வாகம் சில நண்பர்களுடன் சேர்ந்து விஷேட தினங்கள் எல்லாக் கோவில்களிலும் ஒரே நாளில் கொண்டாடப்படவேண்டும் என்ற முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இம்முயற்சியில் நிச்சயமாக வெற்றிகண்டு இந்நாட்டு இந்து மக்களின் குறிப்பாக இளம் சமுதாயத்தின் இக்குழப்பத்தை விரைவில் தீர்த்து வைப்போம்.

வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலய 2006ம் ஆண்டுக்கான
வசந்த நவராத்திரி விழா விபரம் - அலங்காரத் திருவிழா

(29.03.2006 புதன் தொடக்கம் 08.04.2006 சனிக்கிழமை வரை)

காலை 10.30 மணிக்கு ராஜராஜேஸ்வரி அம்மன் அபிஷேக ஆராதனைகளும்

மாலை 5.30 மணிக்கு மீனாட்சி அம்மன் அபிஷேகம் தொடர்ந்து விசேட பூசை இரவு (7.30 மணி முதல் 8.30 மணி வரை) ஞாயிறு

இந்திய பிரபல சொற்பொழிவாளர் பி.மணிகண்டன் அவர்களது ஆன்மீகச் சிந்தனைகள்

8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று அம்பாள் பல்வேறு சாக்த தரிசனக் காட்சியாக வீதி உலாவருவார்.

06.04.06 வியாழன் தேர்த்திருவிழா

இரவு 8 மணியளவில் அம்பாள் ஆலயத்தைச் சூழவுள்ள வெளிப்பாதையால் திருவீதி உலா வருவார்.

அடியார்கள் அனைவரும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

சேர்பிய இனவாதியின் மரணமும் தென்னிலங்கை இனவாதிகளும்.

அருஷ்
(வேல்சிலிருந்து)



முன்னை நாள் யுகோஸ்லாவாக்கியா அரசுத் தலைவர் மிலோசவிக் 11. 03. 2006 அன்று நெதர்லாந்தில் உள்ள ஐக்கிய நாட்டு தடுப்புச் சிறையில் மர்மமான முறையில் மரணமடைந்தார். மரணமடைவதற்கு முன் தனக்கு நஞ்சு ஊட்டப்படலாம் என தனது வழக்கறிஞரிடம் தெரிவித்து இருந்த நிலையில் மரணம் சம்பவித்துள்ளது. யார் இந்த மிலோசவிக்? தன்னை ஒரு பொதுவுடமை வாதியாக வெளிப்படுத்தி பின் இனவாதியாகிய தால் உலக வரைபடத்தில் இருந்து யுகோஸ்லா வாக்கியா என்ற பெயரை அழித்த பெருமைக் குரியவர். ஆரம்பத்தில் யுகோஸ்லாவாக்கியா ஆறு குடியரசுகளையும் (குரோசியா, மசடோனியா, மொன்ரெநெறா, சேர்பியா, ஸ்லோவேனியா), இரு சுயாட்சியையுடைய மாகாணங்களையும் (வோயோடினா, கோசோவா) கொண்டதாக இருந்தது. இரண்டாம் உலகப் போருக்கப் பின்னர் சோவியத்தின் அனுசரணையுடன் ஆட்சியை கைப்பற்றிய மார்ஷல் ரீரோ 1963 இல் அரசுத் தலைவரானார்.

மத்திய அரசினால் மாநிலங்களுக்கு மேலதிக சுயாட்சியாக அதிகாரங்கள் வழங்கப்பட்டதுடன், ஒவ்வொரு மாநிலமும் சொந்தமாக கல்வித்துறை, நீதித்துறை, காவல்துறை, மாநில சபைகள் அரசுத்தலைவர், பிரதமர் என்பவற்றை கொண்டிருந்தன. 1970 இல் குரோசியாவில் மேலதிக அதிகாரங்களை கோரி ஏற்பட்ட மாணவர் எழுச்சியை அடுத்து 1974 இல் மத்திய அரசினால் ஒவ்வொரு மாநிலத்திற்கும் சுயாட்சி அதிகாரம் வழங்கப்பட்டது. இதுவே பின்னர் இலகுவாக பிரிந்து செல்ல உதவியது. 1980 இல் மார்ஷல் ரீரோ வின் மறைவை தொடர்ந்து இனங்களுக்கிடையான பிரிவினை அதிகரித்தது. சேபியர்களின் இனவாதத்திற்கு எதிராக கோசோவாவில் அல்பேனியர்கள் ஆர்ப்பாட்டத்தை தொடங்கினார்கள் இக்காலப் பகுதியில் தான் 1989 இல் சேர்பியாவின் தலைவரானார் மிலோசவிக், அக்காலப் பகுதியில் யுகோஸ்லாவாக்கியாவின் வலிமை மிக்க மனிதர் என சேபியர்களால் பேசப்பட்டார். மிலோசவிக் பதவிக்கு வந்ததும் மற்றய குடியரசுகளில் உள்ள சேபியர்களை ஒன்றினைத்து சேர்பியப் பேரரசை உருவாக்க முனைந்தார் ஆனால் அதுவே யுகோஸ்லாவாக்கியாவின் முடிவுக்கு வழிவகுத்தது.

1991 இல் ஸ்லோவேனியாவின் சுதந்திர அறிவிப்பை அடுத்து யுகோஸ்லாவாக்கியா மக்கள் படையுடன் ஏற்பட்ட மோதல் 10 நாட்களில் முடிவுக்கு வந்ததுடன் ஸ்லோவேனியா யுகோஸ்லாவாக்கியாவில் இருந்து பிரிந்து சென்றது. இருதரப்பிலும் 65 பேர் கொல்லப்பட்டார்கள். இதே ஆண்டில் குரோசியாவின் பாராளுமன்றம் பிரிந்து செல்வதற்கான வாக்கெடுப்பில் வெற்றியடைந்ததுடன் தனது முடிவை அறிவித்தது. ஏற்கனவே மூன்றில் ஒரு பகுதியை ஆக்கிரமித்திருந்த சேர்பியப் படைகளுடனும் யுகோஸ்லாவாக்கியா மக்கள் படையுடனும் ஏற்பட்ட 6 மாத மோதல்களின் பின் ஐக்கிய நாட்டினால் ஏற்படுத்தப்பட்ட யுத்தநிறுத்தம் போரை முடிவுக்கு கொண்டு வந்ததுடன் ஆக்கிரமிப்புப் படைகளும் வெளியேற்றப்பட்டன.

> *யுகோஸ்லாவாக்கியா - சேர்பியப் படைகளிடையே 1992 இல் ஏற்பட்ட மோதல் 3 ஆண்டுகள் நீடித்தது 2 லட்சம் பேர் கொல்லப்பட்டதுடன் 20 லட்சம் மக்கள் அகதிகளாகினர்.*

மிலோசவிகின் இனவாதப் போக்கு பிரிவினையைத் தூண்டியதுடன், யுகோஸ்லாவாக்கியாவின் ஆக்கிரமிப்பு போருக்கும் வழிவகுத்தது. யுகோஸ்லாவாக்கியாவின் வீழ்சியினாலும், பனிப்போரின் முடிவினாலும் ஏற்பட்ட அரசியல் பொருளாதார நெருக்கடிகள் பொஸ்னியன் போரை ஏற்படுத்தியது. பொஸ்னியன் படைகளுக்கும் ஆக்கிரமித்த யுகோஸ்லாவாக்கியா மற்றும் சேர்பியப் படைகளுக்கும் 1992 இல் ஏற்பட்டமோதல் 3 ஆண்டுகள் நீடித்தது 2 லட்சம் பேர் கொல்லப்பட்டதுடன் 20 லட்சம் மக்கள் அகதிகளாகினர். நேட்டோவின் தலையீட்டுடன் பிரானஸ்சில் மேற்கொள்ளப்பட்ட அமைதி ஒப்பந்தம் மோதலை முடிவுக்கு கொண்டு வந்தது.

மேற்கூறப்பட்ட அனைத்து சமாதான நடவடிக்கைகளிலும் பெரும்பான்மை அல்பேனியரைக் கொண்ட கோசோவாவின் நிலமையை ஒருவரும் கவனத்தில் எடுக்கவில்லை. ஆனால் கோசோவா சேர்பியர் ஆக்கிரமிப்பில் இருந்து தன்னை விடுவிப்பதற்காக கெரில்லா போரை 1996 இல் தொடங்கியது. இன்னிலையில் 1997 இல் மிலோசவிக் யுகோஸ்லாவாக்கியாவின் தலைவரானார். பேரழிவுகளுடன் 3 வருடங்கள் நிகழ்ந்த போர் நேட்டோ படையினரின் 3 மாத படை நடவடிக்கையுடன் முடிவுக்கு வந்தது. 1 லட்சம் அல்பேனியர்கள் கொல்லப்பட்டதுடன் 5 லட்சம் பேர் காணமல் போனர்கள். பல்கன் போர் (யுகோஸ்லாவாக்கியா பல்கன் வளைகுடாவில் அமைந்துள்ள படியால் இந்தப் பெயர்) முடிவுக்கு வந்ததுடன் இப்போருக்கு காரணமாக அமைந்தவரும் லட்சக்கணக்காண மக்களின் படுகொலைக்கு காரணமான மிலோசவிகும் அவரை சார்ந்தவர்களும் 2001 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டு போரை தூண்டியது, சட்டத்தை மீறியமை, லட்சக்கணக்கண மக்களை கொன்றமை போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார்கள்.

> *சேபியர்களின் இனவாதத்திற்கு எதிராக கோசோவாவில் அல்பேனியர்கள் ஆர்ப்பாட்டத்தை தொடங்கினார்கள்*

இவ்விசாரனைக்கு 79 நாடுகளைச் சேர்ந்த 1069 பேர் பணியாற்றியதுடன் 2004-2005 ஆண்டில் 157 மில்லியன் பவுண்ஸ்களும் செலவு செய்யப்பட்டது. மிலோசவிக்கை சார்ந்த 59 பேருக்கு தீர்ப்புகூறப்பட்ட நிலையில் மிலோசவிக்கின் மரணம் நிகழ்ந்துள்ளது. ஆனால் அவரின் சொந்த நாடான சேர்பியாவில் கூட மக்கள் அனுதாபத்தில் அக்கறை காட்டவில்லை. ஏன் தேசியக் கொடி கூட முழுக்கம்பத்தில் உயரப் பறக்கிறது. அதாவது மிலோசவிக் இனவாதத்தை தூண்டி மக்களை தவறாக வழிநடத்தி தமக்கு பேரழிவை தேடித்தந்ததாக அம்மக்கள் இப்போது உணர்கிறார்கள்.

> *மிலோசவிக்கின் மரணம் நிகழ்ந்துள்ளது. ஆனால் அவரின் சொந்த நாடான சேர்பியாவில் கூட மக்கள் அனுதாபத்தில் அக்கறை காட்டவில்லை*

ஒரு சேர்பிய தாய் தனது மகன் நேட்டோவின் விமானத் தாக்குதலால் இறந்தது கூட மிலோசவிக்கினால் தான் என அவரின் மரணத்திற்கு பின் கூறியிருந்தார். இது தாங்கள் ஒரு தவறான இனப் போருக்கு தள்ளப்பட்டிருந்ததை இப்போது மக்கள் உணர்வதை காட்டுகிறது. சிங்கள தேசமும் உணரும் காலம் வெகுதுாரத்தில் இல்லை மிலோசவிக்கை விட மிக மோசமான இனவாதிகள் தான் இப்போது தென்னிலங்கையை ஆட்சிபுரிகிறார்கள் ஆட்சிபுரிந்திருக்கிறார்கள், தமிழீழத்திலும் கூட 65,000 இற்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் ஒரு இரவில் 5 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்தார்கள். ஆனால் இவை எல்லாம் கதிர்காமர் போன்ற துரோகிகளாலும் சிங்கள இனவாதிகளாலும் சர்வதேசத்திற்கு மறைக்கப்பட்டும் திரிபுபடுத்தப்பட்டும் இருந்தன.

> *சர்வதேச மேற்பார்வையில் செய்யப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டை இலங்கை சட்டத்திற்கு முரணானது என கோமாளிக் கூத்தாடுகிறது*

சேர்பியாவுக்கும் யுகோஸ்லாவாக்கியாவுக்கும் பொருளாதரத் தடை ஆயுதத் தடை விதித்த சர்வதேசம் ஸ்ரீலங்காவை ஆயுத, பொருளாதார உதவிகள் மூலம் பலமடையச் செய்த நிகழ்வுகளே நிகழ்ந்தன. இன்று அதற்குரிய பலனை சர்வதேசம் அறுவடை செய்து கொண்டு இருக்கிறது. சர்வதேச மேற்பார்வையில் செய்யப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டை இலங்கை சட்டத்திற்கு முரணானது என கோமாளிக் கூத்தாடுகிறது, அதை நடைமுறைப் படுத்தவிடாது காலில் போட்டு மிதிக்கிறது. கூட்டு அரசில் உள்ள கட்சிகளையே தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறது. பலஸ்தீனம், சூடான் என் பல நாடுகளில் அமைதிப் பணிகளில் ஈடுபட்டதும் ஸ்ரீலங்காவில் அமைதியை கொண்டுவந்து ஆயிரக்கனக்காண சிங்கள இளைஞர்களை யுத்த முனைகளில் இருந்து காப்பாற்றியதுமான நோர்வேயை அவமானப்படுத்தி வெளியேற்ற முற்படுகிறது சிங்கள தேசம்.

இன்று ஒரு மிலோசவிக்கிற்கு நடந்தது போல 1983 களில் இடம்பெற்ற இனக்கொலைகளுக்கு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கும் ஆயிரக்கணக்கான இளைஞர்களை கிழக்கில் படுகொலை செய்ததற்கு பிரேமதாசாவிற்கும், 5 லட்சம் மக்கள் குடியிருந்த யாழ்நகர் மீது கண்மூடித்தனமாக செல்வீச்சுக்களும் விமானத் தாக்குதல்களும் நடத்தியபடி 60 ஆயிரம் சிங்களப் படைகளை ஏவி இன அழிப்பை மேற்கொண்டு 5 லட்சம் மக்களை இடம்பெயர செய்து பல நூற்றுக் கணக்கான மக்களை கொன்று செம்மணியில் புதைத்த சந்திரிக்காவிற்கும், சர்வதேசம் நடவடிக்கை எடுத்திருப்பின், இன்று சிங்கள இனவாதம் இந்தளவிற்கு வளர்ந்திருக்கமாட்டாது. உலகின் நீதி இது தான் 'ஒரே வகையான இனவாதத்திற்கு இருவேறு தீர்ப்புக்கள்' இதுமாறும்போது அமைதியும் சமாதானமும் நமக்கு அருகில் தெரியும்.

FOR FRIENDLY AND CONFIDENTIAL ADVICE

Rajah Solicitors

PARTNERS
Dr. Veera P. Ailoo LLB
Ananth Vengadasalam LLB Hons
1st Floor, 502 High Road,
Wembley, Middlesex HA9 7BH
Tel: **020 8903 5793**
Fax: **020 8900 0138**

Community Legal Service
Legal Aid Franchise

Conveyancing
Civil Litigation
Immigration
Matrimonial Injunction
Employment law
Landlord & Tenant
Family Law
Personal Injury
Company Law
Wills and Probate
Welfare Matters



வைகோ ஏன் குழம்புகிறார்? நாம் ஏன் குழம்புகிறோம்?

சேயோன்
(ஒரு பேப்பர்)

எதிர்பாராதது இறுதியில் நடந்துவிட்டது. வைகோவின் ம.தி.மு.க ஜெயலலிதாவின் அ.தி.மு.க கூட்டணியுடன் இணைந்துவிட்டது. 'ஆணவக்காரியை இனி ஆட்சியில் ஏறவிட மாட்டோம்' என்று சபதமெடுத்த, சூளுரைத்த வைகோ இனி, அந்த ஆணவக்காரியை ஆட்சியில் அமர்த்த தன் உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணிக்கப் போகிறார்.

இதனை மிக்க துயரத்துடன்தான் நோக்கு கிறோம். வைகோ தன்னை இழந்தது என்பது தமிழ் இனத்தின் பேரிழப்பே! வைகோ ஏன் அவ்வாறு செய்தார்?

சுதந்திர இந்தியாவில் எந்தவொரு அரசியல் கட்சித் தலைவரும் 19 மாதங்கள் தொடர்ந்து சிறையில் இருந்ததில்லை. வைகோ ஒருவருக் குத்தான் அந்த அவலம் நிகழ்ந்தது. வைகோ வின் வார்த்தையில் சொன்னால் அந்த ஆணவக்காரியால்தான் அது நிகழ்ந்தது. தமிழ ரல்லாத கன்னடத்து பிராமணியப் பெண்ணான ஜெயலலிதா தமிழுணர்வாளர்கள் மீது தனது சர்வாதிகாரத்தை அப்படித்தான் பாய்ச்சுவார்.

நீதிக்குப் புறம்பான எந்தக் காரியமும் செய்யாமல்தான் 19 மாதங்களும் வைகோ சிறையில் வாடினார். ஜெயலலிதாவின் பார்வை யில் தமிழுணர்வாளர் என்கின்ற ஒரேயொரு குற்றம்தான் வைகோவுக்கு உண்டு.

வைகோ சிறையில் வாடியபோதும் பிணை யில் வெளிவர அவர் விரும்பவில்லை. அப்போதெல்லாம் அவர் நெஞ்சுரத்தை நாம் மெச்சினோம். சுமார் ஒரு கோடித் தமிழர் அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கையெழுத்திட்டு போராட்டம் நடத்தினர். அந்த ஒரு கோடித் தமிழரின் முகத்திலும் வைகோ கரியைப் பூசி விட்டாரே என்று எண்ண வேதனையாக உள்ளது. சரி அதில் 20 இலட்சம் தமிழர் ம.தி.மு.க தொண்டர்கள் என்று கொண்டாலும் மீதி 80 இலட்சம் தமிழரும் வேறு கட்சிகளில் உள்ள ஆனால் அதே சமயம் வைகோ விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதில் ஆர்வமாக உள்ளோர்தானே?

சிறையிலிருந்து மீண்ட போது பெற்ற ஆளுமை மிக்க வலு அத்தனையையும் இந்த உடன்பாட்டின் மூலம் வைகோ இழந்து விட்டார் என்பதே நம் பெரும் வேதனை. ஈழத்தமிழர் மிக நம்பிய தமிழ்நாட்டுத் தலைவர் என்றால் அது வைகோதான்! வைகோவே தவறு செய்தால் இனி யாரை நம்ப முடியும்?

வைகோ இவ்வாறான நிலைப்பாடு எடுப்ப தற்கு கருணாநிதியும் ஒரு முக்கிய காரணி தான். ஆனால் பாராளுமன்ற அரசியலை நடாத்துகின்ற வைகோ, கருணாநிதியின் ராஜதந்திரத்தையும் புரிந்திருக்க வேண்டும். தான் ஒரு ராஜதந்திரி என்பதையும் நிரூபித்திருக்க வேண்டும்.

கருணாநிதியின் இலக்கு முழுவதுமே குடும்ப அரசியல்தான். மத்திய அரசில் தனது மருமகன் மாறன் குடும்பம் அரசோச்ச வேண்டும். தமிழ்நாட்டு அரசியலில் தனது மகன் ஸ்டாலின் ஆட்சி செலுத்த வேண்டும். இதற்காக கருணாநிதி மிக்க இலாவகமாக காய்களை நகர்த்துவார்.

ஆனால் யதார்த்தம் வேறொன்று. கருணா நிதி தனது வாழ்நாளிலேயே ஸ்டாலினை முதலமைச்சராக்க வேண்டுமென்று துடிக்கிற ார். ஆனால் கருணாநிதியின் வாழ்நாளுக்குப் பிறகு ஸ்டாலினை தலைவராக ஏற்க தி.மு.க. வில் உள்ள பெரும்பாலானோரே தயங்குவார் கள் என்றே நம்புகிறேன். அவ்வாறானோரின் கண்களுக்கு உடனடியாக தெரிகின்ற ஆளுமை வைகோ வேயாகும். ஆனால் வைகோ தன்னை இழந்து ஜெயலலிதாவுடன் சரணடைந்த பிறகு, தமிழுணர்வாளர் யாரும் வைகோவை நம்புவார்களோ என்பது சந்தேகம்.

இது ஒருபுறத்தில் கருணாநிதியின் ராஜதந்திர த்துக்கு கிடைத்த வெற்றி. கருணாநிதியின் குடும்பத்தையே இனி என்றென்றைக்குமாக தமிழ்நாட்டுத் தலைமைக்கு ஏற்கவேண்டிய நிர்ப்பந்தம் தமிழுணர்வாளர்களுக்கு ஏற்பட்டு விட்டது.

இந்த இடத்தில் திருமாவளவனை வைகோ வுடன் ஒப்பிடக் கூடாது. திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் வேறு. தலித் மக்களின் பிரச்சினைகளுக்காகப் போராடும் கட்சி அது. தலித் மக்களுக்கு கருணாநிதியும், ஜெயலலிதாவும் சம அளவில் விரோதிகள் தான். திருமாவளவன் தனது கட்சியைத் தக்கவைப்பதற்கு இருவரில் யாருடனும் கூட்டுச் சேரலாம். கருணாநிதி எச்சிற்சோறுதான் திருமாவளவனுக்குக் கொடுக்க இருக்கையில் தலைவாழை வைத்து விருந்து கொடுக்கும் ஜெயலலிதாவை திருமாவளவன் நம்புவது மோசமில்லை.

ஆனால் வைகோவின் நிலைப்பாடு வேறு. ம.தி.மு.க என்பது தமிழ்நாட்டுத் தமிழருக் கான கட்சி. இன்னும் இதனை இவ்வாறு வரையறுக்கலாம் தி.மு.க. என்பது தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கான மிதவாதக்கட்சி என்றால் ம.தி.மு.க தீவிரவாதக்கட்சி எனலாம். அ.தி.மு.க. வை இவை எவற்றிலும் சேர்க்க வில்லை. அது எம்.ஜி.ஆர் இன் கட்சி. மற்றும் கருணாநிதியின் அதிருப்தியாளர்களின் கட்சி.

இந்த நிலையில் கருணாநிதிக்குப் பிறகு யார் என்ற தமிழுணர்வாளர்களின் எதிர்பார்ப்புக்கு வைகோவே முற்று முழுதுமாகப் பொருத்த மானவர். இது கருணாநிதிக்கும் தெரியும். அதனால்தான் வைகோவை அகற்ற வேண்டும் அல்லது விலக்க வேண்டும் என்கின்ற கருணாநிதியின் எதிர்பார்ப்பு வைகோவின் தந்திரமற்ற நடவடிக்கையால் நிறைவேறியிருக் கிறது.

தமிழ்நாடு சட்டசபையில் அதிக ஆசனங் கள் கிடைத்தால்தான் ம.தி.மு.க.வை தக்க வைக்கலாம். அதனால் அ.தி.மு.கவுடன் சேர்ந் தோம் என்று வைகோ சொல்கிறார். தி.மு.க 22 ஆசனங்களை ம.தி.மு.க.வுக்கு ஒதுக்கியது. அ.தி.மு.க. 35 ஆசனங்களை ஒதுக்கியுள்ளது. ஆனால் இதில் என்ன அனர்த்தம் என்றால், ம.தி.மு.க, தி.மு.க.வுடன் 22 தொகுதிகளில் போட்டியிட்டால் 22 ஆசனங்களும் ம.தி.மு.க. வுக்கு சுலபமாகக் கிடைத்துவிட சந்தர்ப்பம் உண்டு. ஆனால் அ.தி.மு.க.வுடன் சேர்ந்து போட்டியிடுகிறபோது 5 ஆசனங்கள் ம.தி.மு.க. வுக்கு கிடைப்பதே சந்தேகம்.

சன் ரீவியின் பங்களிப்பை நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. தமிழ்நாட்டு மக்களில் 90 வீதமானோரின் கருத்தைத் தீர்மானிப்பதில் சன் ரீவியே உள்ளது. அது மாத்திரமின்றி சூரியன் எப்.எம் வானொலி, தமிழ்முரசு மாலைத் தினசரி, குங்குமம் வார சஞ்சிகை முதலான ஊடகங்களும் கருணாநிதியின் கைகளிலேயே உள்ளது. அவையும் தீர்மானகரமான சக்தியாக இயங்குகின்றன.

இதுவரை காலமும் வைகோவை இருட்டடிப்புச் செய்த சன் ரீவியும் மற்ற தி.மு.க ஊடகங்களும் இனி வைகோவை வெளிச்சம் போட்டுக் காட்டப்போகின்றன. ஜெயலலிதாவின் ஆணவத்தை விமர்சித்த வைகோவின் மேடைப் பேச்சுக்களையும், கருணாநிதியுடனான வைகோவின் உருக்கம் நிறைந்த நெகிழ்ச்சிக் காட்சிகளையும் அவை வெளியிடப் போகின்றன. இன்னமும் வைகோ தி.மு.க.வுடன் தான் நிற்கிறார் என்னும் காட்சியை அவை எழுப்பப் போகின்றன. எல்லா இலக்குகளும் வைகோவை குறிவைத்து தாக்கி அழிக்கப் போகின்றன.

இந்த அரசியற் சூழ்ச்சியில் கருணாநிதியும் வென்றுள்ளார். ஜெயலலிதாவும் வென்றுள் ளார். தோற்றுப் போனவர் என்பது வைகோ தான். அதுதான் மகாவேதனை.

JOB VACCANCY

HIGHGATE HILL MURUGAN TEMPLE

Manager/Administrator of a Hindu(Shiva)Temple

As one of the biggest temples in London we are committed to maintain and enhance the quality of service provided to our devotees of the **Highgate hill murugan temple.**

Britannia Hindu (Shiva)Temple Trust, a registered Charity is looking for a responsible and committed active Temple worker, a vegetarian with good management and administration skills. To fill the above vacancy one must have commitment to serve God and be a 'Saivite'. The applicant should be a teetotaller and non smoker.

This is a prestigious post, responsible for the management, administration and accounts of the Trust.

Working hours will depend on the activities in the temple, temple complex and during the opening times of the temple

Working during Saturdays, Sundays and public holidays is expected.

Qualification: Knowledge of English and Tamil is essential. Computer literacy, basic accountancy skills and a clean driving licence would be an advantage. No other formal qualification is required, but previous Temple Administration experience would be an advantage.

Annual salary is £12,000/=, to be paid monthly. There is no extra pay for over time, for working during unsocial hours.

Preference will be given to a person who is willing to reside in the temple complex, free accommodation will be provided. Accommodation for wife and husband will be considered if both wife and husband are vegetarians and willing and fit to serve the temple.

Conditions: Applicants should not have any direct or indirect business interests during the period of employment. Concentration should be directed towards the activities in the temple and in the properties of the Trust.

Any one interested in the above vacancy can obtain the job specification from the secretary of the Board of Trustees

Interested applicants are requested to send a letter with a CV to the secretary,

Britannia Hindu (Shiva) Temple Trust,
200 A Archway Road, London N6 5BA
Tel: **020 8348 9835**

on or before 31st March 2006

உயர் வாசல் குன்று முருகன் கோயில்

04.12.1999ம் ஆண்டு அறக்கட்டளை வெள்ளி விழா கொண்டாடியதை அடுத்து மாட்சிமை தங்கிய எலிசபெத் மகாராணியார், 2002ம் ஆண்டு ஜூன் மாதம் இவ் ஆலயத்திற்கு வருகை தந்து தொழுது சென்றார்

மட்டைக் கிளப்பானின்....

அலசுவாரம் - 6

கண்ணகை அம்மன் குளிர்த்தி எண்டிறது ஒற்றை முலையை அரிஞ்செறிஞ்சி ஆவேசத்தோட, பாண்டியன்ர கொடுங்கோலுக்கு எதிராகத் தன்னோட சேர்ந்து நிண்ட ஆதரவாளர்களோட மதுரை நகருக்குத் தீ வைச்சிப்போட்டு நெஞ்சு பற்றி எரிய வந்த கண்ணகியிர மனத்தையும் உடலையும் குளிர்விக்கிறதுக்காக இடையர் சேரி மக்கள் செய்த கிருத்தியங்கள ஞாபகப்படுத்துற ஒரு விழா பாருங்கோ. ஒவ்வொரு ஊரிலயும் அங்க இரிக்கிற குடிவழி எண்ணிக்கைக்கு ஏற்றமாதிரி பூசை, திருவிழாக்களப் பிரிச்சிக் குடுத்துக் கடைசியில அந்த ஊர்ப் பிரதான குடி குளிர்த்தி விழாவக் கொண்டாடக் கூடிய வகையில கிட்டத்தட்ட ஒன்பது நாள் கோயிற் கதவத் திறந்து மூடுவாங்க. தேவதை வழிபாடானதால பெரும்பாலும் ஊருக்கு ஒதுக்குப் புறத்திலதான் கோயில் இரிக்கும். சில இடங்களில ஊருக்கு நடுவுலயும் கோயில் இரிக்குது. அப்பிடியான சில இடங்களில (உ-ம்: காரைதீவு) வெள்ளிக்கிழமையில பூசை பண்ணிற வழக்கமும் இரிக்குது. ஆனாலும் பழைய பிரதான கோயில வருசாவருசந்தான் திறப்பாங்க. ஊர்ப்பிரதான குடிவழிப்பிறந்த கப்புகனார் அல்லது குருக்கள் குடிப் பூசகர்தான் வாய்கட்டிப் பூசை செய்யிற வழக்கம்.

கோயிற் கதவு திறந்து ஊர்காவற்பண்ணிய பின்னர் கோயிலைச் சுற்றியுள்ள ஊர் எல்லையினுள் மச்சம் மாமிசம் புசியாதிருத்தல், யாரும் இறந்தால் அழுகுரலோ, இழவுப் பறையோ கேட்காதபடி உடனடியாக ஈமக்கடன்களை முடித்து விடுதல் அல்லது ஊர்காவற் பண்ணிய எல்லைக்கு வெளியே பிணத்தைக் கொண்டு போய்த் துக்கம் கொண்டாடுதல், குளிர்த்தி முடியும் வரை மாதவிலக்கான அல்லது பிள்ளை பெற்ற பெண்கள் தூரப்போய் விடுதல் போன்ற ஆச்சார அனுட்டானங்கள் கடைப்பிடிக்கப்படும்.

திருவிழாக்காலப் பூசை வழிபாடுகளின்போது கண்ணகியின் துன்பியல் வாழ்வையும் அவள் அடைந்த தெய்வீக நிலையையும் ஞாபகப் படுத்தும் வகையிலான நிகழ்வுகள் இடம்பொறும். கோவலனைக் கண்ணகி திருமணம் செய்த நிகழ்ச்சியும் அதிலொன்றாகும். அதற்காகக் கலியாணக்கால் வெட்டலும் அதைக் கோயிலிற் கொண்டுவந்து நாட்டலும் இடம்பெறும். கலியாணக்கால் வெட்டக் கோயிலிலிருந்து வெளிக்கிடும் ஊர்வலம் ஊர்சுற்றுக்காவியம், மழைக்காவியம், கண்ணகி வழக்குரை போன்ற கவிநயம் மிக்க பாடல்களை இசைத்தபடி செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும். சாம்பிளுக்கு ஒரு கவிநயம்மிக்க இனிய பாடலை உங்கள் முன் வைக்கிறேன்.

வீசுகர மேகநிறை வேதமுதலாள் கருணை
மேவுமத வாரண வினாயக விநோதா
சேர் சுருதி பாரதமியற்றவொரு கோடுகொடு
சேமமுறவே யெழுது சேர்கருணையோனே
கூசுமதிசேர் நுதலி கோமள வல்லிக்கோர்
கொஞ்சு மதலைக் களப குஞ்சரமுகத்தோன்
பேசுதமிழின் கவிகளே பாடுதற்கு மெதும்
பிழைகள் வாராமலருள் பேழை வயிறோனே.

விநாயகரைப் போற்றும் ஊர் சுற்றுக்காவியத்தின் முதற்பாடல் இது. இது போல் மட்டக்களப்பின் அக்காலப் புலவர்களாற் பாடப்பெற்ற கண்ணகி வழிபாட்டுப் பாடல்கள் கவிநயமும் இசையும் அழகுற அமையப் பெற்றவையாகும்.

கண்ணகையம்மன் குளிர்த்திப் பாடல்களும் மிகவும் இனிமையானவை. ஒரு முலையைத் திருகியெறிந்த உடல்வேதனையாலும் கணவனையிழந்த மனவேதனையாலும் துடிக்கும் கண்ணகியைக் குளிர்விக்க:

ஆழி புடைசூழும் காவிரிப்பூம் பட்டினத்து

வாழ்வணிகர் தம் குலத்து மாதே குளிர்ந்தருள்வாய்.

என்று தொடங்கும் பக்திரசமும் பரிவும் கொண்ட குளிர்த்திக் கவிகள் கேட்குந்தோறும் கண்ணகி தன் வாழ்விற்பட்ட துன்பங்களை நினைவுறுத்தும். பைபிளில் ஏசுபிரான் பட்ட சிலுவைப்பாடு கிறிஸ்தவர்களிடம் எப்படிப் பக்திக்கனலை மூட்டுகிறதோ அவ்வாறே கண்ணகி காவியம், வழக்குரை, குளிர்த்திப்பாடல், திருவூஞ்சல், உடுகுச்சிந்து போன்ற சொல்லாட்சியும், அழகிய சந்தநடையும், இனிய மெட்டுக்களும் இழைத்த மட்டக்களப்பின் கிராமிய இலக்கியக் கருவூலங்கள் கள்ளங்கபடமில்லா அம்மண்ணின் மைந்தர்களிடம் பக்திக்கனலை மூட்டுகின்றன. தெய்வீக சாந்தியைத் திகழ்விக்கின்றன. அந்த இனிய நம்பிக்கையில் வாழ்ந்து மகிழ்ந்து நிறைவுபெற்று மறைந்தோர் பலலட்சம்?. இன்னும் வாழுவோர் பல்லாயிரம்.

மட்டக்களப்பின் சமய வாழ்வில் கண்ணகி வழிபாடு ஏற்படுத்திய தாக்கம் தனியே சைவர்களோடு மட்டும் நின்று விடாமல் ஏனைய சமயத்தவர் மத்தியிலும் தாக்கத்தை ஏற்படுத்தவே செய்கின்றது. ஊரில் உள்ளவர்களெல்லாம் உறவினர்களாதலாலும், குடிவழிச் சம்பிரதாயங்களை மதித்து நடப்பவர்களாதலாலும் தத்தம் பூசைவரி, திருவிழா வரி போன்றவற்றைக் கட்டுவதோடு நிற்காமல் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதிலும் ஆர்வமாயிருப்பதால் கிறிஸ்தவ உறவினர்களும் கண்ணகி வழிபாட்டில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபடுகின்றனர். இதைத் தவிர இஸ்லாமியச் சகோதரர்களும் எமது சமயத்தை மதித்துக் கௌரவிக்கும் வகையில் தங்கள் கந்தூரி விழா நிகழ்ச்சிகளுக்கு பக்கத்தூர்க் கோயில் நிருவாகிகளுக்கு அழைப்பு விடுப்பதும் அவ்வாறே ஊர்க்கோயில் விழா நடைபெறும்போது பூசைப் பிரசாதங்களை பக்கத்தூர்ப் பள்ளிவாசலுக்கு முறைப்படி அனுப்பி வைப்பதும் சம்பிரதாய நிகழ்ச்சிகளாக நடைபெற்று வந்துள்ளன. ஆனால் இன்றோ காலவோட்டத்தில் தடுக்கி விழுந்து விட்ட சமூகங்களாக தூக்கி நிமிர்த்துவார் யாருமின்றி மூவின மக்களும் கிழக்கு மாகாணத்தில் விழிபிதுங்கி நிற்கின்றனர்.

நான் கொஞ்சம் கவிதை, இலக்கியம், சமயம், சமூக உறவுகள் எண்டு எடுத்துக்காட்டுகளோட இந்த அலசுவாரத்தில கதை சொல்ல வெளிக்கிட்டதால கொஞ்சம் சீரியஸாப் போயிற்றன்போல கிடக்குது பாருங்கோ. எண்டாலும் நம்மட மண் நமக்கு எப்பிடிக் கதை சொல்ல வேணுமெண்டு சொல்லித் தந்தத மறக்கேலுமா ஆனபடியாத் திரும்பி வாறன்.

கண்ணகியம்மன் குளிர்த்திக் காலத்தில வெளியூர்களில வேலைசெய்யிற ஆக்கள் அதிலயும் கலியாண மாகாத இளந்தாரிப் பொடியனுகள் பெரும்பாலும் எப்பிடியெண்டாலும் லீவப் போட்டிற்று ஊருக்கு வந்திருவானுகள். பெரிய பக்தியில இல்ல கோயிலுக்கு வாற பொட்டையளப் பாக்கத்தான். சாரிசாரியா தாவணி, சேலை சல்வார் எண்டு விதம் விதமா உடுத்திற்று தலையில பூச்சரமும் (பெரும்பாலும் பிளாஸ்ரிக்) நெத்தியில பொட்டும் ஒரு சின்ன திருநீத்துக் கீறுமா கோல மயிலுகள் கோயிலுக்கு வாற அழகப் பாக்கவேணும் பாருங்கோ. எதப் பாக்கிற எத விடுறதெண்டு தெரியாமத் தவிப்பானுகள் பிள்ளையள். அவளுகள் விடுற அம்புகளால குத்துப்பட்டு இதயத்தில தேனொழுக பொத்திற்று விழுவானுகள். வரிசிலை அண்ணல்களும் வாட்கண் நங்கையரும் - இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்திற மிதிலைக் காட்சி கண்கொள்ளாக் காட்சி பாருங்கோ. தொடருவம்.

இல்லந்தோறும் இனிய வாழ்வு

மாணவர்களும் மனச்சோர்வும்

Dr. பாலேந்திரன்
(ஒரு பேப்பருக்காக)

இங்கிலாந்தில் வாழும் கல்லூரி, பல்கலைக் கழக மாணவர்களிடையே மனச்சோர்வு, மனவுளைச்சல் போன்றன அதிகம் காணப்படுகின்றது. இவற்றிற்கான காரணங்கள் பொதுவானவை.

1) அதிகரிக்கும் பாடங்கள் பரீட்சைகளை எதிர்கொள்வதில் சிரமம்.

2) புதிய சூழல் பரீட்சயப்படுவதில் ஏற்படும் சிரமங்கள்.

3) புதிய வாழ்க்கை முறையில் வரும் பொருளாதார நெருக்கடி, பற்றாக்குறை.

4) புதிய நண்பர்களுடன் ஏற்படும் உறவுமுறைகளின் பாதிப்பு.

5) பெற்றோரின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப படிக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

6) தான் தேர்ந்து எடுத்த கல்வித்துறை தனக்கும் தன் எதிர்காலத்துக்கும் ஏற்றதுதானா என்னும் தடுமாற்றம்.

மேற்கண்ட தடுமாற்றங்கள் மன உளைச்சலாகி மனச்சோர்வை ஏற்படுத்தும். இக்காலகட்டத்தில் சில மாணவர்கள் பெற்றோரிடம் கலந்து உரையாடுவார்கள். பலர் நண்பர்களிடம் ஆலோசனை கேட்பார்கள். இவர்களின் மனநிலைமாற்றங்கள் பின்வருமாறு வெளிப்படும்:-

1) சிரிப்பது, வேடிக்கையாக பேசுவது குறைந்துவரும்.

2) பெற்றோர், உறவினருடன் உரையாடுவது குறைந்துவரும்.

3) வீட்டில் இருக்கும் நேரங்களில் தனிமையாக இருக்க விரும்புவர்.

4) படிப்பு பற்றி பெற்றோர் உரையாடும்போது பிடிப்பின்றி பதில் கூறுவர்.

5) பல சமயங்களில் விரக்தியான பதில்களை கூறுவர்.

6) தொடர்ச்சியாக கேள்விகளைக் கேட்டால் கோபப்படுவர்.

இவ்வாறான மாற்றங்களைக் கண்டால் விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளின் மேல் கோபம் கொள்ளக்கூடாது. அவ்வாறு கோபம் கொள்வது எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும். இவ்வாறான நிலையில் குழந்தைகளுடன் உரையாடுவது பற்றிய மனப்பக்குவமும் மனமுதிர்ச்சியும் இருக்குமானால் மட்டுமே அவ்வாறான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஒரு அனுபவம் மிக்க கவுன்சிலிங் சிகிச்சையாளரின் உதவியை நாடுவது நன்மை பயக்கும். பரிகாரம் பெறாத பாதிக்கப்பட்ட மாணவர் பின்வரும் விளைவுகளுக்கு ஆளாகலாம்.

1) படிப்பு முழுமையாக பாதிக்கப்படுதல்.

2) நீடித்த மனச்சோர்வு ஏற்படுதல்.

3) மனநோய்கள் ஏற்படல்

4) பெற்றோரை பிரிந்து போதல்.

5) தற்கொலை முயற்சிகள்.

என்னிடம் சிகிச்சை பெற்ற சில மாணவர்கள் கல்லூரி, பல்கலைக் கழகங்களில் கல்வி பெற்று வந்தவர்கள். சிகிச்சையின் பின் சிலர் மனஅழுத்தத்தில் இருந்து விடுபட்டு கல்வியில் முன்னேறியுள்ளனர். சிலர் தமது தவறுகளைத் திருத்தி தனக்கு ஏற்ற முறையில் வாழ்க்கையை மேற்கொண்டனர். சிலர் தமது வாழ்வின் குறிக்கோள் பற்றிய முக்கியத்துவத்துக்கும், இடைக்கால உறவுகளின் அழுத்தங்களுக்குமிடையே அகப்பட்டு எதற்கு முக்கியத்துவம் தரவேண்டும் என அறியாது குழப்பமடைந்து இருந்தார். இப்படிப்பட்டவர் நீண்டகால சிகிச்சையின் பின் நன்கு முன்னேறியுள்ளனர்.

தமிழ் குடும்பங்களை பார்க்கும்போது இவ்வாறான பிள்ளைகளின் சிக்கல்கள், பெற்றோரை அதிக அளவில் பாதித்துவருவது காணக் கூடியதாகவுள்ளது. பெற்றோர் பாதிப்படையும்போது குடும்பத்தில் உள்ள மற்ற பிள்ளைகளையும் இது பாதிக்கின்றது.

உயர்கல்வி நிலையங்களில், சில மாணவர்கள் மதுவுக்கு அடிமையாவது, போதைவஸ்த்துக்களைப் பயன்படுத்துவது, தற்கொலை முயற்சியில் ஈடுபடுவது, தற்கொலை செய்து கொள்வது போன்றவற்றிற்கு அடிப்படைக் காரணம் பெரும்பாலும் மனஉளைச்சல், மனச்சோர்வு போன்றனவே காரணம். சில சமயங்களில் சிறிய அளவில் உள்ள இம்மனச்சோர்வை பெற்றோரின் மோசமான அணுகுமுறை பூதாகரமாக்கி தற்கொலையில் சென்று முடிவதும் உண்டு.

இறுதியாக பெற்றோருக்கு ஒரு அறிவுரை, உங்கள் பிள்ளைகளில் மேற்கூறிய மாற்றங்கள் கண்டால் உடன் தகுதியான கவுன்சிலிங் சிகிச்சை வழங்குவது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நன்மை பயக்கும்.

உங்களுக்கு இங்கிலாந்தில் வசிக்கும் உரிமை நிராகரிக்கப்பட்டுள்ளதா?

திருப்பி அனுப்பப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதா?

இங்கிலாந்தில் தொடர்ந்தும் சட்டப்படி வசிக்க நீங்கள் விரும்புகின்றீர்களா?

அப்படியாயின் சில வழிகள் உண்டு. நீங்கள் உடன் தொடர்பு கொள்ள இன்றே நாடவேண்டிய இடம்........

SARA SOLICITORS

Our other services!

Visitor's Visa
Medical Treatment
Student Visa
Student Nurses
Post Graduate Doctors
Working Holiday Makers
Work Permit Employment
Highly Skilled Migrant's Programme
Multiple Entry Work Permit Employment
Long Residence 10 & 14 Years
Persons with UK Ancestry
Training or Work Experience Scheme
Vistor's Visa for Medical Treatment
EEA Nationals & Family Visas
Business Visas
Family Members Visas

The Law Society Accredited Immigration Law

Te : 020 8399 5640
Mobile : 07949 415 205
website: www.sarasolicitors.com
Email : mail@sarasolicitors.com

KIDS பேப்பர்

The Elephant That Thought It Was The Strongest

By the river was an elephant, a wolf, a fox, a pig, an owl and a lion. They wanted to get across a river. They needed a bridge but they didn't know how to make a bridge or get a bridge. The fox thought of an idea, he explained it to the others,

"See that tree over there, if someone pushes it down, we can use it as a bridge. I hope it's big enough."

"Okay then, and I can see the someone who's going to push the tree over," replied the elephant.

" Who?" asked the lion. The elephant answered,

"Me!"

The elephant started to push the tree, he kept pushing, "Come on strength, come on muscles!" the elephant pretended to talk to his body.

"Shall I help?" asked the wolf and the elephant replied,

"No need, I can do it."

Later in the day, the elephant kept pushing. It was getting dark. The owl thought of an idea,

"One by one, we keep helping elephant."

Firstly pig went and helped, but it was still the same, then lion, it moved an inch. Along came the fox and it moved a bit more, after came wolf and it moved much more. Lastly, owl, the one who thought of the idea, but it still didn't fall. Then, pig slipped still with him and the others pushing, and finally it fell.

"Hip hip hooray! Hip hip hooray! Hip hip hooray!" They all cheered.

The animals all happily went across their brand new bridge.

"So then, you weren't the someone at all, no one was the someone, it was rather like some animals," pig told elephant.

"I suppose so, sorry," elephant sulked.

So the next time they needed to get across, they used the bridge.

Many hands make light work

By: Sathyan Sivarajah (Age: 9) England.

SUDOKU

Fill in the grid so that every row, Every column, and every 3x3 box Contains the digits 1 - 9. Answers will be published on the next issue.

	6		1		4		5	
		8	3		5	6		
2								1
8			4		7			6
		6				3		
7			9		1			4
5								2
		7	2		6	9		
	4		5		8		7	

Colouring

Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

Last week's winner, ***Rathika Ramraj*** (7 Yrs.) from Tolworth.

Last week's runners up -

Genani Sivanesan (Age 5 yrs) from Surbiton

Minushan Karthik (Age 9 yrs) from Wembley

Abirami Senthil (Age 8 yrs) from Harrow

Rathan Ashok (Age 5) from Toronto

Spot the Difference - by Mathuran (Age 8)





Answers.

Bus stop sign, The boy with the radio, Bus front light, Man with the head phone, The dog's owner's cigarette, The girls uniform badge, Button's on the 4th passengers coat, The bus's push button on the side, First passengers shopping bag

Chicken Little - the movie

The movie is, of course, an adaptation of the popular children's tale, only this time young Little goes on an adventure to restore his reputation (after the crafty chicken lead people to believe the sky was actually falling) with his trusty friends Abby Mallard (otherwise known as The Ugly Duckling), Runt of the Litter and Fish Out of Water. Hilarity and actualy sky falling ensue. Like most other animated features.

The story centers on Chicken Little's (Braff) wildly active imagination and tendency to overreact. He causes an uproar in his town when he pronounces that "the sky is falling down," which winds up getting him shipped off to a special camp where he meets other animals with challenges of their own. Cusack will voice the ugly duckling, Zahn is a big pig named Runt, Sedaris is Foxy Loxy, Finneran is Foxy's sidekick Goosey Lucy, Knotts is the Turkey Mayor and Marshall is the Father.

This time, when it comes to saving the world, it helps to be a little chicken!

It's a great family entertainment film, full of fun and laughter.

- Sent in by Ginothan

Jokes

Lisa: I know who loves you.

Bart: Who?

Lisa: Jo King.

Lisa: JOKING!

What do you get if you sit under a cow? **A pat on the head.**

Teacher: Henry, make up a sentence with the word 'lettuce' in it.

Henry: Let us out of school early.

What happens if you fall asleep under a car? **You wake up oily in the morning.**

What did the inflatable teacher say to the inflatable boy who brought a pin to the inflatable school?

You've let me down,you've let the school down,but worst of all,you've let your self down.

Mum: Henry, we're having Aunt Ruby for lunch this Sunday.

Henry: Can't we have roast beef instead?

Knock Knock.

Who's there?

Little old lady.

Little old lady who?

(yodelling) Little old lady ooooh.

Knock Knock.

Who's there?

Abyssinia.

Abyssinia who?

Abyssinia when I get back.

Knock Knock.

Who's there?

Nun.

Nun who?

Nun of your business.

Knock Knock.

Who's there?

Cows go.

Cows go who?

No they don't,they go moo.

- By Sathyan Sivarajah (Age: 9) England

Word Search

T	H	A	A	L	I	F	U	N	B
R	A	I	N	K	A	A	P	U	W
S	O	P	M	H	I	Q	Y	Z	A
K	I	O	E	B	I	L	M	A	D
O	P	T	T	E	O	E	N	I	L
L	T	T	D	M	A	P	O	D	E
U	H	U	D	L	J	E	U	A	R
S	O	S	I	M	R	D	V	F	T
U	D	N	G	E	Q	Y	Z	A	I
U	U	W	S	O	H	I	B	N	J

Hidden Words:

Subject: Tamil Jewels

POTTU, KAAPU, METDDI, THODU, THAALI, KOLUSU

Submitted by: Tharshia.R from Edmonton.

BRITAIN vs CANADA

240 - 205

COMPETITION!

KIDS CRAZY QUIZ

- Compiled by Tharanian Ravi -

Britain have done a come back! This is the last issue so Canada have their last chance! Is Britain or Canada the Quiz Masters! The Oru Paper Quiz master winners will be who? Come on Canada keep sending the answers to the quiz!

LAST ISSUE TO FIND

THE QUIZ MASTERS!!!!!!!!!!!!

Instructions: If someone from Britain answers the questions, Britain will earn 5 points for each question they answered correctly and same for Canada.

Then at the next issue Oru Paper will publish the score, then after 3 months Oru Paper will proudly publish the country that won! The people who participated, their names will be published with the winning country part.

Questions:

1.) What is the fastest animal on 2 legs, which can reach a speed of around 40 miles per hour?

2.) Which Asian country had bloodless coup in 1960?

3.) What are sun spots?

4.) Who was the first American, who was launched in a space ship?

5.) Who started Sikhism?

6.) What is the name of the circles which vertically cross the equator?

7.) In boxing, what do the letters K.O. stand for?

8.) What is the capital city of Norway?

9.) What instrument is used for measuring temperature?

10.) What do we call a mountain which could erupt?

Hurry Up!!!!!!!! Send your answers before 29/03/06

Send your answers to *kids@orupaper.com*

REMEMBER DON'T FORGET TO ADD YOU NAME, AGE AND COUNTRY WHEN SENDING YOUR ANSWERS!

Answers to last issues Quiz:

1.)Tamil Nadu, 2.)Skin, 3.)Four, 4.)Kampala, 5.)The Fire Temple, 6.)Pluto, 7.)Mecury, 8.)Akashi Kaikyo, 9.) Willow Tree, 10.)Roots.

MOTHERS DAY!!!

Hey kids...

Remember this 26th of March is... **MOTHERS DAY!!!** Get your thinking caps on and come and join me on a journey off shopping!!!

right listen up....1st step....: Ask an adult (may be your-Dad, Older Sister, older Brother...e.t.c. But make sure its not your mum)ask them politly if they would take you to a shop that you think has very nice perfumes, Phones, Folwers e.t.c!!!

Then, Find somthing you really (and i mean REALLY) interesting that you you might know your mother likes...(so much).

right 2nd step...: Buy the item you want (or make it-your choice) and pack it up in a pretty packing paper or- (just pop it in a bag)- and hide it away from your mother.(But remember dont make it to obvious that you brought your mother something!!!)

3rd step: (Fingers crossed your mum will like it) ..... you then can give it to her and end up with a big "kissy .....kissy" red mark all over your face. Good luck ;)

If i was to admire my mother..... i would say.......

My angel is beautiful,

she is so special and like no other.

I love her,

for my angel is my mother.

She takes me to school, She takes me to classes,She makes nice food, she takes a bathe for me each night,she... she... **SHE IS A PERFECT MOTHER....!** (wish you all the same) good luck :)

Dont forget to say "Happy mothers Day ;)"

- By Tharshia.R

GAME

SUPER BIKE 2000

This game is now 6 years old but still one of my favourite motorbike game. I have this game on PC and I still play with it time to time. I like the graphics and how the game was created with what would actually happen while there's a motorbike game going on? What would there be on the sides? In this game it shows everything. Every single thing you would expect to see in a real motorbike show. I all so like the way, for different make of motorbike it feels different. For e.g. Honda will be really smooth and go really fast, Yamaha will not be a smooth ride but will go really fast. Like that they created this game with different, different effects on different makes. This game I still by and I don't buy any more motorbike games because I think new motorbike games are worth less and is more better to stick with Super Bike 2000.

MOVIE

MUMBAI X-PRESS



This film I watched about 2months ago and it's a Tamil film. I really watched this film because I like Kamalahasan's acting. But later when I watched this film I also liked other peoples acting as well as Kamal. I found this film really funny and really entertaining so did my family. I found the bit at the beginning where one of group member was in hospital so they can't do there mission. So they call in Kamal and kamal wears a hearing aid but the group didn't know. So when they collected him from his stunt bike place they told him the plan and thought he accepted it but kamal did not hear anything. I found this really funny, I could not stop laughing. Because the film was so funny I stopped laughing after 5minutes but then 2minutes after that I started laughing back again.

BOOK

BOY

This book is written by Roald dahl one of the children's best known writer. This story I read about 2months ago and I really found it interesting the fact that he doesn't like writing biography. Roald Dahl thinks writing biography is boring and people will find it hard to read it. So he decided to write all the main points that happened to him as a story which I thought it turned out really well. Roald Dahl wrote 95% of funny stuff which happened to him and 5% of non funny things what happened to him. Soon as I read this book this gave me comedy pictures in my head how it would have been if I was there at the time. I couldn't stand it how much he got whipped. I really liked this book so I recommended this book to my friends, they read it and they said it was fantastic.

- By: Rishiyan Ravindrakumaran

KUYILI
AUDIO - VISUAL
DVCAM HDV
வீடியோ சாதனங்கள்
வாங்க விற்க மற்றும்
பழுது பார்த்து தரப்படும்
CALL US ON
0208 952 0599
07810 543 146
உங்கள் மங்களகரமான வைபவங்களை
VIDEOவில் படம் பிடிக்க எம்மை நாடுங்கள்
நெடுங்கால அனுபவம் - தரம்
திருமணம்
நீராட்டு விழா

பிறந்தநாள்
குயிலி ஒடியோ விஷவல்
email: bala@kuyiliav.co.uk

சமூகநலப் பணஉரிமை (DSS Money)

இங்கிலாந்தில் வாழும் உங்களுக்கு சமூகநல உரிமைகள் கொடுக்க மறுக்கப்பட்டால் குறிப்பாக 60 வயதிற்கு மேற்பட்டவரோ அல்லது வலுவிழந்தோரோ தங்கள் உரிமைகளை அறியாத நிலையில் இருந்தால் அடிப்படை உரிமை சம்பந்தமான ஆலோசனைகளை தமிழில் அறிந்துகொள்ள அரும்பெரும் சந்தர்ப்பம்!

விண்ணப்பங்களை சரியாக நிரப்பிக்கொள்ளவும் உங்களுடைய முறையீடுகளை DWP லுள்ள மூத்த அதிகாரிகளுடைய கவனத்திற்கு கொண்டுவரவும் உதவும் ஒரு அணுகுமுறை தொடர்புகொள்ள... தர்மராஜா - 07949 219 008

Pension Credit
Disability
Living Allowance
Incapacity benefit carer's allowance-Income support
Attendance to DSS Benefits Reviews & Appeals to Social Security Tribunals

GANAPATHY
FOOD & WINE

உங்களுக்குத் தேவையான சகல உடன் மீன் மரக்கறி வகைகள் உணவுப் பொருட்கள் மற்றும் பழ வகைகளையும் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்....

GANAPATHY FOOD & WINE
10 Churchfield Road, Acton, London W3 6E
Tel: 020 8992 0789 Fax: 020 8932 2029

ஒரு பேப்பர் ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £18 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name:

Address :

Postcode:

Telephone:

Email:

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £18 க்கு "Jasmine Studio Ltd." ன் பெயரில் காசோலையினையும், Oru Paper, 45'B' Crusoe Road, Mitcham, Surrey CR4 3LJ, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தலையாய தலை

கே. எஸ். பாலச்சந்திரன்
(ஒரு பேப்பருக்காக)

நான் அந்த கடையைத் தாண்டும்போது தற்செயலாகப் பார்ப்பது போல உள்ளே இருப்பவர்களைப் பார்ப்ப துண்டு. பெரிய விசாலமான சோபாக்களில் தங்கள் விசாலமான உடம்புகளைப் பரப்பிக் கொண்டு (இப்படிச் சொல்வது சற்றுச் சிரமமாகத்தானிருந்தாலும் வேறு பொருத்தமான சொல் ஞாபகத்திற்கு வரவில்லை) அரைகுறைத் தூக்கத்தடன் கண்களை சுருக்கிக் கொண்டு, கையிலுள்ள புத்தகங்களில் பார்வையை அரைகுறை மனதுடன் செலுத்திக்கொண்டு, அடிக்கடி உட்புறமாகப் பார்த்துக் கொண்டு (இப்படி இன்னமும் பல கொண்டுகளுடன்) அவர்கள் காத்திருப்பார்கள்.

'Waiting for Godot' என்ற நாடகத்தில் வரும் பாத்திரங்களைப் போல அவர்கள் காத்திருந்தார்கள். உள்ளிருந்து ஒருவர் வர, அவசரவசரமாக இவர்கள் எழுந்து உள்ளே போவார்கள். உழுத வயல்களில் வரம்புகள் 'கட்டியது போன்ற தோற்றத்துடன், மிகச் சிறிதாகப் பின்னிய சிகையலங்காரத்துடன் போகின்ற வர்கள், ஏதோ சாதித்துவிட்ட முகபாவத்துடன் இவர்களைக் கடந்து போவார்கள்.

அது அவர்களது சிகையலங்காரம். எண்ணெய் வைத்து வாரி இழுத்த, நடு உச்சி பிரித்த எங்கள் சிகையலங்காரம் அவர்களுக்கு புதினமாகக் கூட இருக்கலாம். அதைப் பார்த்து அவர்கள் நமட்டுச் சிரிப்பு சிரிப்பது போல எனக்கு சிலவேளைகளில் படுவதுமுண்டு.

'கிட்டிப்புள்' பட்ட காயம், சைக்கிள் பழகியபோது விழுந்து ஏற்பட்ட காயம் எனப்படும் 'வீரத் தழும்பு'களெல்லாம் மண்டையில் தெரியும் காலம் இது

எங்கள் காலத்தில் சிகையங்காரம் என்பது ஒரேயொரு பிரிவில் அடங்கும். 'பொலிஸ் குறொப்' என்ற வகைதான். மொட்டை அடித்துக் கொள்வதற்கு கிட்டியதாக இருக்கும். 'கிட்டிப்புள்' பட்ட காயம், சைக்கிள் பழகியபோது விழுந்து ஏற்பட்ட காயம் எனப்படும் 'வீரத் தழும்பு'களெல்லாம் மண்டையில் தெரியும் காலம் இது.

சின்ன வயதில் மிகுந்த பயத்துடன் அவரது வருகையை எதிர் கொள்வோம். காரணம் - அவர் கையில் புழங்கும் ஆயுதங்கள். கத்திரிக்கோல், றேசர் கத்தி, மண்டையில் விறாண்டும் கூர்ப்பல்லுச் சீப்பு எனப்படுவன. யாரிடமும் முடி வெட்டிக் கொள்வதற்கு போகும் அவசியம் இல்லாத வழுக்கைத் தலை, முழங்கால் தெரிய உயர்த்திக் கட்டிய நாலு முழம், அதற்கு மேலால் தெரியும் சிறிய முட்டி போன்ற வண்டி (வயிறு) - ஒழுங்கைக்குள்ளால் வரும்போதே ஏதோ ஒரு பாட்டுடன்தான் வருவார். அது அவர் பாடவில்லை. உள்ளுக்குள் போன பனம் பானம் பண்ணுகிற வேலைதான் என்று எங்களுக்குத் தெரியும்.

எங்கள் வீட்டு முற்றத்தில் நின்று, 'என்ன தம்பியவை' என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டு நேராக எங்கள் வீட்டுப் பின்வளவுக்குப் போய் விடுவார். அதுதான் அவருடைய சமஸ்தானம் மாதிரி. நானும் தம்பிமாரும், வெறும் மேலுடன், சாறத்துடன் போய் அடிவளவில் இருக்கும் வேப்ப மர நிழலில் குந்தியிருப்போம்.

ஒவ்வொருவராக அழைத்து தனக்கு முன்னால் குந்தியிருக்கச் செய்தோ அல்லது நின்ற நிலையிலோ முடிவெட்டத் தொடங்குவார். தொடங்கிய இரண்டாவது நிமிடமே, ஏதாவது கதை சொல்லத் தொடங்குவார். கதை சுவாரஸ்யமாக இருக்கிறதோ இல்லையோ அவர் நிறுத்தும் இடங்களில் நாங்கள் 'ம்' சொல்லவேண்டும். மறந்து போய் இருந்து விட்டால், எங்கள் தலையில் சிறிய அழுத்தம் பிரயோகித்து எங்கள் கவனத்தை எடுத்துக் கொள்வார்.

சில சந்தர்ப்பங்களில் அப்பாவும் வந்து சேர்ந்து கொள்ள, அவர் தன் கதையை திசை திருப்பி, வெளியூர்களில் தொழில் நிமித்தமாக தங்கியிருந்த பொழுது ஏற்பட்ட அனுபவங்களை சொல்லத் தொடங்குவார். அயல்மொழி தனக்குத் தண்ணி பட்ட பாடு என்று சொல்லி சில வார்த்தைப் பிரயோகங்களைச் சொல்லிக் காட்டுவார். நாலைந்து சொற்களையே மாற்றி மாற்றிச் சொல்லி நீள வசனங்கள் பேசுவதாகப் பாவனை செய்தார் என்பது பிறகு எங்களுக்குத் தெரிய வந்தது.

அவரது கற்பனையின் உச்சம் என்று சொன்னால், நாட்டின் தேசாதிபதிக்கு தன் தொழிற்றிறன் மீதுள்ள நம்பிக்கையைப் பற்றி சொல்வதை எடுத்துக் கொள்ளலாம். அந்தப் பெருமகன் என்ன முக்கிய சந்தர்ப்பங்கள் வந்தாலும் தனக்கு ஆள்விட்டு கூப்பிட்டு தன்னிடம் முடிவெட்டிக் கொண்டுதான் அடுத்த காரியம் செய்வாராம். தரும் கூலி தங்க நாணயங்களாம். எல்லாவற்றையும் முடிச்சாகக் கட்டி வைத்த இடத்தில், கூடத் தங்கியிருந்தவன் அதை திருடிக் கொண்டு போய்விட்டானாம். என்ன இருந்தாலும் செய்தவன் சொந்தக்காரன் என்றபடியால் தான் அவனை 'மன்னித்தோம். மறப்போம்' என்று விட்டதாகவும் சொல்லிக் கொண்டே போவார். அடுத்த முறை சொல்லும் பொழுது, கதை மாறி விடும். தங்க நாணயங்கள் வெள்ளி நாணயங்களாகி விடும். ஓடும் ரெயினிலே களவு நடந்ததாகச் சொல்வார். இவற்றை நம்புவது, நம்பாமல் விடுவதொன்றும் பிரச்சினையில்லை. பிடரியில் கத்தி வைத்திருக்கும் போது நம்பவில்லை என்று சொல்வதின் சிரமம் அனுபவித்தவர்களுக்குத்தான் புரியும்.

வெட்டி முடிந்ததின் பின்னர் வியர்த்த உடம்பில் மயிர் பிசுபிசுக்க, நேராக வீட்டுக் கிணற்றடிக்குப் போய், அப்பா அள்ளி வார்க்க முழுகி, துடைத்து கண்ணாடியில் பார்க்க, தலையில் சீப்பினால் கஷ்டப்பட்டு வைத்த 'கிறில்' (Curl) இருந்த அடையாளமே இல்லாமல், காணாமல் போய், சட்டி கவிழ்த்து விட்டது போல - அழுகை அழுகையாக வரும்.

சிலகாலத்தின் பின்னர், ஒருநாள் அப்பா என்னையும், தம்பியையும் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு எங்கள் குட்டி ரவுணுக்கு போனார். போகும்போதுதான் அங்கு புதிதாக வந்திருக்கும் சலூனில் முடிவெட்டப் போகிறோம் என்று தெரியவந்தது. சட்டென்று அவரின் முகமும், அழுக்கான நாலுமுழமும், ஒரு பக்க நுனி உடைந்துபோன கத்திரிக்கோலும் ஞாபகத்திற்கு வந்து போயின. புது அனுபவம் பெறப் போகிறோம் என்ற இளம் வயதின் ஆர்வத்தில் அப்போது எனக்கு அந்த நினைவும் பெரிய இழப்பாகப் படவில்லை.

போன இடம் மிகுந்த கவர்ச்சியானதாகத் தெரிந்தது. பல புதிய வாசங்களின் (மணங்களின்) சங்கமம் எங்களை வரவேற்றது. பெரிய கண்ணாடிகள், உயர்ந்த கதிரைகள், நாலாபக்கச் சுவர்களில் எஸ்.டி.சுப்புலட்சுமி, சந்தானலட்சுமி போன்ற அக்கால கனவுக் கன்னிகள் உறைந்து போன சிரிப்புகளுடன் இருந்தார்கள். தலைமயிரால் பிரசித்தி பெற்றவர்களின் முகம் தெரியாத பிடரிப் படங்கள் ஆங்காங்கு ஒட்டப்பட்டிருந்தன.

கத்திரிக்கோல் 'கிறுக் கிறுக்' கென்று நறுக்குவது கேட்கிறது. பிடரியில் ஏதோ குறுகுறுக்கிறது

உரிமையாளர் வேற்று ஊரில் தொழில் பார்த்துவிட்டு வந்தவர் என்று பார்த்த உடனேயே தெரிந்தது. வெள்ளை அரைக்கை சேர்ட், அதை உள்வாங்கிய நீலக்கோடுள்ள வெள்ளைச்சாறம், இடுப்பில் கட்டிய வெள்ளிப் பட்டி (பெல்ட்), வாயில் ஒரு தங்கப்பல். சிரிக்கத்தான் செய்தார். ஆனால் அதில் அன்னியோன்யம் தெரியவில்லை.

அப்பாவின் உதவியுடன் உயர்ந்த கதிரைகளில் ஏறி இருந்து கொண்ட எங்களின் தலைகளில் வெகு நேரமாக ஏதோ 'ஜிகினா' வேலைப்பாடு செய்வதைப் போல பளபளக்கும் கத்திரிக்கோலினால் நறுக்கினார். கிடுக்கி போன்ற கருவியினால் பிடரியை கொஞ்சம் கூடுதலாகவே உயர்த்தி விட்டார். வாசமுள்ள ஒரு ஸ்படிகக் கல்லினால் காதின் பின்பக்கத்திலும் பிடரியிலும் தடவி விட்டார். குளிர்ந்தது. சிலிர்த்துக் கொண்டோம். வெள்ளைத் துவாயினால் தலையிலும் சேர்ட்டிலும் (வெறும் மேனி இல்லை) தட்டி விட்டார். அப்பா கொடுத்த காசை வாங்கி லாச்சிக்குள் போட்டு விடை கொடுத்தார். மிச்சக்காசு ஏதாவது இருக்கும் என்று நினைத்து ஏமாந்த முகபாவம் அப்பாவின் முகத்தில் தெரிந்தது. கண்ணாடியில் பார்த்துக் கொண்டேன். சட்டி கவிழ்த்ததிற்குப் பதிலாக சதுரப்பெட்டி கவிழ்த்தது போலிருந்தது.

'அவர்' காலவெள்ளத்தில் கரைந்து போய் விட்டார். அந்த கத்திரிக்கோல் 'கிறுக் கிறுக்' கென்று நறுக்குவது கேட்கிறது. பிடரியில் ஏதோ குறுகுறுக்கிறது. தடவிக் கொள்கிறேன்.

SHOP 4 SALE
Taking 9,000 per week
Rent 8,500 per year
Lottery & Bus Pass
Contact Baskaran on **07920 515 724**
விற்பனைக்கு நல்லதொரு கடை!

ஸ்ரீமதி யோகா தில்லைநாதன்
14வது ஆண்டாக மேடையேற்றும்
கானக்குயில் 2006

போட்டியில் பாடவிரும்பும் 16 வயதிற்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் ஒரு Audio Cassette இல் ஒரு சினிமாப் பாடலை இசையின்றிப் பாடி குரல் பரிசோதனைக்காக உங்கள் பெயர், விலாசம், வயது, தொலைபேசி எண் போன்ற விபரங்களுடன் அனுப்பிவையுங்கள்.

முடிவு திகதி **14.04.2006**

எமது தொலைபேசி : **020 8390 5823**
Audio Cassette அனுப்ப வேண்டிய முகவரி
Ganakkuyil, P.O. Box 318, New Malden, KT3 3WT

July 1ம் திகதி சனிக்கிழமை மாலை 8 மணிக்கு **University of London, Logan Hall, London WC1**ல் நடைபெறுகிறது.

FLAT FOR SALE
வெள்ளவத்தையில் Galle ரோட்டருகில் ருத்ரா மாவத்தையில் 1st Floor, விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு: **0788301431 0**

RAISE FUNDING FOR THE DEVELOPMENT OF JAFFNA HOSPITAL/UNIVERSITY

Donation contributions for the development of Hospitals, University and Industries in Nothern Province are acceptable by Dr.S.Kasinathan, Industrial Research Project Co-ordinator, Herbal Nutrition Consultant/Xeno-biotic Metabolism Specialist. Courses for undergraduate, postgraduate in drug metabolism.

Postal address: Biochem & amp, Pharmax,
6 Newhaven Close, Hayes,Middlesex UB3 4PS, UK.

Contact Tel: 020 8569 0102
s_ kasinathan@hotmail.com

SHOP ON LEASE FOR SALE
LARGE SHOP
- Excellent Location and No Competition
- Outskirts of Hitchin Town Centre
- Fully fitted, Very small premium

'First Come First Served'
Please Call
Kethis On **07845 019 837**
Raku On **07949 663 582**

STATION CARS
Popular Mini Cab Service
by the side of Surbition Railway Station
Drivers wanted
Only those with PCO
Then call us advance!
Tel: 020 8390 3030
PCO உடன் Licence உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

உலகத்திற்கே அருள் தரும் அம்பாள்! நகை சாம்ராஜ்யத்திற்கே நாயகி!

அம்பாள் ஜுவெல்லர்ஸ்

The Leaders in 22k Gold Jewellery & Diamonds

பொன்னுருக்களுக்கான ஒழுங்குகள் செய்து தரப்படும்

AMBAL JEWELLERS

176, Upper Tooting Road, Tooting, London SW17 7ER
Tel: **020 8672 9955** Fax: **020 8672 7097**
784, London Road, Thornton Heath, Surrey CR4 6JB
Tel: **020 8689 8293** Fax: **020 8684 0323**
Web: www.ambal-jewellers.com www.mymailonline.com
email: info@ambal-jewellers.com

தரமான சேவை! நியாயமான கட்டணம்!

THURAI & CO
Accountants

Comprehensive Accounting & Tax Service

- Personal Tax
- Capital Tax
- Corporation Tax
- Business Advice
- Value Added Tax

9A, Arnold Road, Oxford, OX4 4BH
Tel: **01865 247 109**

நம்பிக்கையும் உத்தரவாதமும் நிறைந்த சிநேக பூர்வமான சேவை

A1 AUTO CENTRES

Tyres Alloys Exhausts Shocks
Batteries Brakes Servicing

- 4 Wheel Electronic Alignment
- Brake Pads Replacement
- Alloy Wheels
- Powerflow Stainless Steel Exhaust System for any Car

Come in for Routine Check and Regular Service

Best Deal in Town

4 Bowman Trading Estates, Westmorland Rd, Kingsbury, NW9 (Next to Morrisons) Tel: 020 8204 6868

NEED A NO NONSENSE
MORTGAGE ADVISOR?

Select
Mortgage Solutions

RESIDENTIAL AND COMMERCIAL MORTGAGES
MORTGAGES ARRANGED WITH LOW DEPOSITS EVEN WITH NO DEPOSIT
ALWAYS REACHABLE QUALIFIED ADVISORS

£500*

fixed arrangement fee of £ 500 payable on the day of completion on selected products. Written conditions available on request.

SELECT MORTGAGE SOLUTIONS IS DIRECTLY AUTHORISED AND REGULATED BY THE FANANCIAL SERVICES AUTHORITY
YOUR HOME IS AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENT OF MOTGAGES OR OTHER LOANS SECURED ON IT

020 8548 0006

EAST HAM BRANCH
288 HIGH STREET NORTH
LONDON E12 6SA

ILFORD BRANCH
126 HORNS ROAD, ILFORD
ESSEX IG2 6BL

Chennai Dosa

new branches Opening Soon!

the highest number of Dosa & Idli sellers in Europe

DONT MISS! the 6 foot Family Dosa!

We are part of the ChennaiDosa Group, and we are not associated with any other restaurant with a similar name

Our Branches:

353 High Street North
Manor Park, London E12 6PQ
Tel: +44 (0)20 8586 7729
Fax: +44 (0)20 8586 8494
Email: sales@chennaidosa.com

339 High Street North
Manor Park, London E12 6PQ
Tel: +44 (0)20 8470 6566
Fax: +44 (0)709 2863 068

239-241 London Road
West Croydon
Surrey CR0 2RL
T: +44 (0)20 8665 9192
F: +44 (0)20 8665 1070
E: sales@chennaidosa.com

Opening Soon:

177 High Street North
East Ham
Call 020 8902 1104 or 020 8902 1707

உங்கள் நோய்க்கு ஏற்ப அனுபவம் மிக்க பிரத்தியேக ஆலோசனைகளுக்கும்,
மருத்துவ சிகிச்சைக்கும் கேரளா ஆயுற்வேத மூலிகை மருத்துவரை நாடுங்கள்

Massage therapies by experienced and highly skilled therapists
Treatment is designed around your individual health needs
Only natural herbal medicines are used
No side effects at all
Wide range of therapies

- ✓ Frozen Shoulder
- ✓ Digestive Disorders
- ✓ High Blood Pressure
- ✓ Pulled Muscles
- ✓ High Cholesterol
- ✓ Trapped Nerve
- ✓ Paralytic Conditons

- ✓ Stress and Strain
- ✓ Back Pain
- ✓ Joint Pain
- ✓ Diabetes
- ✓ Migraine
- ✓ Stiffness
- ✓ Arthritis

Male & Female therapists availble
We Can also speak in Hindi,
Tamil and Malayalam



Open 7 days a week

1 Odeon Parade, Sudbury Heights Avenue, Greenford, Middlesex UB6 0NA
5 mins walk from Sudbury town - Piccadilly line **www.kahc.co.uk**

கொஞ்சம் அலசி ஆராய்வோமா?

சில மாதங்களுக்கு முன்பு வெளிவந்த ஒரு பேப்பரில் திரு. எல்லாளன் தனது சிந்தையில் வழக்கம் போல எழுந்த கேள்வி ஒன்றை முன்வைத்தார். அதாவது 'ஏன் இந்தியாவுக்கு எல்லோரும் ஓடுகிறார்கள்? என்று கொஞ்சம் யோசிக்கச் சொன்னார். இதனைப்பற்றி ஒரு புத்தகமே எழுதலாம். அவ்வளவு பெரிய விசயம் இது.

மக்களோ அல்லது எந்த உயிரினமோ எங்கே தங்கள் தேவையை நிறைவுசெய்ய முடியுமோ அங்கே ஓடுவது இயற்கை. தேனீக்கள் தேனை எடுக்கப் பூக்களை நாடிப்பறக்கின்றன. பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கப் பொருத்தமான இடத்தைத் தேடிச் செல்கின்றன. சில பறவைகள் வேறு நாட்டிற்குச் செல்கின்றனவாம். (தென்னாபிரிக்காவுக்கு நான் ஒரு முறை சென்றிருந்தபோது அங்கே ஒரு கடற்கரையோரமாக நின்ற மரங்களில் ஆயிரக்கணக்கான குருவிக் கூடுகள் தொங்கிக் கொண்டிருந்தன. குறிப்பிட்ட பறவையினம் கோடைகாலத்தில் அங்கே முட்டையிட வருகின்றனவாம்.) அத்திலாந்திக் சமுத்திரத்தில் வாழும் சில மீன் இனம் முட்டையிட வடகடலுக்கு வருகின்றன. சிங்கம், புலி போன்ற மிருகங்கள் இரைதேடி நீர்நிலைகளுக்குப் பக்கத்திலிருக்கும் பற்றைகளில் பதுங்கியிருந்து அங்கு நீர் குடிக்க வரும் மான் மரைகளைப் பிடிக்கின்றன. ஐந்து அறிவுள்ளவையே இப்படியிருக்கும் போது ஆறறிவு படைத்த 'மனிதன் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அதுவும் நம் தமிழ் மக்களைப் பற்றிச் சொல்லத்தேவையே இல்லை. தனித்தன்மையானவர்களல்லவா?

இந்தியாவில் நாம் பார்க்க வேண்டிய, கேட்க வேண்டிய, அறிய வேண்டிய, வாங்க வேண்டிய பல உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. 'கல்லிலே கலை வண்ணம் கண்டான்' என்பதை மெய்ப்பிப்பதாக அமைந்துள்ள கோயில்கள் கோபுரங்கள் மாளிகைகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்வையானாலும் இன்றும் புதுமெருகுடன் காணப்படுகிறன. குறிப்பாக வட இந்தியாவில் தாஜ்மகால் இன்னும் பல அரசமாளிகைகள் தென்னிந்தியாவில் இருக்கும் பல கோயில்கள் (ஆறுபடை வீடு மதுரை, சிதம்பரம் .போன்றவை) சிற்பக் கலையின் மேன்மையை எடுத்தியம்புகின்றன. வட இந்தியாவில் மாபிள் கற்களும் தென்னிந்தியாவில் கருங்கற்களும் கட்டடக் கலைக்கு மூலப்பொருளாக அமைந்துள்ளன. போக்குவரத்து வசதிகள், இயந்திர வசதிகள் இல்லாத அக்காலத்தில் எத்தகைய தொழில்நுட்பத்தைக் கையாண்டு இத்தகைய உயரமான பலமான அழகான கட்டடங்கள் கட்டப்பட்டன என்பது ஆச்சரியப்படத்தக்க விசயமல்லவா? இன்றும் எங்கு கோயில் கட்டுவதானாலும் இந்தியாவிலிருந்தே சிற்பிகள் வரவழைக்கப்படுகிறார்கள்.

இசைக் கலையைப் பரம்பரையாகத் தொடர்ந்து வளர்த்துவரும் கலைஞர்கள் இந்தியாவில் உள்ளனர். இவர்களின் இசைஞானத்திற்கு ஈடாக வேறெங்கும் எவருமில்லை. அதனால் ஈழத்துக் கலைஞர்களோ வேறெந்த நாட்டினரோ தமது இசையறிவை மேம்படுத்த இந்தியாவை நாடவேண்டிய தேவை உள்ளது. வீணை, மிருதங்கம் போன்ற இசைக்கருவிகளும் அங்கேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே சிறந்த இசைக்கருவிகளைப் பெற்றுக்கொள்ள நாம் அங்கே செல்லவேண்டிய தேவை உள்ளது.

முதன் முதல் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த இடம் மதுரையாகும். (கி.மு.2ம் நூற்றாண்டு-கி?.பி. 3ம் நூற்றாண்டு) அக்காலந்தொட்டே தமிழ்ப் புலவர்கள் அறிஞர்கள் தோன்றித் தமிழை வளர்த்து வந்தனர். அன்றிலிருந்து இன்று வரை பல சிறந்த தமிழ்ப் புத்தங்களை அங்கிருந்து பெறக்கூடியதாக இருக்கிறது. அதுமட்டுமா? திரைப்படத்துறை கடந்த எழுபத்தைந்தாண்டுகளாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. 1950-1975 இடைப்பட்ட காலகட்டத்தில் படிக்காத பாமர மக்களுக்கும் வழிகாட்டும் வகையில் தரமான கருத்துள்ள கதைகளையும் பாட்டுக்களையும் கொண்ட திரைப்படங்கள் வெளிவந்தன. இன்று தொழில்நுட்பத்தில் மிகச் சிறந்து விளங்குகிறது. உலகம் முழுவதும் வாழும் தமிழர் திரைப்படங்களை இன்றும் பார்த்து மகிழ்ந்தே வருகின்றனர். பெண்கள் விரும்பும் தரம் வாய்ந்த பட்டுச்சேலைகள், பிற அலங்கார நகைகள், வீட்டுக்குத் தேவையான அலங்காரப் பொருட்கள், குசினிக்குத் தேவையான பல பொருட்களையும் பெண்கள் போய் வாங்கி வருகிறார்கள். நடன அரங்கேற்றம் செய்யும் பெற்றோர் தவறாது அங்கு சென்று பொருட்களை வாங்கவேண்டிய அவசியம் உள்ளது.

இங்கிருந்து ஊருக்குப் போக விசா இல்லாதவர்கள் இந்தியாவிற்குச் சென்று ஊரிலிருந்து பெண்ணை அழைத்துத் திருமணம் செய்துள்ளனர். மேலும் அதிக காலம் சந்திக்க முடியாத பெற்றோர் சகோதரர்களையும் இந்தியாவிற்குச் சென்றே பார்த்து வருகின்றனர்.

முடிவாக மேலே கூறப்பட்ட எல்லா விசயத்திலும் நாம் தன்னிறைவு காணும் நிலை வரும்போது இந்தியா ஓட வேண்டிய தேவை இல்லாமல் போகக்கூடும். நமது நாட்டில் வாழும்போது நாம் பொருளாதாரப் பற்றாக்குறையோடு வாழ்ந்தோம். வெளிநாடுகளில் பொருளாதார வசதியோடு வாழ்கிறோம். இப்போ எம்மவரால் எவ்வளவோ சாதிக்க முடியும். பெற்றோர்கள் கலை கலாச்சாரத்தை வளர்க்கப் பெரிதும் முயற்சிக்கிறார்கள். திரைப்படங்களும் வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. என்றோ ஒரு நாள் முயற்சி திருவினையாகலாம் எல்லாளன் எண்ணம் போல.

- தவம்

செந்தமிழ் பிளீஸ்!

உங்களுடைய பத்திரிகையை நீண்ட காலமாக தொடர்ந்து வாசித்து வருகின்றேன். இப்பத்திரிகை தரமானதாகவும் பல்துறை சார்ந்ததாகவும் இளையவர்களையும் இணைத்து செல்வது குறிப்பிடத்தக்கது. பத்திரிகைகள் வெளியீடுகளில் பண்பையும், மொழியின் தரத்தையும் கடைப்பிடிக்க வேண்டுமென்பதில் நம்பிக்கையுள்ளவன். பூராயம் என்ற பகுதியில் பெரும்பாலாகவும் ஏனைய பகுதிகளில் பரவலாகவும் எழுத்து நடை தரமற்றதாகவும், பண்பற்ற முறையிலும் காணப்படுகின்றது. இவற்றை அப்படியே வெளியிடுவதன் மூலம் மற்றவர்களையும் இவ்வாறு எழுத தூண்டுகின்றது. எனவே இவற்றை தணிக்கை செய்து வெளியிடலாம் அல்லது வெளியிட மாட்டோமென குறிப்பிடலாம்.

நீங்கள் பத்திரிகை வழங்கும் வியாபார நிலையங்கள் எல்லோரும் ஒரே மாதிரியானவர்கள் அல்ல. சிலர் பத்திரிகைகளை வெளியில் தெரியக் கூடியதாக வைப்பதும் இல்லை. அவை வாசகர்களுக்கு போய்ச் சேருவதுமில்லை. எனவே உங்களது பத்திரிகைக்கு மதிப்பளித்து விநியோகிப்பவர்களுக்கு மட்டும் வழங்குவதன் மூலம் அவை வாசகர்களுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்தலாம்.

தங்களது முயற்சி தொடர்ந்து நடைபெற வேண்டும். அதற்கு எம் போன்றோரின் ஆதரவு என்றும் இருக்கும்.

- பத்மநாதன்

விருந்தினர் வந்தால் . . .

ராதா
(ஒரு பேப்பருக்காக)

ஒடியல் கூழ்

தேவையான பொருட்கள்:

ஒடியல் மா	- ½ kg
மீன்	- 1 kg
நண்டு	- 6 துண்டுகள்
இறால்	- ¼ kg
கணவாய்	- ¼ kg
பயிற்றங்காய் [1 அங்குல நீள துண்டுகள்]	- 250g
பலாக்கொட்டைகள் [கோது நீக்கி பாதியாக வெட்டியது]	- 25
பலாச்சுளைகள்	- 15 வெட்டியது
அரிசி	- 50g
செத்தல் மிளகாய்	- 15 அரைத்தது
பழப்புளி	- 100g
உப்பு	- சுவைக்கேற்ப

செய்முறை:

முதலில் ஒடியல் மாவை ஓரளவு நீர்விட்டு ஊறவிடவும். நீரில் மிதக்கும் தும்புகளை அகற்றி மாவை நன்றாக நீரில் கரைக்கவும். அகண்ட பெரிய பாத்திரத்தில் போதியளவு நீர்விட்டு கொதிக்க வைக்கவும். அதனுள் கழுவிய அரிசி, பயிற்றங்காய், பலாக் கொட்டைகள், மீன் துண்டுகள், மீன் தலைகள், நண்டு, இறால், கணவாய் ஆகியவற்றை போட்டு நன்றாக அவிய விடவும். நன்றாக அவிந்ததும் பலாச் சுளைகளையும் வெட்டிப் போட்டுக் கொள்ளவும். எல்லாம் நன்றாக அவிந்ததும் ஒடியல் மா, அரைத்து வைத்துள்ள மிளகாய், கரைத்தபுளி என்பவற்றை போட்டு கலந்து சுவைக்கேற்ப உப்புச் சேர்த்து குறைந்த நெருப்பில் வைத்து கூழ் தடிப்பானதும் சூடாக பரிமாறவும்.

Grace அக்கா வீட்டு Kitchen . . .

கிரேஸ் அக்கா
(ஒரு பேப்பருக்காக)

தோசை

தேவையான பொருட்கள்

2 சுண்டு உளுத்தம் பருப்பு
4 சுண்டு Broken Basmathi
சிறிது வெந்தயம்
சிறிது Dry yeast
2 தே.க. Bi-Carbonate soda
சிறிது சோறு

செய்முறை:

தோசைக்கு . . .

அரிசி, உழுத்தம் பருப்பு, வெந்தயம் மூன்றையும் 5 மணித்தியாலம் ஊற விடவும். மூன்றையும் சோற்றுடன் ஒன்றாக பட்டுப் போல் அரைத்தெடுக்கவும். ஒரு பாத்திரத்தில் சிறு அளவாக yeast, Bi-Carbonate soda சிறிது மஞ்சள் சேர்த்து நன்கு குழைத்து சிறிது வெப்பமான இடத்தில் (உ-ம்: Oven) இரவு முழுவதும் வைக்கவும். அடுத்த நாள் மாலை நன்கு பொங்கி வந்ததும் அளவாக உப்புக் கலந்து வெங்காயம், கடுகு, கறிவேப்பிலை தாளித்து சேர்த்ததும் தோசைக் கலவை தயார்.

சட்னி

தேவையான பொருட்கள்

20 காய்ந்த மிளகாய் வெங்காயம்
1 துருவிய தேங்காய்
கறிவேப்பிலை தாளிக்க
அளவாக உப்பு, புளி, சிறிது கடுகு
சிறிது எண்ணெய்

சட்னிக்கு . . .

காய்ந்த மிளகாயை சிறிது எண்ணெயில் பொரித்தெடுக்கவும். பொரிந்த மிளகாயுடன் முதலில் சிறிது தேங்காய் துருவல் சேர்த்து மிளகாயை நன்கு அரைக்கவும். பிறகு சிறிது சிறிதாக தேய்காயை சேர்த்து நன்கு அரைத்து அளவாக உப்பு, சிறிது கறிவேப்பிலை, நறுக்கிய வெங்காயம் சேர்த்து நன்கு அரைக்கவும். இறுதியில் அளவாக புளி சேர்த்து, சுடுநீரும் சேர்த்து அரைத்து சட்னி பதமாக வந்ததும் ஓர் பாத்திரத்தில் எடுத்து வெங்காயம், கடுகு, கறிவேப்பிலை தாளித்துக் கொட்டினால் சுவையான சட்னி தயார். அவரவர் ருசிக்கேற்ப உறைப்பை கூட்டிக் குறைக்கலாம்.

சுடுவது எப்படி . . . .

தோசைக்கல் or Non Stick pan அடுப்பில் வைத்து சூடாகியதும் எண்ணெய் பூசி தோசையை வார்த்து எடுத்து சட்னியுடன் சுடச்சுட பரிமாறவும்.

MATHS TUITION
Home visit Classes for all grade Students (any standard) / Anywhere in London

The teaching will be started from the basic Mathematics according to student's standard.
A new different teaching method with higher standard to prepare students for exam.
Lots of short cuts & easy methods to save time in the exam & get a good result.
Higher standard (exam similar) questions will be exercised in the class

Grade	Individual classes	Group classes				2 Year's past paper classes	2 Model paper classes (Higher std.)
		2 Students	3 Students	4 Students	5 Students		
Year - 5(11+), -9(sats), 10 GCSE O\L & GCE A\L	£12.50 per hr	£22.50 per hr	£30.50 per hr	£36.50 per hr	£40.50 per hr	Free	Free
Year - 6, -7, -8 & Other Classes	£10 per hr	£18 per hr	£24 per hr	£28 per hr	£30 per hr	Free	Half charges

The above offer is valid for students who are starting classes before 31st March
Classes held by **T.SATHISH** B.Sc (Hon)
Tel: **0122 7278513** Mob: **07717 121 072**

Course work உதவியுடன்
உங்கள் வீடு தேடி வந்து
பாடங்களை கற்பிக்க...

LETTERS TO THE EDITOR

எவண்டா அவன் பவா?

கலோ பவா!

நான் தங்களின் கனடா போஸ்ட் பார்த்தேன்.. சும்மா பெட்டையளை குறை சொல்லாதையுங்கோ! ஊரில இருக்கிற எல்லாப் பெட்டையளும் கறுப்புப் பொட்டும் குடையோடையும் குனிந்த தலை நிமிராமல் திரியினம் என்டு எழுதியிருப்பதை பார்க்க சிரிப்புதான் வருது.. நீங்கள் பார்த்த எல்லாப் பெட்டையளும் இப்படியென்றால் அண்மையில் வவுனியா நகரில் நடந்த கணக்கெடுப்பில் தந்தையில்லாத பிள்ளைகளின் பிறப்பு இப்போ அதிகமாம்.. இப்படி கேவலங்களும் ஊரில நடக்கத் தான் செய்கிறது. (சில நேரம் இரவில் கடவுள் வந்து பிள்ளையை பெண்ணின் வயிற்றில் வைத்து விட்டுப் போகிறாரோ தெரியவில்லை?)

இங்குள்ள ஆண்களின் வெட்கம் கெட்ட வாழ்க்கையை யார் சொல்லி அழுவது? 2 மனைவி, 2 காதலிகள் etc... etc... இப்படி எத்தனை வேதனை தரும் சம்பவங்கள்...

ஊரில் பெண் பார்த்துக் கலியாணம்... இங்கே முதலே பல காதல் லீலைகள்... இவர்கள் மட்டும் இராமன் என்று எண்ணம்... இப்படி பல பல.. இதை யாரிடம் சொல்லி அழ...

புதிதாய் மணம் முடித்து வரும் மனைவியை துன்பப்படுத்தல்... இங்கை நாகரீகம் புரியாமல் தவிக்கும் மனைவியை கிண்டலடித்து மன உளைச்சலை ஏற்படுத்தி அந்த சூழலில் தன் ஆசையை நிறைவேற்ற வேறு பெண்களோடு தொடர்பை வைத்திருக்கும் ஆண்மக்களை வெளிச்சத்துக்கு கொண்டு வந்திருக்கிறது ஒரு அமெரிக்க அமைப்பு. அண்மையில் என்னால் ஒரு அமெரிக்க பத்திரிகை ஒன்றில் வெளிவந்ததை உதாரணம் காட்டமுடியும்.

நீங்கள் இங்கு அலைவதாகக் குறிப்பிடும் பெண்கள் ஆண்களே இல்லாமலா கெட்டுப் போகிறார்கள்? உங்களைப் போன்ற ஆண்கள் தானே, ஆசைகளை அள்ளி வழங்கி அதில் இளமையை குளிர்காய வைத்துவிட்டு பத்தினிப் பெண்கள் தேடி தாய் நாட்டுக்குப் போகிறார்கள்..

இதில் இருக்கிற ஒரு வேடிக்கையை அண்ணல் நீங்கள் மறந்ததை நினைக்க ஆச்சரியமாய் இருக்கு...

பெரியவரே! தங்கள் துணைவியார் இங்கு கனடா வந்து உங்களுடன் குப்பைகொட்டி அதன் பலனாய் தங்களுக்கு பெண் குழந்தை பிறந்தால் என்ன ஊருக்கு அனுப்பி இமைக்கு நடுவில் கறுப்பு பொட்டு வைச்சே வளர்க்கப் போறீங்கள்? எனக்கெண்டால் இது விளங்கேல்லை.. உங்களுக்கு மட்டும் புனிதமாய் பத்தினி வேணும்.. அப்ப உங்கடை பிள்ளைகளுக்கு? நினைக்க சிரிப்புதான் வருது!

அங்கையிருந்து வாற பெட்டைகளும் 1 வருசத்தில வெளிநாட்டு தண்ணி மாற்றிப் போடும். பிறகு அதுகளும் நீங்கள் சொன்ன மாதிரி அவுத்துவிட்ட மாடுகள் தான். ஒரு வருச கூத்துக்குத் தானே இவ்வளவு கேவலமாய் கதை அளக்கிறியள்? பாவம் நீங்கள்.

பவா.. நீ எழுதவேணும் எண்டதுக்காய் என்ன எழுதுறன் எண்டு யோசிக்காமல் எழுதாதை.. எல்லோரும் கண்ணகியும் இல்லை.. எல்லோரும் மாதவிகளும் இல்லை.. பெண்களின் வாழ்க்கை திசை மாறிப் போக உங்களைப் போன்ற ஆண்கள் தான் காரணம் என்பதை மறக்காதையுங்கோ. கோபுரத்தில் இருக்க வேண்டிய எத்தனை பெண்பிள்ளைகள் இன்று நடுவீதியில் நாதியற்று திரியுதுகள். போடா நீயும் உன்ரை கடிதமும்...

பெண்களைப் பத்தி கேவலமா எழுதின இந்தக் கடிதத்தை வெளியிட்ட ஒரு பேப்பர் ஆசிரியரிண்ட மண்டைக்குள்ள என்ன இருக்குதோ தெரியாது. பத்திரிகையில என்ன பிரசுரிக்கிறது, என்ன பிரசுரிக்கக் கூடாது எண்டு கூடத் தெரியாதவங்களெல்லாம் ஆசிரியரானா இந்த நிலமைதான். இந்தக் கேவலங்களை நாங்க எந்தப் பேப்பரில போடுறது?

உந்தப் பத்திரிகையில கொஞ்ச மரியாதை மனதுக்குள்ள இருந்துச்சு.. இப்போ அப்படி நினைச்சதே கேவலமாய் தெரியுது...

இப்படிக்கு,
ஒரு பாவப்பட்ட கனடியப் பெண்.

தூய தமிழ்

தமிழன் தமிழில் பேசவேண்டும் என்பது ஒன்று. ஆனால் அவன் எழுதும்போது தூய தமிழில் எழுத வேண்டும் என்பது இன்னொன்று. பேசுவது சுலபம். ஒத்தசொல் வராவிட்டால் அந்தச் சொல் உணர்த்த வேண்டிய பொருளை விளக்கிக் கூறிவிடலாம். தூய தமிழில் எழுதும்போது பல இடங்களில் ஒத்த தூய தமிழ்ச் சொல் வராது. தெரிந்திருக்கும் சொற்கள் கூட ஞாபகத்தில் வரமாட்டா. ஆகையால் தூய தமிழில் எழுத விரும்பும் நாம் எல்லோரும் எம் சொல்வளத்தை முதலில் பெருக்க வேண்டும். எவை தமிழ்ச்சொற்கள் என்று சந்தேகத்துக்கிடமின்றி தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

நல்ல தமிழில் எழுத வேண்டுமென்ற இயக்கத்தை ஆரம்பித்த முன்னோடிகளான பரிதிமாற் கலைஞர் (சூரிய நாராயண சாஸ்திரியார்) மறைமலை அடிகள் (சுவாமி வேதாசலம்) போன்றோர் ஆரம்பத்தில் இயலுமானவரை தமிழ்ச் சொற்களை உபயோகிக்க முயன்றார்களே அன்றி எடுத்த எடுப்பிலேயே தூய தமிழ் என்று இறங்கவில்லை. உதாரணத்திற்கு மன்னிக்கவும், உதாரணம் என்பது தூய தமிழ்ச் சொல் இல்லை. உவமைப் பொருளுக்கு 50 ஆண்டுகளுக்கு முன்பு மோட்டார் சைக்கிள் என்று எழுதாமல் உந்துசுருளி என்று எழுதினால் அது யாருக்குப் புரியும். பேக்கரிக்குப் பதிலாக அப்போ வெதுப்பகம் என்று சொன்னால் எப்படி இருந்திருக்கும்? பரிணாம வளர்ச்சி போல் இதுவும் படிப்படியாகப் புகுத்தவேண்டிய ஒன்று. வேற்று மொழிச் சொற்கள் என்றால் சமஸ்கிருதம் மட்டுமல்ல ஆங்கிலமும் வேற்று மொழிதான். சில ஆண்டுகளுக்கு முன் கொம்பியூட்டருக்கு தமிழ்ச் சொல் என்னவென்று கேட்டால் விழித்திருப்போம். இன்று கணினி என்ற சொல் சாதாரணமாகப் புழக்கத்தில் வந்துவிட்டது.

அடுத்து ஏதோ தூய தமிழ் என்று சொல்லிக் கொண்டு ஆங்கில மாதங்களைக் கூட, உவமைப் பொருளுக்கு ஜனவரி முதலாம் திகதி என்பதை தை முதலாம் திகதி என்று எழுதுகிறார்கள். அப்படியானால் தமிழரின் முக்கிய பண்டிகையான தைப்பொங்கலை தை 14ல் பிறப்பதாகவா எழுதப் போகிறார்கள்.

தூய தமிழ் வரவேற்க வேண்டியதுதான். ஆனால் எப்பவுமே முன் பாதுகாப்புடன் மொழிமாற்றம் செய்யப் பழக வேண்டும்.

- மாசிலாமணி

CROYDON COMMUNITY RELIEF FOUNDATION

This foundation was formed after the initial efforts made by the Croydon Tamil Community Centre and Croydon Academy of Eastern Arts with the support by the Croydon Council. Their endeavour resulted in the building of a centre in Poompuhar, Batticaloa, on the 14th of September 2005, for providing help and facilities. The neglected youths from Batticaloa, most of them the Tsunami victims, benefited by this. The centre aims to provide them with welfare needs and education.

The foundation has more than 7000 Tsunami victims registered with them and they really need our help. With a regular donation of £15 a month, one can sponsor a child. To give them, their daily needs and education. The foundation welcomes those want to do voluntary work in Batticoala and will provide quality accommodation and other needs.

For further details visit
www.croydoncommunity.com

Global Travel Express

Best Prices to Sri Lanka / India

விமானப் பயணத்தின் நிறைவான சேவையை! மலிவான விலையுடன் தருவது Global Travel Express மட்டுமே!

IATA

ATOL 6480 PROTECTED

Colombo From £285+Taxes
Chennai/Bangalore From £255+Taxes
Trivandrum/Trichy From £255+Taxes
Cochin/Calicut From £255+Taxes
Mumbai/Delhi From £230+Taxes
Hyderabad From £295+Taxes

SriLanka Holidays
Flight + Stay in 4* Global Tower Hotel in Colombo Sri Lanka on SriLankan Airline
7 Nights £534
14 Nights £646
Prices include Flights + Accommodation on Twin sharing room + Breakfast & return Airport Transfer in Colombo & excluding ticket taxes.
Valid for between:- 01 March - 30 June 06 Terms & Conditions Apply.

Bangkok From £210+Taxes
Singapore From £299+Taxes
Malaysia From £299+Taxes
Dubai From £180+Taxes
Europe From £26+Taxes
USA/Canada From £140+Taxes

from £79 + Taxes
Summer 2006
2006 கோடைகால விடுமுறைகளுக்கு
Get cheapest tickets to CANADA

0208 731 9000 / 0208 455 9001
For Emergency Travel : 07870 688 495 / 07944 180 218

Main Agents for SriLankan Airlines

SriLankan · Air Sahara · Jet Airways · Air Canada · British Airways · Gulf Air · Etihad · Air India · Air France · Qatar Airways · Emirates · Lufthansa

Global Travel Express
899-901 Finchley Road
London NW11
E.mail : travel@globallanka.co.uk

Terms & Conditions Apply.

சாராயக் கடையும்... சாவிக்காரரும்

மனதோடு ஒட்டி உறவாட எல்லா எண்ணங்களாலும் முடிவதில்லை. எம் விருப்பத்தை மீறியும் எம்முள் அழியாதிருக்க இளமைக்கால நினைவுகளால் மட்டுமே முடிகின்றன.

எம் ஒவ்வொருவரையும் அறியாமல் எமக்குள் இயற்கை சேகரித்து வைத்திருக்கும் இன்பங்கள் அவை.. குப்பைக் கோழியென எம் இதயம், தன் ஆழத்தைக் கிழறிப் பார்க்கும் போதெல்லாம் பேருருவம் கொள்ளும் வாமனத் தனம் கொண்டவை அவை.

எம் தொல்லை பொறுக்காமல் ஒரு பொக்கை வாய்க் கிழவி பொல்லா வார்த்தைகளால் திட்டியபடி, ஊன்றும் பொல்லால் அடிக்கத் துரத்தியிருப்பாள். அவளது இருப்பை இழப்பாய் எண்ணி இன்று ஏங்குகின்றதே இத்யம்.

வீதியில் நடந்து போகையில் குடையாய் நிழல் விரித்து நின்றிருக்கும் ஒரு வீர மரம். வேகமாய் அவ்வழி கடந்து போகையில், வீரமரக் கிளையொன்றில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் ஒரு பறவை, மிகச் சரியாய் எம் தலையைக் குறி வைத்து எச்சமிடும். அவ்வேளை ஏற்படும் எரிச்சலுக்கு அளவிராது.

இன்று எம் தலை ஏங்குகின்றதே.. மீண்டும் அப்பறவை எச்சமிடாதா?

தங்கக் காசுகளின் கலகலப்பாய் இன்னமும் எம் இதயங்கள் சிரித்துக் கொண்டிருக்கக் காரணம் அந்தச் சேகரிப்புகள்தானா?

இளமையை இழந்த ஏக்கமா? இல்லை வாழ்ந்த சூழலை விட்டகன்ற வேதனையா? அல்லது இரண்டுமா? எதுவாயினும் இவைதான் இழந்தவற்றை மீட்டு இன்பம் நுகர ஏதுவாகின்றன.

என் வீடு செல்லும் வீதியில்தான் அவ்வூரின் சாராயக்கடை இருந்தது. நகரக் கடைகளுக்கு மத்தியில் மதுக்கடை இருக்கக் கூடாதாம். யாரோ சொன்ன நினைவு. ஆனாலும் நம்ம ஊர்க் குடிமக்களுக்கு ஒதுக்குப்புறம் மிக வசதியாக இருந்ததால் அது அவர்களுக்குப் பிடித்துப் போயிருந்தது. எம் வீதிவாழ் தாய்க் குலம் ஒரு தடவை 'பெட்டிசம்' கந்தசாமி மூலம் சாராயக் கடையை அகற்றக் கோரி மனு அனுப்பியதாகவும் ஒரு ஞாபகம்.

அந்த சாராயக்கடை முன்பாக வீதியருகில் மூன்று மலைவேம்பு மரங்கள் நின்றிருந்தன. நண்பகலுக்குப் பின்பாக அந்த மர நிழல்கள் களை கட்டிவிடும். மச்ச, மாமிச பொரியல் விற்பனைகளும் அமோகமாக நடக்கும். ஊர்க் குடிமக்கள் பலரும் தம் தகுதி தராதரத்துக்கு ஏற்ப கூட்டம் கூட்டமாக ஆங்காங்கு குழுமியிருப்பர்.

பல ஊர்ப் பெருசுகள் தம் பவிசுகள் பலவற்றைக் கூட்டிக் கொள்வதும் குறைத்துக் கொள்வதும் இங்குதான்.

நாம் பாடசாலை விட்டுச் செல்லும் போது இச் சாராயக் கடையைக் கடந்துதான் செல்ல வேண்டும். அம்மாவின் எச்சரிக்கை அதிகமாக இருந்தாலும், குறிப்பிட்டுச் சொல்லும் படியாக எதுவும் எமக்கு நிகழ்ந்ததில்லை.

சனிக்கிழமை என்பது அச் சாராயக்கடையைப் பொறுத்தவரை செல்வம் கொழிக்கும் நாள். எண்திசைக் குடிமக்களும் கூடும்நாள். பல அடிதடிகளும் ஓரிரு கொலைகளும் அக் கடைக்கு முன்னால் சனிக்கிழமைகளில்தான் நடந்திருக்கின்றன.

- இருவது -

சாராயக்கடை முன்பான என் சனிக்கிழமைப் பயணம் எனக்கு ஒருவகைத் திரில். சைக்களில் அந்த இடத்தை மிக மெதுவாகவே நான் கடப்பேன். போதைக்குப் பின் சுரம் மாறும் குரல்களின் பேச்சு கேட்க ஒருவகை இனிமை தரும்.

ஒரு சனிக்கிழமை. இப்படித்தான் சாராயக் கடையைக் கடக்கின்றேன்.

டேய்... நில்.

திரும்பிப் பார்த்தேன்.. தெரிந்த முகந்தான். சாவிக்கார மகாலிங்கம். பாதி போதையில் இருந்தார். . நான் நிற்கவில்லை.

டேய்... கூப்பிடுறன்... நில்லடா!

நின்று விட்டேன்.

இஞ்சை வா...

நீ பொன்னையற்ர பொடியனல்லே? தலையை ஆட்டினேன்.

பிறகேன்ரா... நிக்காமப் போனனீ... சரி... நில் வாறன்.

போனவர் தன் சைக்களில் மாட்டியிருந்த ஓலைப் பையை எடுத்து வந்து என் சைக்களில் மாட்டினார்.

கொண்டு போய் இதை ராணியிட்டைக் குடு. நான் நிமிர்ந்து பார்த்தேன். டேய் என்ர மனிசி ராணியிட்டக் குடு. அழுத்திச் சொன்னார். காரணம் வீதியில் வேறு ராணிகளும் இருந்தார்கள்.

நான் வரேக்க பொறிச்சுக் குழம்பு வைச்சு, சும்மா நாக்குச் சுண்டுற மாதிரி சமைக்கட்டாம் எண்டு சொல்... கொண்டு போ..

சிரிப்பும் கடுப்பும் கலந்த உணர்வில் நான் இருந்தேன். வேறு வழியில்லை? பையோடு புறப்பட்டேன்.

பையோடு போன என்னை ராணி அக்கா வியப்போடு பார்த்தார்.

உன்னட்டையா குடுத்து விட்டவர்... வரட்டும்..

என் பங்குக்கும் சிலவற்றைச் சொல்லிவிட்டு நான் வந்து விட்டேன்.

அதன் பின் சனிக்கிழமைகளில் பெரும்பாலும் சாராயக்கடையை நான் கடப்பதில்லை.

- கரிச்சான் குஞ்சன்

பெயர் மாற்றம்

சனி மாற்றம், வியாழ மாற்றம் போல இது என்ன 'பெயர் மாற்றம்' என உங்களில் பலர் எண்ணுவதில் எந்த வியப்பும் இல்லை.

புலம்பெயர்ந்து வாழும் நாம், பல வகைகளில் எம்மை வாழும் சூழ்நிலைக்கு மாற்ற வேண்டிய அத்தியாவசியத்தைச் சந்தித்திருக்கிறோம். உதாரணத்திற்கு, எமது தாய்நாட்டில் மதியம் சோறு, கறி சாப்பிட்டு, பின் இரவில் இடியப்பம், பிட்டு போன்றவற்றை சாப்பிட்டுப் பழகிய நாம், மேலைநாட்டு சூழலுக்கேற்ப எம்மை மாற்றி, மதியம் Sandwich போன்றவற்றை சாப்பிட்டு. இரவில் சோறு, கறி என மாற்றி அமைத்துள்ளோம். இது போல பல உதாரணங்களைக் கூறலாம். மாற வேண்டிய சூழ்நிலை காரணமாக, அதையே சாட்டாகக் கொண்டு மாறத் தேவையில்லாதவற்றையும் வலுக்கட்டாயமாக மாற்றியிருப்போரையும் நாம் காண்கிறோம். உதாரணத்திற்கு Coat, Suit உடன் சம்பிரதாயம் வேண்டும் என, தலையில் சால்வை கட்டி, திருமணங்களில் தேங்காய் உடைக்கும் கேளிக்கையையும், மணமாகாமல் ஒன்றாகக் குடும்பம் நடத்திவிட்டு சம்பிரதாயம், கலாச்சாரம் என்று கன்னிக் கால் நட்டு திருமணம் நடக்கும் புதுமையையும் காண்கிறோம்.

தமிழர்களாகிய எமக்கு பல அடையாளச் சின்னங்களுண்டு. அதில் ஒன்று எமது பெயர். அதிகமாக எல்லா நாட்டிலும், இலங்கையிலுள்ள சிங்களவர்கள் உட்பட First Name (முதற் பெயர்) Last Name Or Surname (கடைசிப் பெயர்) என பெயர்களைப் பகுத்து, தமது Surname இனூடு அவர்கள் குடும்ப வம்சங்களை அடையாளம் காட்டுவர். தமிழர்களாகிய எமக்கு இந்த பாகுபாடு கிடையாது. இந்த Surname வழமை சரியா? அல்லது தமிழர்களுடைய Surname இல்லாத முறை சரியா? என ஆராய்வதல்ல இந்தக் கட்டுரையின் நோக்கம். ஆனால் உனது பெயர் என்ன? உன் அப்பாவின் பெயர் என்ன? என்று பழகிய எமக்கு மேலைநாடு வந்ததும், உனது First Name என்ன? உனது Surname என்ன? என்று கேட்கும்போது குழப்பத்திற்குள்ளாகிறோம்.

தெரிந்தோ தெரியாமலோ மேலை நாட்டில் நாம் வாழ்கிறோம். எனவே, எப்படி அவர்களினுடைய முறைக்கு, எம்மை மாற்றியமைக்க வேண்டும் என தெளிவாக்குவதே இக்கட்டுரையின் நோக்கம். முதலில் ஆண்களின் பெயர்களை எடுப்போம். உதாரணத்திற்கு எனது பெயர் 'நவேந்திரன்'. எனது அப்பாவின் பெயர் 'பதஞ்சலி' ஆக, எனது முழுப்பெயர் பதஞ்சலி நவேந்திரன், சுருங்க எழுதின் திரு.ப.நவேந்திரன்.

U.K. வழக்கத்தின்படி ஒரு ஆணை நாம் Mr. சொல்லாமல் கூப்பிடும் பெயர் "First Name" Mr. சொல்லி அழைக்கும் பெயர் Surname. உதாரணத்திற்கு Mr.Steve Dickson என்ற பெயரை எடுத்துக்கொண்டால் Steve என்பது First Name (எனவே Steve எனக் கூப்பிடலாம்). Dickson என்பது Surname (எனவே Mr. Dickson என அழைக்க வேண்டும்.) இந்த Steve Dickson இற்கு ஒரு மகன் Paul இருந்தால், அவருடைய முழுப்பெயர் Mr. Paul Dickson. இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் Surname மாறவில்லை.

மீண்டும் எனது பெயருக்கு வருவோம். Mr.Pathanchaly Navendren. U.K. வழ்மைப்படி பதஞ்சலி First Name, நவேந்திரன் Surname. இது எமது நாட்டு முறைக்கு எதிர்மறையாகக் காணப்படுகிறது. ஆயினும் U.K. வழக்கத்திற்கு எம்மை மாற்றி, குழப்பத்தைத் தவிர்ப்பதெனின் எனது First Name பதஞ்சலி, எனது Surname நவேந்திரன். எனக்கு ஒரு மகன் குமரன் (Kumaran) இருப்பின் U.K. வழமைப்படி அவர் முழுப் பெயர் Mr.Kumaran Navendren (எமது நாட்டு வழமைப்படி இது Mr.Navendren Kumaran) என எழுதப்படும். எனது மகன் Kumaran இற்கு ஒரு மகன் ஆனந்தன் (Anandan) இருப்பின், அவர் பெயர் Mr.Anandan Navendren என வரும்.

> மணமாகாமல் குடும்பம் நடத்திவிட்டு கன்னிக்கால் நட்டு திருமணம் நடக்கும் புதுமையையும் காண்கிறோம்

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் U.K. வழமைக்கேற்ப எனது பெயரை மாற்றியமைத்ததன் மூலம் Navendren என்ற பெயர் Surname ஆகிவிட்டது சுருங்கச் சொன்னால் எமது ஊரில் எங்கள் பெயரை எழுதும்போது எப்பெயரை முதலில் எழுதுவோமோ அது U.K. System த்தின்படி First Name.

நாங்கள் இந்த நாட்டிற்கு வரும்போது எமது முக்கிய ஆவணங்களான (Documents) கடவுச்சீட்டு (Passport) பிறப்புச் சான்றிதழ் (Birth Certificate) ஆகியவற்றுடன் எப்படி இணைந்து, ஒத்துபோவது என்பதை மனத்தில் கொண்டே இக்கட்டுரை எழுதப்பட்டது. நாம் U.K. System த்துடன் இணைந்து போகாவிடின், எமது அப்பாவே எமது மனைவியின் கணவனாகும் நகைப்பு நிலை உண்டாகும். இந்த எமது பெயர்க் குழப்பத்தை வைத்து பலர் பல வழிகளில் சட்டத்தில் இருந்து 'ஐயா நான் அவனில்லை' (ஜெமினி கணேசனின் 70 களில் வந்த படமொன்று) எனத் தப்பிப்பதற்கும் உதவுவதுண்டு.

இக்கட்டுரை எது First Name, எது Surname என்ற குழப்பத்தைத் தவிர்க்கும் என நம்புகிறேன். அடுத்த முறை பெண்களின் பெயர்க் குழப்பத்தைப் பார்ப்போம்.

- பதஞ்சலி நவேந்திரன்

'தமிழ் எங்கள் உயிருக்கு நிகர்'

உங்கள் சட்டத் தேவைகள் எதுவானாலும் நம்பகரமான சேவைகளைப் பெற்றுக் கொள்ள எங்களை நாடுங்கள்

• Immigration • Conveyancing • Licencing matters • Family matters



NATHAN SURESH & AMIRTHAN
Solicitors
2nd Floor, 150 A Ealing Road, Wembley, Middx HAO 4PY
Tel: 020 8903 7211 Fax: 020 8795 4056

வாழ்க்கைத் துணை

இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 8286 9327
Fax: 020 8640 6972

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

email: info@orupaper.com

மணமகள் தேவை

1. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5'6" உயரமுள்ள, கனேடிய பிரஜாவுரிமையுள்ள பட்டதாரி மகனுக்கு கனடாவில் வசிக்கும் தாயார் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 731

2. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5'7" உயரமுள்ள, கொழும்பில் தொழில்புரியும் பட்டதாரி மகனுக்கு கனடாவில் வசிக்கும் பெற்றோர் தகுந்த மணமகளை கனடாவில்/ UK இல் தேடுகின்றனர். Ref: 732

3. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5'11" உயரமுள்ள, கனடாவில் வர்த்தக நிலையம் வைத்திருக்கும் பட்டதாரி மகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 733

4. மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்ட தற்போது ஜேர்மனியில் பிரஜாவுரிமையுடன் இருக்கும் மணமகனுக்கு கனடாவில் இருக்கும் பெற்றோர் ஜேர்மனி/கனடா/தாய்நாட்டில் தேடுகின்றனர். Ref: 726

5. Jaffna parents from the UK are looking for a suitable girl 5'5" to 5'8" tall aged 27 to 30 and resident of the UK or Canada, for their 6'2" tall, 33 year old son (Mechanical Eng.Dip) temporarily resident in the UK for 10 years and working as a manager in Supermarket. Ref:727

6. Jaffna parents looking for their son, 29 years old, 5'6" tall, MSc student, a suitable bride in Europe or Canada. Ref:728

7. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 34 வயது 6' உயரமுள்ள MScபடித்த கனடா பிரஜாவுரிமையுடன் Electrical Engineer ஆக வேலை செய்யும் மணமகனுக்கு தகுதியுள்ள மணமகளை கனடாவில் வசிக்கும் சகோதரன் தேடுகின்றார். Ref: 729

8. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 42 வயது 5'6" உயரமுள்ள கனடா பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை லண்டனில் வசிக்கும் சகோதரன் தேடுகின்றார். Ref:730

9. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'6" உயரமுள்ள கண்டியில் வசிக்கும் Dr மணமகனுக்கு சகோதரன் இலங்கையில் மணமகளைத் தேடுகின்றார். *Ref: 720*

10. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5'8" உயரமுள்ள IT பட்டதாரியும் தற்போது இந்தியாவில் தொழில்புரியும் மணமகனுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். *Ref:721*

11. மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்ட 34 வயது 5'6" உயரமுள்ள, தற்போது ஜேர்மனியில் பிரஜாவுரிமையுடன் வாழும் மணமகனுக்கு கனடாவில் இருக்கும் சகோதரன் EU/ Canada/இலங்கை போன்ற இடங்களில் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். *Ref: 722*

12. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'4" உயரமுள்ள 5 வருடங்களாக லண்டனில் சாரதியாக வேலை செய்யும் சகோதரன் தகுந்த EU வதிவிட உரிமையுள்ள மணமகளைத் தேடுகின்றார். *Ref: 723*

13. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 41 வயது 5'6" உயரமுள்ள, U.K பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு ஜேர்மனியில் இருக்கும் சகோதரி தகுந்த மணமகளைத் தேடுகின்றார். தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். *Ref: 724*

14. திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5'8" உயரமுள்ள, தற்போது படித்துக் கொண்டு தொழில் செய்யும் மணமகனுக்கு லண்டனில் வசிக்கும் பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். *Ref:725*

15. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட, தற்போது U.K யில் வசிக்கும் (U.K Citizen) 33 வயது 5'11" உயரமுள்ள பட்டதாரி மணமகனுக்கு கனடாவில் வசிக்கும் பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். *Ref: 714*

16. கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 6' உயரமுள்ள பட்டதாரியும் நல்ல நிலையில் இருக்கும் கனேடிய பிரஜாவுரிமையுடைய மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். *Ref:715*

17. திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட 40 வயது 5'4" உயரமுள்ள A/L படித்த 5 வருடங்களாக U.K இல் இருக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். *Ref: 717*

18. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'6" உயரமுடைய பொறியியலாளர் கனடாவில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள நல்ல தொழிலில் இருக்கும் மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். *Ref: 718*

19. Brother looking for a bride for groom age 39, height 5'8", a divorcee. He is a Business man. *Ref: 709*

20. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 34 வயது 5'5" உயரமுள்ள U.K யில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். *Ref: 712*

21. Jaffna parents seek a suitable bride for their son, 43 years, medical professional, divorced, and a UK citizen. *Ref: 704*

22. Jaffna parents living in UK, looking for their professional son, 27 years, 5' 11" tall a suitable bride, with traditional values. *Ref: 705*

23. Canada, settled, Jaffna origin, parents looking for a suitable bride for their son, 31 years old, 5'11" tall, self-employed Canadian citizen. *Ref: 706*

24. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட 34 வயது நிரம்பிய (Engineer) மணமகனுக்கு நிரந்தர வதிவுடமை உடைய தகுந்த மணமகளை அவருடைய உறவினர்கள் தேடுகின்றனர். *Ref.700*

25. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது, 6' உயரமுள்ள தற்போது கனடாவில் நிரந்தர பிரஜா உரிமையுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகிறார்கள். *Ref:593*

26. Jaffna parents seek for their son 26, 5'8", German graduate, ACCA partly qualified, German nationality and working in the UK, a sutable educated bride. *Ref: 580*

மணமகன் தேவை

1. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'2" உயரமுள்ள, விவாகரத்துப் பெற்ற யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சகோதரிக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 884

2. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 37 வயது 5'2" உயரமுள்ள, லண்டனில் 5 வருடங்களாக வசிக்கும் படித்த மகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரன் தேடுகின்றார். Ref: 885

3. Aunt living in U.K seeks for her niece born in Pointpedro 25 years 5'3" tall CIMA student looking for a suitable professionally qualified groom. Ref:886

4. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'1" உயரமுள்ள, A/Lபடித்த 2 வருடமாக சுவிஸில் வசித்து வரும் மணமகளுக்கு நிரந்தர வதிவிடவுரிமையுள்ள தகுந்த மணமகனை சகோதரர்கள் தேடுகின்றனர். Ref:876

5. Father seeks for his only daughter 37 yeas old, 5'2" tall, British Citizen holding a senior administrative position in London, a suitable groom. Ref:877

6. Jaffna mother looking for a daughter 33 years, 5'2" tall, System Engineer, born & brought up in UK, a suitable groom. Ref:878

7. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது, 5'2" உயரமுள்ள, தற்போது வவுனியாவில் ஆசிரியையாகத் தொழில்புரியும் மணமகளுக்கு கனடாவில் வசிக்கும் சகோதரன் தேடுகின்றார். Ref:879

8. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5'2" உயரமுள்ள, தற்போது சுனாமி நிவாரணப் பணிப்பிரிவில் வேலைசெய்யும் மணமகளுக்கு தகுந்த வரனை கனடாவில் வசிக்கும் சகோதரன் தேடுகின்றார். Ref:880

9. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'3" உயரமுள்ள, B.Sc பட்டதாரியும், கனடா பிரஜாவுரிமையுள்ள Registered Nurse ஆக வேலை செய்யும் மணமகளுக்கு தகுந்த வரனை கனடாவில் வசிக்கும் பெற்றோர் தேடுகின்றனர். Ref:881

10. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் புத்தளத்தை வதிவிடமாகவும் கொண்ட 33வயது 5'3" உயரமுள்ள விஞ்ஞான பயிலுனர் ஆசிரியைக்கு தகுந்த வரனை பிரான்சில் வசிக்கும் சகோதரி தேடுகின்றார். Ref:882

11. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'4" உயரமுள்ள B.A படித்த கனடா பிரஜாவுரிமையுள்ள மணமகளுக்கு பெற்றோர் தகுந்த வரனைத் தேடுகின்றனர். Ref:883

12. Jaffna Parents seek for their son 36 years 5'5" tall U.K educated, M.Sc qualified and well employed, a suitable match. Ref:871

13. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடப்பிடமாகக் கொண்ட 44 வயது 5'7" உயரமுள்ள Hotel Management முடித்து, கொழும்பில் வசிக்கும் மணப்பெண்ணுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் தகுந்த வரனைத் தேடுகின்றார். Ref:872

14. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'6" உயரமுள்ள, தற்போது கொழும்பில் வசிக்கும் B.com படித்த மணமகளுக்கு U.K இல் வசிக்கும் சகோதரி தகுந்த வரனைத் தேடுகின்றார். Ref:873

15. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசிக்கும் 20 வயது 5'4" உயரமுள்ள B.Sc(Computer Science) படித்த சகோதரிக்கு தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரன் நுரு நாடுகளில் தேடுகின்றார். Ref:874

16. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடப்பிடமாகக்கொண்ட 32 வயது 5'3" உயரமுள்ள, இந்தியாவில் சங்கீத டிப்ளோமா செய்த மணமகளுக்கு கனடாவில் வசிக்கும் சகோதரன் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref:875

17. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 27 வயது 5'2" உயரமுள்ள A/L படித்த தெல்லிப்பளையில் இருக்கும் மணமகளுக்கு கனடாவில் இருக்கும் பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். *Ref: 861*

18. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5'3" உயரமுள்ள சங்கீத டிப்ளோமா (இந்திய) பெற்ற மணமகளுக்கு கனடாவில் இருக்கும் சகோதரன் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். *Ref: 862*

19. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 46 வயது 5'1" உயரமுள்ள தற்போது கொழும்பில் வசிக்கும் மணப்பெண்ணிற்கு கனடாவில் இருக்கும் உறவினர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். *Ref: 863*

20. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 24 வயது 5'2" உயரமுள்ள A/L, Typing, Computer படித்த மணப்பெண்ணுக்கு டென்மார்க்கில் வசிக்கும் உறவினர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். *Ref: 864*

21. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5' உயரமுள்ள பட்டதாரி Financial Analyst ஆக தொழில் புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனை கனடாவில் வசிக்கும் பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 865*

22. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 23 வயது 5'3" உயரமுள்ள Qualified Bharathanatiyam Dancer, Classical Musician தற்போது சென்னையில் வசிக்கும் மணப்பெண்ணுக்கு தகுந்த வரனை உறவினர் தேடுகின்றனர். *Ref: 866*

23. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 37 வயது 5'5" உயரமுள்ள O/L படித்த தற்போது சென்னையில் வசிக்கும் மணமகளுக்கு உறவினர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். *Ref: 867*

24. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'4" M.Sc, IT பட்டதாரி தற்போது இந்தியாவில் வசிக்கும் மணப்பெண்ணுக்கு கனடாவில் வசிக்கும் பெற்றொர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். *Ref:869*

25. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 36 வயது Electrical Engineer, கனடா பிரஜாவுரிமையுள்ள மணமகளுக்கு பட்டப்படிப்பு படித்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 870*

26. Jaffna parents living in Colombo are looking for a suitable professionally qualified bridegroom for their only daughter, age 31, height 5'6", qualified accountant now working for a leading firm in U.K on a 5 year work permit. *Ref: 851*

27. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'4" உயரமுடைய மணமகளுக்கு USA வதிவிடமுள்ள மணப்பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த வரனை தேடுகின்றனர். *Ref: 852*

28. British- citizen father looking for a suitable professionally qualified bridegroom, in U.K/EU/Canada ,for his daughter, B.A qualified 25 years 5'4" tall, living in Colombo. *Ref: 853*

29. Jaffna Tamil mother looking for her daughter, an Eng. grad. born in the U.K, 27 years 5'7" tall, a suitable groom in the U.K/USA/Canada . *Ref: 854*

30. Parents seeking suitable groom for their only daughter 32 years old 5'4" tall, British citizen holding highly qualified post. *Ref: 855*

31. திருகோணமலையை பிறப்பிடமாகவும், மட்டக்களப்பில் B.A படித்துக் கொண்டிருக்கும் 28 வயது மணமகளுக்கு தகுந்த மணமகனை கனடாவில் வசிக்கும் சகோதரி தேடுகிறார். *Ref: 857*

32. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 31 வயது கர்நாடக சங்கீத டிப்ளோமா பெற்ற ஆசிரியைக்கு தகுந்த வரனை லண்டனில் வசிக்கும் சகோதரன் தேடுகின்றார். *Ref: 858*

33. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 27 வயது 5'9" உயரமுள்ள நல்ல தொழிலில் இருக்கும் பட்டதாரி மகளுக்கு கனடாவில் வசிக்கும் பெற்றோர் தகுந்த வரனைத் தேடுகின்றார்கள். *Ref: 845*

34. வடமராட்சியைச் சேர்ந்த கனேடியப் பெற்றோர் தங்கள் 24 வயது 5'4" உயரமுள்ள B.A.S(Hons) படித்து நல்ல நிலையில் தொழில் பார்க்கும் மணப்பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். *Ref: 849*

35. சாவகச்சேரியில் இருக்கும் 26 வயது 5'2" உயரமுள்ள B.Com பட்டதாரி மகளுக்கு கனடாவில் இருக்கும் உறவினர் தகுந்த மணமகனை தேடுகின்றனர். *Ref: 850*

36. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட, பெற்றோர் தற்போது கனடாவை சொந்த இடமாகக் கொண்ட 23 வயது 5'7" உயரமுள்ள Nursing graduate (BSc Nursing) மணமகளுக்கு தகுந்த மணமகனை கனடாவில் தேடுகின்றார்கள். *Ref. 840*

37. Jaffna parents living in the UK looking for suitable groom for their daughter 34 years 5' tall born in UK working in a Financial Institute. Divorcee, no children. *Ref. 841*

கவிதை

அறப்போர்

எட்டுத் திசைகளும் பட்டுத் தெறித்தன
ஈனர் குண்டுகளே! – குண்டு
பட்டுத் தமதுடல் கெட்டுச் சிதறிடப்
பாய்ந்தார் தொண்டர்களே!

மானம் பெரிதென ஊன உடல்விழ
மாண்டார் தமிழ் வீரர்! – ஆவி
தானம் எனத்தந்த மானத் தமிழன் தோள்
தங்கம்! தங்கமடா!

பெண்களை மென்மைப் பிறவிகளென்று
பேச மனம் வருமோ? – அங்கே
மண்ணி லுயிர்சிந்தும் இளைஞர்க்கு
வாய்த்த மகளிர் குலமல்லவோ?

பள்ளிச் சிறார்களும் நல்லறப் போரிலே
பாய்ந்து களிக்கின்றார்! – செந்நீர்
வெள்ளத்திலாடி மரணத்தின் முத்தம்
விரும்பித் துடிக்கின்றார்!

ஓவென்றிரைந்து நடக்குதடா எங்கும்
உரிமைப் போராட்டம்! – வாழ்வு
தாவென்று கேட்டு மடியுதடா எங்கள்
தமிழர் படைக்கூட்டம்!

தன்னை வருத்தியும் தன்னுயிர் தந்தும்
தமிழன் மடிகின்றான்! – தங்கள்
பொன்னுயிர் சிந்தும் புறாக்களைக் கண்டு
புலவன் மலர்கின்றான்!

எங்கும் பிணத்திரள்! எங்கும் பிணநெடி!
இனிய அறமங்கை – கண்ணில்
பொங்கி வழியும் புனலின் நெருப்பிலே
பூமி அழியாதே?

ஈழம் தமிழ்மண் இரண்டிலுஞ் செந்நீர்
எழுந்து பெருக்கெடுத்து – நின்ற
ஆழியுஞ் செங்கடலானது கண்டார்!
அதிர்ந்தார் புவிமாந்தர்!

– காசி ஆனந்தன்

ஒரு காதல் கதை

வழி தெரியாமல் இந்த காட்டினுள்
நான் நுழைந்து விட்டேன்!
அதிர்ஷ்டம் எனக்கிந்த காட்டில்.
சுவடே படாத சுனைநீர் பருகி
வாசனை வீசும் மலர்கள் பறித்து
வழிகளெங்கும் என் பாதம் பதித்து
தீராத காட்டின்மேல்
முடியாத காதலோடு
திரும்பத் திரும்ப அலைகிறேன்.
மரம் தான் முற்றோ?

– வசந்த்

சாமியே சரணம்

உருளடுத்தாடியே ஊர்க்குறை தீர்த்திடும்
கருமாரி அம்மனைக் காணவே பக்தரும்
அருகிலே வருமென அன்னையின் ஆசியும்
பெரிதுமே பூசைகள் தானமும் நாள் தினம்.

சேருது பணமென செவ்வனே கண்டதும்
பாரது கோயிலில் தர்மகர்த்தாக்களும்
போட்டிடும் நூலுக்கும் பொறுக்கிடும் பூவுக்கும்
போட்டிடு பணமென சீட்டுக்கள் நீட்டுவர்.

தானமும் வழங்கியே தெண்டிய பணமது
ஏனிது கேட்கவோ பக்தியும் தடுக்குது
ஊரது பணத்திலே கோயில் நிர்வாகமும்
சேர்ந்ததொரு பாதியை சேர்த்துமே வைக்குது.

கட்டடம் கட்டிட காசுகள் தா என
பக்திபோல் ஆடியே பணத்தினைக் கேட்குது
அம்மனும் நாள்தினம் அழுகிறாள் பார்த்ததும்
எம் சனம் ஓடுது எள்ளுகள் பொதியுடன்.

பக்திகள் தேவைதான் பாமரன் வாழ்வினில்
சத்தியம் சாமியோ சல்லியும் கேட்டிடார்
பக்தியின் பெயரினில் சாமியை விற்றிட
எத்தனை பேரிங்கு எழுப்புறார் கோயிலை.

மரக்கறி பலவுடன் மளிகைப் பொருட்களும்
தரத்தனை மறந்துமே வாங்கலாம் கோயிலில்
சாமியே விற்குது சத்தான மரக்கறி
ஓடியே வாங்குவீர் கோயிலை நாடியே.

நல்லவர் ஒருசிலர் நடத்துறார் கோயிலை
எல்லையிற் பக்தியும் இன்பமும் பொங்கவே
கல்லிலே கதிபெறக் கடவுளைக் காட்டிடும்
வல்லவர் வழியினை நாடிடல் புண்ணியம்.

– த.சு.மணியம்

பெரியோர்

பொழுதோ விடியுது
பழுதாய் மடியுது
தொழுதா கெடுவது
அழுதா படுவது?

சென்றோர் பழமையிற்
பொன்றும் வழமையை
நன்றாய்ச் சீருடன்
வென்றார் யாரடா!

காலம் கூடியது
காலன் கொடியவன்
கோலம் கொண்டதும்
ஞாலம் கண்டதும் –
நிலையாய் இருந்திடக்
கலையாய் விரிந்திட
மலையாய்த் தனித்துவம்
சிலையாய் இனித்திட –

அரிதாய்க் கவின்செயல்
புரிவோர் புவியினிற்
பெரியோர் என்பதற்
குரியோர் மன்பதை!

– வி.கந்தவனம்

வரம்

மறுபடியும் பார்க்கும்வரை
ஏதாவது வரம் வேண்டுமா
என்கிறாய்ச் சிரித்தபடி..

நாள்தோறும் உன்
ஞாபகக் கிளைகளில் பூக்களாய்க்
கண் திறக்கிறேன் நான்

உன் மேல் மலர்ந்து
உன் மேல் உதிர்கையில்
வேறென்ன வரம் வேண்டும் போ!

– வசந்த்

அஞ்சி நிற்க மாட்டோம்

நன்றிகெட்ட மனிதருக்கு
அஞ்சிநிற்க மாட்டோம்
நாவினிக்கப் பொய்யுரைக்கும்
பேரைநம்ப மாட்டோம் – என்று
கூறுவோமடா – ஒன்று
சேருவோமடா
வீறுகொண்டு சிங்கம்போல்
முன்னேறு வோமடா!

எளிய மக்கள் தலையில்காசு
ஏறி மிதிக்குது – அதை
எண்ணி எண்ணித் தொழிலாளர்
நெஞ்சு கொதிக்குது
வஞ்சனைக்கும் அஞ்சிடோம்
வஞ்சனைக்கும் அஞ்சிடோம்
பஞ்சம் நோய்களும் அஞ்சிடோம்
பட்டினிக்கும் அஞ்சிடோம்
நெஞ்சினைப் பிளந்தபோதும்
நீதி கேட்க அஞ்சிடோம்
நேர்மையற்ற பேர்களின்
கால்களை வணங்கிடோம்
காலி என்றும் கூலி என்றும்
கேலி செய்யுங் கூட்டமே
காத்துமாறி அடிக்குது – நீர்
எடுக்கவேணும் ஓட்டமே
தாலி கட்டிக்கொண்ட மனைவி
போலுழைத்த எங்களைத்
தவிக்கவிட்ட பேரை – எந்த
நாளும் மறக்கமாட்டோமே

– ப.கோ.கல்யாணசுந்தரம்

அவள்

குமரிகள் குளித்துக் கரையேறிய
துவைத்து ஈரம் உலராத
கிணற்றுப் படித்துறையில்
எனக்காகக் காத்திருக்கும்
மறந்து வைத்த மஞ்சள் கிழங்கு

– ஜெ. பிரான்சிஸ் கிருபா

old is gold

சிலப்பதிகாரம்

– இளங்கோ அடிகள்

பொழில்தரு நறுமலரே புதுமணம் விரிமணலே

பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே

முழுமதி புரைமுகமே முரி புருவவில்லிணையே

எழுதரு மின்னிடையே எனை இடர் செய்தனையே

(சோலைகள் தரும் நல்ல மலர்களும் புதிய மணம் வீசும் பரந்த மணல் திடலும் குற்றமற்ற இனிய மொழிகளும் பருத்த இளமை பொருந்திய முலைகளும் பூரண சந்திரனைப் போன்ற முகமும் வளைந்த வில்லையொத்த இரண்டு புருவங்களும் எழுதுவதற்கு அரிய மின்னல் கொடி போன்ற துவளும் இடையும் எனக்கு துன்பத்தை தந்தவை ஆகும்.)

(கி.பி. 5 ஆம் நூற்றாண்டு)

நாச்சியார் திருமொழி

– ஆண்டாள்

பொங்கிய பாற்கடல் பள்ளிகொள்வானைப்

புணர்வது ஓர் ஆசையினால் என்

கொங்கை கிளர்ந்து குமைத்து குதுகலித்து

ஆவியை ஆகுலம் செய்யும்

(பொங்கி அலைகின்ற பாற்கடலில் பள்ளிகொள்வானாகிய விஷ்ணுவோடு கலந்து சேர வேண்டுமென்ற ஆசையினால் என் முலைகள் பருத்து மிக்க மகிழ்வோடு என் உயிரை உருக்கி சஞ்சலப் படுத்துகின்றன.)

(கி.பி.9ம் நூற்றாண்டு)

நான் விரும்பிய மலர்

அழகான புஷ்பமொன்று
கொடியொன்றில் மலர்ந்தபடி!

அது எனக்குகண்ணிற்கினிய
காட்சியாய்!

யார் கண்ணில் பட்டாலும்
கவர்ந்துவிடும் அழகு அது!

எத்தனையோ விழிகளுக்கு
விருந்தளிக்கும் புஷ்பமது!

நனைந்த இதழ்களோடு
அசைந்திருந்த அந்த மலர்

என் உறவுத்தோட்டத்தில்
வந்துதித்த புஷ்பமது!

எத்தனையோ கண்களைப்பது
கவர்ந்திருந்தாலும்!

எனக்குரிய புஷ்பமொன்று
நான் நினைத்திருக்க!

இன்னொருவர் பறித்து அதை
சூடிவிட்டார்!

புஷ்பம் போய்ச்சேர்ந்த இடம்
தரத்தினிலே உயர்வாகும்!

நான் ரசித்த அந்த மலர்
நல்ல இடம் சேர்ந்ததனால்!

எனக்குமது சந்தோஷம்!

– கணேஷ்

ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜோதிடம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் திரு.எச்.எம்.சாஸ்திரி அவர்கள் கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம், வருங்காலம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகியவற்றை மிகத்துல்லியமாக கணித்து வழங்குவார்.

Sri Hanuman Astrological Centre

INDIAN FAMOUS ASTROLOGER
Mr. H.M Sastry
Specialist in all kinds of Astrology



You will come to know about your past, present & future by hand predicition, Horoscope, Face reading, Intending persons may contact, for job, Family matters, Husband & Wife Relationship, Love, Education, Business, Choice of stones, marriage, sickness, promotion, family problems, children problems, Immigration, abroad, money, sexual problems etc. Witch craft will be cleared by performing Poojas and Devi Upasans, Luxmy Pooja, Prayers and protection from enemy.

திருமணப் பொருத்தங்கள் பார்க்கப்படும். திருமணத்தடைகள் நீங்க, குடும்பத்தில் நிலவுகின்ற கணவன், மனைவி பிரச்சினைகள் தீர, காதல், வேலை மற்றும் வியாபாரம் ஆகியவற்றில் ஏற்படும் தடைகள் மற்றும் எதிர்பாராத சரிவுகளுக்குப் பரிகாரம் வழங்கப்படும். வாகனப் பொருத்தங்கள் பார்க்கப்படும். பில்லி சூன்யம், ஏவல், செய்வினை ஆகியவற்றால் பாதிப்படைந்தவர்களுக்குப் பரிகார பூஜைகள் மற்றும் குழந்தை பாக்கியம், தேவி உபாசனைகள் மூலம் தீர்வுகள் வழங்கப்படும். அனைத்துவிதமான தோசங்களுக்கும் கண் திருஷ்டிகளுக்கும் பரிகாரம் வழங்கப்பட்டு சக்கர ஸ்தாபனங்கள், தாயத்துக்கள் வழங்கப்படும்.

Consulting Venue: **Wembley Food & Wine,** 546 High Road, Wembley, Middx HA0 2AA (Opposite: Wembley Central Tube Station)
Mob: **07984 901 194 07939 318 620** Opening Hours: **9.00 a.m – 9.00 p.m (Seven days a week)**

Spoken languages Tamil, Hindi, Telugu, Kannada & English

புதினப் பெண்கள்!?

உலக மகளிர் தினத்தில் எமது நாட்டிலும் மற்றும் உலகமெங்கும் பெண்களின் பிரச்சனைகளிற்காய் போராடுகின்ற பெண்களை நினைவு கூர்ந்து அவர்களை பாராட்டி அவர்களின் ஆக்கமான பணிகளிற்கு ஊக்கம் கொடுக்கவேண்டியது எமது அனைவரது கடமையுமாகும். அதேவேளை தாங்களும் பெண்கள் என்ற கூறிக்கொண்டு ஒரு அமைப்பையும் வைத்து கொண்டு பெண்களிற்கே இழிவை ஏற்படுத்தும் செயல்களையும் பரப்புரைகளையும் செய்து கொண்டு சில பெண்கள் புலத்தில் புதுமை பெண்கள் என்கிற பெயரில் நடமாடி இல்லை நாடகமாடி கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் இந்த நேரத்தில் அடையாளம் காணவேண்டியது காலத்தின் கடமையாகின்றது. காரணம் இவர்களது அண்மைய அணுகு முறைகளும் செயற்பாடுகளும் பெண்ணினத்திற்கு மட்டுமல்ல ஈழத்தமிழ் இனத்தின் போராட்டத்தையும் ஈழத்தமிழ்ப் பெண்களையும் கேவலப்படுத்துகின்ற செயல்களாக அமைந்துள்ள. அதற்கு எலும்பிற்கு விலை போன சில எச்சிலிலை இணைய தளங்களும் சில பத்திரிகைகளும் தாராளமாகவே உதவி வருகின்றன.

அம்மணியும் அறிக்கையும்

கடந்த வருடம் இந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்திய பெண்மணி ஈழத்தில் நடந்த ஒரு துரோகியின் மரணத்திற்கு ஒரு அறிக்கை விட்டார். அதாவது, 'ஈழத்தில் சிறீலங்கா இராணுவம்' சும்மா ஒரு பெண்ணின் கையை பிடித்து விட்டாலே உடனே எல்லா தமிழ் ஊடகங்களும் பாலியல் வன்முறை அய்யோ என்று கத்துகிறார்கள் ஆனால் மற்றவைகளை ஏன் கண்டும் காணாத மாதிரி இருக்கிறார்கள்', என்று அந்த அம்மணியின் அறிக்கை வெளிவந்தது. மரணங்கள் கண்டிக்கப்பட வேண்டியவைதான் ஆனால் அவரின் பார்வையில் ஒரு அப்பாவித் தமிழ்பெண் இராணுவத்தால் பலாத்காரமாக பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு படுகொலையும் செய்யப்படுவதென்பது சாதாரணமாய் ஒரு கையைப் பிடித்துவிட்டது போன்றது. ஆனால் ஒரு துரோகியின் மரணம் கண்டிக்கப்பட வேண்டிய படுகொலை. இப்போது புரிகிறதா இவரின் நோக்கம் என்ன? யார் இவர்? என்று. பலரின் கைகளிலே தவழ்ந்து புரள்வது புதுமைப் பெண்களாகிய அவர்களிற்கு சாதாரணமாய் 'கைபட்ட' செயலாய் இருக்கலாம். ஆனால் ஒரு தன்மானமுள்ள தமிழீழப் பெண் அவளின் அனுமதியின்று அடுத்தவனின் கையென்ன, கை நகம் பட்டாலே அவள் அதை எதிர்த்து உயிருள்ளவரை போராடுவாள். அது அவளது தன்மான பிரச்சனை. அது இல்லாதவர்களிற்கு இவை விளங்குமாவென்று எனக்கு விளங்கவில்லை. இவர்களுள் முக்கியமான ஒருவர் கொழும்பிலேயே பிறந்து கொழும்பிலேயே வளர்ந்தவர்?. இவர் பேலியகொட பாலம் கடந்ததே கட்டுநாயக்கா வழியாக விமானமேறி வெளிநாடு வரத்தான். வெளிநாடு வந்து வெள்ளையனைத் திருமணம் செய்து கொண்டார். இந்த வெள்ளைக்குப் பிறந்த இந்த பிள்ளையளிற்கோ தமிழ் என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கிற நிலைமை. இப்படி தமிழீழத்தின் தண்ணீர் என்ன சுவை என்றே அறியாத அம்மணி, 'தமிழீழ தங்கைகள் தற்காப்பு பயிற்சி எடுப்பது தவறு' என்று பக்கம் பக்கமாக எழுதியும் பத்தாதற்கு ஒண்டாய்க் கூடி எதிர்ப்பு தீர்மானம் வேறை நிறைவேற்றினார்களாம்.

நரிகளும் நடிகர்களும்

இவர்களை விட்டு விட்டாலும் இவர்களுள் சில பெரிய கில்லாடிகளும் உள்ளனர். புலித் தோல் போர்த்த நரிகள் இவர்கள். தாங்கள் தமிழீழ ஆதரவாளர்களாகவும் தமிழ் போராட்டத்திற்கு துணை போகின்றவர்களாகவும் போக்கு காட்டி கொள்வதோடு மட்டுமல்லாமல் சமாதானகாலத்தில் தாயகம் போய் அங்கு போராளிகளுடன் சில புகைப்படங்களையும் எடுத்து கொண்டு வந்து தங்கள் இணைய தளங்களில் அட்டடங்களை இட்டு சுய விளம்பரம் தேடிக் கொண்டு அதே நேரம் இந்த கூட்டத்தையும் பின்கதவால் அழைத்து அரவணைத்துக் கொண்டு, நன்றாகவே இரு வேடங்களில் கலக்குகிறார்கள். இவர்களே மிகவும் ஆபத்தானவர்கள். இவர்கள் ஆணடிமை தனத்தை எதிர்ப்பதாக கூறிகொண்டு அறியாமல் எழுத்திலும் பேச்சிலும் ஆண்களையே எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள் அதற்கு அவர்கள் எழுதுகின்ற கதைகள் கவிதைகளை என்னவென்று சொல்வது!

> இவர்களுக்கு பெண்கள் விடுதலை அமைப்பு என்று ஒரு அமைப்பின் போர்வை தேவையில்லை

ஒரு குடும்பத்தின் மென்மையான பாச உறவுகளான அப்பா அண்ணா தம்பி சித்தப்பா மாமன் என்கிற உறவுகளையே கொச்சை படுத்தும் விதமான ஆபாசமான எழுத்துகள். இதை எழுத இவர்களுக்கு பெண்கள் விடுதலை அமைப்பு என்று ஒரு அமைப்பின் போர்வை தேவையில்லை. பேசாமல் ஒரு மஞ்சள் பத்திரிகையை நடத்தி தங்கள் விருப்பங்களை தாராளமாக நிறைவேற்றி கொள்ளலாம். இவர்களது எழுத்துக்கள் பெண்களாலேயே படிக்க முடியாமல் போய் இவர்களது உண்மை சாயம் மெல்ல வெளுக்க தொடங்க இப்போ புலியெதிர்ப்பு சனநாயகம் என்கிற போர்வையை போர்த்தத் தொடங்கியிருக்கின்றார்கள். அதுவும் கனநாள் நிலைக்காது. காரணம் அண்மையில் ஐரோப்பாவின் அதியுயர் சனநாயகவாதி என தன்னைக் கூறிக் கொண்ட ஒருவர் ஐக்கிய இராச்சியத்தின் அதியுயர் பாதுகாப்புடன் இருந்து, இவர்களைப் போலவே மனிதவுரிமை பற்றி பேசிக் கொண்டிருந்த ஒருவரின் முகமூடி கழன்று சுவிஸ் காற்றில் பறந்தது அனைவரும் அறிந்ததே.

பச்சோந்திகளுக்கு ஏன் வர்ணங்கள்?

இந்த மகளிர் அமைப்பினருள் ஆரம்பகால உறுப்பினர் ஒருவரை நான் பாரிசில் பல வருடங்களிற்கு முன்னர் சந்தித்த போது, அவர் என்னிடம் கூறினார். 'நாங்கள் புரட்சிப் பெண்கள்' நகைகள் அணிவதில்லை வர்ணங்கள் பூசி அழகு படுத்துவதில்லை அவையெல்லாம் பெண்ணடிமை சின்னங்கள் என்றார். நானும் அவர் உண்மையான புரட்சிப் பெண் தான் என்று நம்பி, 'எல்லா பெண்களும் உங்களை போல மாறிவிட்டால் எங்கள் சமூகத்தில் தாலி என்கிற ஒரு அடிமைச் சின்னத்தையே இல்லாமல் பண்ணிவிடலாம்' என்று பாராட்டி விட்டு வந்தேன். பிறகு காலங்கள் செல்லத்தான் அவர் கூறியதற்கான உண்மையான அர்த்தம் எனக்கு விளங்கியது. என்னவென்றால் பச்சோந்திகளிற்கு வர்ணம் பூச வேண்டும் என்கிற அவசியம் இல்லையே! அவை தேவைக்கேற்ப நிறம்மாறி கொள்ளுமே! அதனால் தான் அவர் தாங்கள் வர்ணங்கள் பூசுவதில்லை என்றிருக்கிறார். இப்படி நிறம் மாறிக் கொண்டிருக்கும் புரட்சி பெண்கள் எப்போது தங்களை ஆட்டி வைத்து கொண்டிருக்கும் அன்னிய சக்திகளிற்கு விலை போன ஆண்களிடம் இருந்து விடுபடுகிறார்களோ அப்போதான் இவர்கள் உண்மையான புரட்சிப் பெண்கள் . விடுபடுவார்களா?

இதுவரை நீங்கள் வாசித்தது

பிரான்சிலிருந்து...

சாத்திரி வழங்கிய

ஐரோப்பிய அவலம்

MARKANDAN & CO
SOLICITORS & ESTATE AGENTS

We have moved... to
845 Romford Road



குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்

விவாக விண்ணப்பங்கள்

அகதி விண்ணப்பங்கள்

14, 10 அல்லது 7 வருட வதிவிட தகமை விண்ணப்பங்கள்

பிரித்தானிய பிரஜாவுரிமை

வீதிப் போக்குவரத்து சம்பந்தமான வழக்குகள்

We also Specialise in....

- ▲ ஒப்பந்த தகராறுகள்
- ▲ நுகர்வோர் பிரச்சினைகள்
- ▲ மரண சாசனம் உறுதி தயாரித்தல்
- ▲ Bankruptcy Problems
- ▲ மதுபான அனுமதிகள்
- ▲ கட்டட அனுமதிகள்
- ▲ Cafe அனுமதிகள்

- ▲ House/Flat Purchase or Sale
- ▲ Remortgages
- ▲ Right to Buy
- ▲ Highly skilled migration
- ▲ Power of Attorney
- ▲ Sponsorship for UK Visas
- ▲ Work Permit application
- ▲ Civil Litigation

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

No win – No fee

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்

எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: **020 8514 8188** Fax: **020 8514 8303**
web: www.markandan-solicitors.com
e-mail: mm@markandan-solicitors.com

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.

ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.

வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

ஒரு படப்பிடிப்பாளரின் களமுனை அனுபவம்

பகுதி - 2

காலை 08.25

வீடியோக்காரரின் தொலைபேசி இலக்கத்தை எல்லோரும் மும்முரமாய் தேடிக்கொண்டிருக்க அங்கிருந்த ஒருவர் வாசல் மணியடித்ததும் தெரியாமல் வீடியோக்காரரின் பயோ டேற்றாவை சொந்தபந்தங்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். உவங்கள் உப்பிடித்தான் ஒரு நாளும் நேரத்துக்கு வரமாட்டாங்கள், வீடியோ கசற்றையும் ஒருவருசத்துக்கு பிறகுதான் தருவாங்கள். அதிலையும் முக்கிய கட்டங்களை காணேலாது. உந்த வீடியோக்காரர்தான் என்ர பிள்ளையின்ர பிறந்தநாளை எடுத்தவர் இன்னும் கசற்றை கண்ணிலயும் காட்டேல்ல என்று சொல்லிக்கொண்டிருக்க, அண்ணை நீங்கள் உங்கன்ர அம்மா அப்பான்ர போட்டோவை போடச் சொல்லிப் போட்டு இன்னும் போட்டோவைத் தரேல்ல எப்பிடி நான் கசற்றை தாறது எண்ணபடி ஒருவர் வந்தார் அவர் வேறு யாருமல்ல சாட்தாட் வீடியோகாறரேதான். பயோ டேற்றாக்காரர் முகம் பாலைவனமானது.

சரி சரி கதைச்சுக் கொண்டிருக்காமல் கெதியாய் றெடி பண்ணுங்கோ- இது செல்வி அக்கா. அக்கா, விலாசத்தை மாறித் தந்திட்டு என்னை அவசரப்படுத்தாதையுங்கோ. உங்கடை பக்கத்து வீட்டுக்காறர் இல்லையெண்டால் நான் இப்ப வீட்டை போயிருப்பன் என்று சொன்னபடி கமாராவை பூட்டத் தொடங்கினார். தம்பி அந்த வயரை எடுத்துத் தாரும், லைற்றை பூட்டிவிடும் என்று எனக்கும் கட்டளையிட்டுக் கொண்டிருந்தார்.

எல்லோரும் சர்கஸ்காரரைப் பார்ப்பது போன்று அவரைப்பார்த்துக் கொண்டிருந்தனர். சரி பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வாங்கோ என்று சொன்னபடி வீடியோ லைற்றைப் போட்டார். உடனே ஐயோ என்று ஒரு குரல் கேட்டது, அந்தக் குரலுக்குரியவர் அது வேறு யாருமல்ல பயோடேற்றாக்காறர்தான், வீடியோக்காரறின் 1000வோல்ற் வெளிச்சமும், வெப்பமும் அவரது கன்னத்தை பதம்பார்க்க கத்திய கத்துதான் அந்த சத்தம்?. சாமத்திய வீடு ஒரு நிமிடத்திற்கு சைலன்ற் கவுஸ் ஆனது.

காலை 08.45

உவன் வேணுமெண்டு செய்து போட்டான், -அமைதியை கலைத்தது பயோடேற்றாவின் கர்ஜனை. என்னை யாரெண்டு தெரியேல்லை அரைவாசி காங்கும் என்ர கையுக்கதானிருக்கு, ஒரு போன் கோலோடை உம்முடைய காலை எடுப்பன் என்றபடி கன்னத்தை பொத்தியிருந்த கையால் வீடியோவின் சேட்டைப் பிடித்தார் பயோடேற்றா. பக்கத்திலிருந்தவர்கள் எல்லோரும் ஒருவாறு அவரை இழுத்துப் பிடிக்க, வீடியோகாரர் வெளியில போட்டார். அவருக்குப் பின்னால் இரண்டு மூண்டுபேர் ஓடிப்போய் அவரின் கையைப் பிடித்தனர்.

தம்பி குறை நினைக்காதையும் அவர் உப்பிடித்தான், நீர்வந்து படத்தை எடும் என்றனர். அண்ணை என்ர காலென்ன கள்ளக்காட்டே உவர் காங்கை கூட்டியாறத்துக்கு. எனக்கு தெரியாத காங்கே, என்ர ஏரியாவுக்க வரட்டும் நான் ஆர் எண்டு உவருக்கு காட்டுறன் என்று கூறியவாறு கமராவை கையிலெடுத்தார்.

சரி தம்பி எல்லாம் பேந்து பார்ப்பம் இப்ப உதை எடும் என்றபடி ஒரு பெரியவர் நோர்வே போல் மத்தியஸ்தம் வகிக்க வந்தார். சாமத்திய வீட்டிலிருந்த எல்லோரும் எரிக் சொல் ஹயிமைக் கண்ட ஈழத்தமிழராயினர்.

காலை 09.00

கையில் வெத்திலையோடும் கள்ளமில்லா சிரிப்போடும் வந்து பால் அறுகு தட்டுக்கு முன்னாலிருந்தது செல்வி அக்கா தம்பதியினரின் பிள்ளை சமிதா. தேங்காய் உடைக்கிறவர் வாங்கோ - இது வீடியோவின் குரல்.

யார் தம்பி உடைக்கவேணும்
- இது செல்வி அக்கா

மாமன் தான் தேங்காய் உடைக்கிறது
-இது நோர்வே

அப்ப யார் பால்வைக்கிறது - *வீடியோ*

சரி பிள்ளையின்ர அப்பாவை தேங்காயை உடைக்கச்சொல்லுங்கோ, மாமா பால் வைக்கட்டும் என்றேன் நான்.

கொஞ்ச நேர இழுபறிக்குப் பிறகு ஒருவாறு என்னுடைய தீர்ப்பை ஏற்றுக்கொண்டு, தேங்காயுடைக்க தயாரானார் தந்தை. தலைப்பாயை கட்டுங்கோ என்றது நோர்வே, செல்வி அக்காவைப் பார்த்தார் கணவர். ஒருக்கா அந்த சால்வையை எடுத்தக் கொண்டுவாரும் என்று சொல்ல செல்வி அக்காவின் கண்களில் காளி ஒரு முறை வந்து விட்டுப் போனது.

தேங்காயுடைபட இரண்டு நாள் லீவில் வந்த மாமா பால் வைக்க சமிதா நடுங்கினாள்.

நித்திரையால எழும்பின பிள்ளையை கூட்டிக் கொண்டு வந்து ப்ரிட்ஜுக்குள்ளிருந்த பாலை உச்சந்தைலையில வைத்தால் பிள்ளை நடுங்காமல் என்ன செய்யும். கொஞ்சம் மைக்கிரோ அவுணில வைச்சு சூடாக்கினால் என்ன குறைஞ்சா போயுடுவீங்கள்.

ஒற்றை இலக்கத்தில தான் ஆக்கள் பால் வைக்க வேண்டும் - இது நோர்வேயின் கட்டளை

9 ஆம்பிளையள் வைச்சிட்டினம் சரி 9 பொம்பிளையள் வாங்கோ கட்டளை தொடர்ந்தது. செல்வி அக்கா ஒவ்வொரு பொம்பிளையளாய் அனுப்பினா ஆனாலும் ஒரு ஆள் காணாமல் போய்விட்டது. என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்க திடீரென லொட்றி விழுந்தவர் போல் பிரகாசமானார் செல்வி அக்கா. மேக்கப் பண்ண வந்த அக்காவை ஒருக்கா இஞ்சை வரச் சொல்லுங்கொ என கட்டளையிட்டார். மேக்கப் லேடி, அரை நித்திரை முகத்தோடும், அரைவாசி வெட்கத்தோடும் வந்து பாலை வைத்தார். பின்னர் பிள்ளையை குளிக்க வார்ப்பதற்காக தற்காலிகதடாகத்திற்கு அழைத்துச் சென்றனர். சமிதா நடுங்கியபடி சென்றாள். அந்த நேரத்தில் என் மனதில் ஒரு கேள்வி எழுந்தது, ஆனாலும் கேட்கவில்லை தண்ணி வார்த்த பின்னர் கேட்பம் என்று விட்டுவிட்டேன்.

காலை 09.30

சமிதா தண்ணீர் தடாகத்திற்குள் காலை வைத்த வைப்பிலேயே வெளியே எடுத்துவிட்டு, மம்மி இற்ஸ் வெரி கோல்ட் (Its very cold) என்று சிணுங்கினாள். பரவாயில்ல பிள்ள கொஞ்ச நேரம்தானே என செல்வி அக்கா அவளை சமாதானம் செய்ய, தடாகத் தண்ணீரை தொட்டுப் பார்ததேன் நான். தண்ணீர் மிகவும் குளிராகத்தான் இருந்தது. சரியாய் குளிருது என்று சொல்லியபடி நிமிர்ந்து செல்வி அக்காவைப் பார்த்தேன் காளி தரிசனம் எனக்கும் கிடைத்தது.

காலை 09.45

அடுப்பில் சுடவைத்தும், பைப்பில் எடுத்தும் ஒருவாறு குளிர்தடாகத்தின் வெப்பநிலையை செல்வி அக்காவின் மனநிலைக்கு கொண்டு வந்தனர் சொந்தங்கள். எல்லோரும் வரிசையாக தமது உடைகளில் நீர்தெறிக்காதவாறு சமிதாவை குளிப்பாட்டினர். பயோடேற்றா கன்னத்தில் கைவைத்தவாறு ஒரு கையால் ஊத்த, பாத்திரம் கைதவறி விழுந்து அவர் வேட்டியையும் பக்கத்தில் நின்ற செல்வி அக்காவின் சேலையையும் குளிப்பாட்டியது. வீடியோவை வெறுப்புடன் பார்ததபடி நனைந்த வேட்டியடன் நடந்தார்.

எல்லோரு தண்ணீர் வார்த்த பின்னர் வீடியோ எடுப்பதற்காக தண்ணீர் ஊற்றும்படி செல்வி அக்காவின் கணவரை கேட்க அவரும் ஒரு பெரிய வாளியை கொண்டுவந்து தண்ணீரை நிறைத்து சமிதாவின் தலையில் ஊற்ற, அண்ணை இன்னும் கொஞ்சம் முன்னுக்கு ஊத்துங்கோ என்று வீடியொ சொல்ல அடுத்தவாளி தண்ணியை சமிதாவின் முன்தலையிலூற்ற மூச்செடுக்க முடியாமல் அவள் திணறி எழும்ப வாளி தட்டுப்பட்டு தடாகத்தில் விழுந்து வீடியோ கமராவையும் குளிக்க வார்த்தது. கமராவில் தண்ணிபட்டுவிடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையால் பின்னால்சென்ற வீடியோ, வேடிக்கை பார்த்த சிறுவனின் மேல் தட்டுப்பட்டு இடறிவிழுந்தார்.

சந்தர்ப்பம் பார்த்திருந்த பயோடேற்றா, தம்பிமார் எங்களுக்கு படம் காட்டாதையுங்கோ, படத்தை மட்டும் எடுங்கொ என்று சொல்லி சிரித்து வீடியோவை வெறுப்பாக்கினார். பசியால் இரைந்த வயிற்றுடன் ஒருவாறு விழுந்த கமராவையும், கமாராமானையும் தூக்கிக் கொண்டு உள்ளே வந்தேன்.

காலை 10.20

வீடியோ சொன்னார் தம்பி உவை பிள்ளையை வெளிக்கிடுத்த எப்படியும் 2மணித்தியாலம் எடுக்கும். உள்ளுக்கை இருந்தால் உவங்களோட பிரச்சினைப்பட வேணும் வாரும் போய் காருக்க இருப்பம் என்றார். நானும் சரி என்று தலையாட்டியபடி அவரைப் பின் தொடர்ந்தேன்.

காருக்குள் சென்றதும் சுடுதண்ணீர்ப் போத்தல் (பிளாக்ஸ்) ஒன்றை எடுத்தார், 2 பிளாஸ்டிக் கப்பை எடுத்து எனக்கு ஒன்று தந்தார், நான் ஆச்சரியத்துடன் கப்பை வாங்கினேன். தம்பி உவங்கள் பச்சத் தண்ணியும் தராமாட்டாங்கள், அதுதான் நான் வரேக்கையே தேத்தண்ணியைக் கொண்டு வாறனான் என்றார்.

தம்பி என்ன தொழிலுக்கு புதுசோ என்று செல்வி அக்கா கேட்ட மாதிரி அவரும் கேட்டு விடுவாரோ என்ற எண்ணத்தில் நான் அவரை தொடர்ந்து கதைக்க விடாமல் இடை நிறுத்தி, அண்ண நீங்கள்தானே வசந்த் என்று அவரது பெயரைக் கேட்டேன். ஓம் தம்பி அது நான் தான். வீடியோ வசந்த் என்று சொன்னால் தான் எல்லோருக்கும் தெரியும் தம்பி. நான் தான் இங்க முதல் முதல் வீடியோ பிசினஸ் ஆரம்பிச்சனான். ஆனால் இப்ப கண்ட நிண்டவங்கள் எல்லாம் எடுக்கத் தொடங்கியிட்டாங்கள் என்று அவர் சொல்ல, என்னையும் குத்திகாட்டுவது போலிருந்தது. உடனே நான் இங்க இப்ப முந்தி மாதிரி இல்லத்தானே அண்ண, கனசனம் வந்திட்டுது அப்ப கலியாண வீடுகளும் சாமத்திய வீடுகளும் ஒரு நாளைக்கு எத்தினை நடக்குது அப்ப வீடியோ போட்டோக்களும் கனபேர் இருந்தால்தானே நல்லது என்று என் போன்றோருக்காக வக்காளத்து வாங்கினேன்.

வசந்த் அண்ணை கேட்கிறன் என்று குறை நினைக்காதையுங்கோ, ஏன் லேட்டாய் வந்தனிங்கள் என்று கேட்டேன். உடனே அவர் கோபத்துடன் என்ன தம்பி விசர்க்கதை கதைக்கிறீர். நீர் வேளைக்கு வந்திட்டு என்னை குற்றம்சாட்டுறீர். இஞ்ச ஒரு நாளும் ஒரு நிகழ்ச்சியும் உவையள் நேரத்துக்கு செய்யிறேல்ல. அவையளை விடியப் போய் எழுப்புறத்துக்கு நாங்கள் என்ன வேலைகாறரே? - நீரே சொல்லும் பார்ப்பம். அவரது கேள்வி எனக்கு நியாயம் போல் தெரிந்தது.

தம்பி ஆறு மணிக்கு எண்டு உவையள் சொன்னால் எப்பிடியும் 2மணித்தியாலத்திற்கு பிறகு தான் தொடங்குவீனம். மாமன் வர வேணும் மச்சான் வரவேணும் என்று இழுத்தடிப்பீனம். நான் சரியான நேரத்துக்குத்தான் வந்தனான். உவையள் பிழையான இடத்திலை வைச்சதுக்கு நான் ஏன்ன செய்யிறது என்றார். சரி வாரும் வீட்டுக்க போவம். போய் மேக்கப் லேடிக்கு குழையடித்தால்தான் வேலை நடக்கும் என்ற படி காரை விட்டு இறங்கினார்.

காலை 11.30

வீட்டிற்குள் சென்றோம். வசந்த் அண்ணை பிள்ளை றெடியோ என்றவாறு மேக்கப்றூம் கதைவைத் தட்டினார். நான் அவர்களது வரவேற்பறையில் நின்ற பெரியவருடன் (நோர்வே) கதை கொடுத்தேன். ஐயா அப்போதை ஒரு விசயம் கேட்கவேணும் எண்டு நினைச்சனான் பேந்து கேட்பம் என்று விட்டிட்டன். ஒற்றை இலக்கத்திலதான் ஆட்கள் பிள்ளைக்கு பால் வைக்க வேணுமெண்டு 9 பொம்பிளையளும் 9 ஆம்பிளையளும் வைச்சவை, ஆனால் இரண்டையும் கூட்டினால் 18 இரட்டை இலக்கமெல்லோ வருகுது என்றேன். அது பிரச்சினை இல்லையோ ஐயா என்றேன்.

நோர்வேயின் முகம் இரட்டை கோபுரத்தை இழந்த அமெரிக்காவைப் போலானானது. வசந்த் அண்ணை எங்கை நிக்கிறியள் என்றபடி நைசாக பெரியவரிடமிருந்து விலகினேன்.

தொடரும்..

- பிறவிப் போட்டோக்கிராபர்

Quotation / cover provided over the phone

No more proposal forms to complete
No more immediate payment
No more Direct Debit Mandate to complete
No more claim form to fill - All the details are taken over the phone.

But Immediate Quotation at a competitive Premium from leading Insurer and Instant Cover

Please ring us for a friendly service **020 8763 2221**

P.SRINIVASAN 32 Abbots Lane, Kenley, Surrey CR8 5JH
PENSION * LIFE * SAVINGS * MORTGAGES * COMMERCIAL LOANS
Fax: 020 8763 2220
E-Mail: sri@armassociates.co.uk www.srinivasan.co.uk

Home Insurance
Building and Contents Insurance including Let Properties
Term Assurance / Critical Illness
Level Term, Mortgage Assurance and Family Income Benefits
Retailer, Shopkeepers & Liabilities
All types of Shops Including Jewellery Shops, Self-Employed Business.
Mortgages / Re-Mortgages -
Decision in Principle/Virtual offer over the phone
All types of mortgages including Self-cert and buy-to-let.
All circumstances will be considered

ARM Associates

FSA Financial Services Authority

Authorised and Regulated by the Financial Services Authority

அறுவைப் பக்கம்

லவ்வுல சிக்கிச் சீரழிஞ்சிடாதீங்க!



காதல் எப்படி எங்கே ஏன் வருதுன்னு யாராலயும் சொல்ல முடியாது. வரவேண்டிய நேரத்துல கண்டிப்பா வரும்னு சொல்ல முடியாது. கண்டதும் காதல் வரலாம். கண்டதைப் பார்த்தும் காதல் வரலாம். கண்ணடிச்சா காதல் வரலாம். கன்னத்துல அடிச்சா காதல் வரலாம். இப்படி துறந்த வீட்டுல.. ஸொாரி துறந்த நெஞ்சுக்குள்ள காதல் படார்னு நுழைஞ்சு டூ மினிட்ஸ் நூடுல்ஸ் மாதிரி வேகமாக வெந்து நிக்கும்.

பசிக்கும். ஆனா சாப்பிட்டா ஏப்பம் வராது. தூக்கம் வரும். ஆனா கொட்டாவி வராது. நாய் கடிச்சாக் கூட கொசு கடிக்கிற மாதிரிதான் இருக்கும். ஆனா கொசு கடிச்சா நாய் கடிச்ச மாதிரி வலிக்கும். அழுக்கைப் பார்த்தாலும் அழகாத் தெரியும். எருமை கத்துனாக் கூட ஏ.ஆர்.ரஹ்மான் மியூசிக்கா கேட்கும். கூட்டத்துல இருக்கறப்ப மனசு தனியா இருக்குற மாதிரி மாஞ்சா தடவி பட்டம் விட்டுக்கிட்டிருக்கும். தனியா இருக்கிறப்ப சட்டசபையில இருக்கற மாதிரி மனசு கத்தும்.

காய்ஞ்சு கருவாடாப் போன ரோசாப்பூ எப்பவோ எச்சில் பண்ணுன எட்டுச்ச மிட்டாயைச் சுத்தியிருந்த பேப்பர் கிழிஞ்சு போன பஸ் டிக்கெட் லேசா செம்பட்டையான ஒரு முடி குறைப் பிரசவத்தில் பிறந்த நிலா மாதிரி இருக்கிற நகத்துண்டுகள் காது போன குட்டிக் கரடி பொம்மை ரெண்டு சென்டிமீட்டர் துண்டு பேப்பர்ல எழுதுன மூணு வரிக் கவிதை - இப்படித் தேடித் தேடிச் சேர்த்து வைச்சிருக்கிற பொக்கிஷங்களைப் பல்லை இளிச்சுப் பார்த்துட்டே இருந்தா பரலோகத்துல இருக்குற பீலிங் கிடைக்கும்.

இப்படி மருந்தே கண்டுபிடிக்க முடியாத உயிர்க் கொல்லி நோயான காதல்ல ஸரக்குன்னு வழுக்கி விழுற இடங்கள் எதுன்னு பண்ணின ஆராய்ச்சிதான் இது.

23சி பஸ்க்காக 24 நிமிஷங்களாகக் காத்திருப்போம். 25 வயசுள்ள ஒரு பொண்ணு பஸ் வரலையேன்னு 26 வது தடவையா நகத்தைக் கடிப்பா. 27 வது நிமிஷம் பஸ் வர 28 பேர் முந்தி அடிச்சு ஏறுவோம். நீங்க முன்வாசல். அவ பின்வாசல். நீங்க கொடுக்குற ரெண்டு ரூபா 29 பேரைக் கடந்து முப்பதாவது ஆளா அவ கைக்குப் போகும். அப்புறம் அவ டிக்கெட் எடுத்துக் கொடுக்குறது தினமும் நடக்கும். அதுக்கு தாங்க்ஸ் சொல்லி ஒரு பார்வையால நன்றி சொல்லுவீங்க. அந்த டொக்கு விழுந்த லுக்கே அவளுக்கு ரொமாண்டிக் லுக்கா தெரியலாம். டிக்கெட்ல டிக் ஆகி காதல் விக்கெட் விழலாம். பி கேயா ஃபுல்!

தொலைச்ச எதையோ தேடிக்கிட்டு வர்ற மாதிரியே ரெண்டு பேரும் எதிர் எதிர்த்தாப்ல வருவீங்க. ஒரு முட்டல் மோதல் நடக்கும். அடுத்த செகண்ட்ல நாலு உதடுகளும் துடிதுடிச்சு ஸொாரின்னு சொல்லும். விலகி நடக்கறப்போ உசிரை எடுத்து வெளியே போட்டுட்டு நடக்குற மாதிரி தோணும். போறப்பவே ரெண்டு பேரும் ஒரே நேரத்துல திரும்பிப் பார்ப்பீங்க. வெட்கமெல்லாம் வேற வர்ற மாதிரி சிரிப்பு ஒண்ணு சிரிப்பீங்க. அடுத்த நாள் இந்தாங்க இது உங்க முடி. நேத்து என் சட்டைப் பொத்தான்ல சிக்கிடுச்சுன்னு அவன் கொடுக்க பரவாயில்ல அதை நீங்களே வைச்சுக்கோங்கன்னு ஏதோ சொத்து எழுதிக் கொடுக்குற மாதிரி அவ சொல்லிட்டுப் போக அதுக்கு மேல என்ன நடக்குமுன்னு நான் வேற சொல்லணுமாக்கும்.

நீங்க கோயிலுக்குப் போறப்ப எல்லாம் பட்டை அடிச்சிட்டு பக்தி மாம்பழமா ஒரு ஐந்து உங்க பின்னாலேயே வரும். சந்நிதி முன்னால நின்னுட்டு கண்களை மூடி வேகவேகமாக ஏதோ சொல்லும். ஸ்லோகம்னு நினைக்கக் கூடாது. காதைக் கூர்மையா வைச்சுக் கேட்டாத்தான் தெரியும். அது ஸ்லோகமில்ல ஏதோ சினிமாப் பாட்டுன்னு! திடீர்னு ஒரு நாள் யாரோ உடைச்ச தேங்காயைப் பொறுக்கிக்கிட்டு வந்து உன்னோட பூனைக் குட்டிக்கு இன்னிக்கு நட்சத்திரப்படி பிறந்தநாள். அதான் அர்ச்சனை பண்ணுனேன். ஆமா உன் பேரு என்னன்னு கேக்கும் அந்த ஐந்து. இப்படி ஒரு வாசகமா ஆரம்பிக்கிறது திருவாசகமாப் பெருகி காதல் வெள்ளத்துல அடிச்சுட்டுப் போக அம்புட்டு சான்ஸ் இருக்கு. ஜாக்கிரதை.

எனக்கு கணக்குப் பாடத்துல ஒரு டவுட். அசோகர் எத்தனை மரங்களை நட்டாரு? அப்படின்னு சின்னப்புள்ளத்தனமா ஆரம்பிப்பாங்க. எனக்கு நேத்து சுண்டுவிரல் சுளுக்கிட்டதால கிளாஸ்ல நோட்ஸ் எழுத முடியலடா. உன் நோட்ஸ் தாடா. ப்ளீஸ்டான்னு உரிமை ஊஞ்சலாட கேப்பாங்க. நோட்ஸ் திரும்ப வர்றப்போ ஏகப்பட்ட பின்குறிப்புகளோட லவ்வையும் அட்டாச்மெண்ட்டா அனுப்புவாங்க. கால்குலேட்டரைக் கடனாக் கேப்பாங்க. திருப்பித் தர்றப்போ 143 ன்னு அதுல நம்பர் சிரிக்கும். அடிஸ்கேலை அன்பா வாங்கிட்டுப் போவாங்க. திருப்பித் தர்றப்போ ஸ்கேலோட அடிப்பாகத்துல ஹார்ட்ல அம்பு விட்டுத் தருவாங்க. ஸ்கூலுக்கு ஸ்கூல் மன்மதன்ஸ் ரதிஸ் காதல் மார்க்கோட அலைஞ்சுக்கிட்டே இருக்காங்க. எச்சரிக்கை.!

ஹலோ சுசீலா இருக்காங்களா? இல்லையா... ராங் நம்பரா... நீங்க யாரு? ஓ.. நீங்க சுப்புலட்சுமி யா! பரவாயில்லை நீங்களே பேசுங்க. நீங்களும் நல்லாத்தான் பேசுறீங்க! ஸ்வீட் வாய்ஸ்! ன்னு சில ராங் நம்பர்ஸ் கடலையைப் போட ஆரம்பிக்கும்.' ஆக்சுவலி யு.எஸ்.போறதுதான் என் கனவுன்னு எஸ்.எம்.எஸ்.ல கடலை காவடி தூக்கும். போகப் போக காதல் கரகாட்டம் ஆடும். மெஸெஜ் அனுப்பி அனுப்பியே கட்டை விரல் கரைஞ்சு போயிடும். முகம் பார்க்காம பண்ணுற இந்த லவ்வுல என்னன்ன டேஞ்சர் இருக்குன்னு வெலாவாரியா சொல்லாமலே தெரியுமே உங்களுக்கு!

மூணு சுழி 'ண' க்கு எத்தனை சுழி வரும். 'ம்' முக்கு புள்ளி வைக்கணுமா? இந்த ரேஞ்சுல தமிழ் தெரிஞ்ச பசங்க லவ்வை ஜிவ்வுன்னு சொல்லுறாங்க. நாலு வார்த்தைகளைக் கவ்வி கிரீட்டிங் கார்டுல தெளிச்சு 'உன்னைப் பத்தி ஒரு கவித எழுதுனேன். பாரு'ன்னு நீட்டுவாங்க .

'பூக்கலுக்கு பல்கள் உண்டா?
உன் – ஐப் பாத்ததும்
டெட்டானது காட்று!'

இந்த ரேஞ்சுல கவிதப் போக்குவரத்து டிராபிக் ஜாம் ஆகி கிடக்கும். நாம என்ன அவ்வளவு அழகாவா இருக்கோம்னு வார்த்தைகளில் வழுக்கி விழுந்தோட்டோம்னா அவ்ளோதான். எழுந்திரிக்கவே முடியாது.

டேய் மச்சான் இன்னிக்கு என் ஆளு கூட மூவி போறேன்னு பந்தாவா ஒருத்தன் முள்ளைத் தூவிட்டுப் போவான். இந்த சுடி அவன் வாங்கித் தந்தான்டி. அவனுக்கு பஞ்சு முட்டாய்க் கலர்தான் பிடிக்கும். எப்படி இருக்குடின்னு தோழி ஒருத்தி தோரணம் கட்டி தூபம் போட்டுட்டுப் போவா. அரியர்ஸ் பார்ட்டியே லவ் பண்ணுறான். நமக்கென்ன குறைச்சல்னு தோணும். அவளை விட பேரழகி நான். லவ் பண்ணுனா என்னன்னு கொஸ்டின் வந்து மூளையைக் குடையும். இந்தக் கேள்விக்குறிகளை ஆச்சரியக்குறிகள் ஆக்கணும்னு கங்கணம் கட்டிட்டு காதலிக்க ஆரம்பிக்கலாமேன்னு சபலம் வரலாம். ஜாக்கிரதை.

அடுத்த டேஞ்சரான நாள் பிப்ரவரி மாசம் வந்து பல்லைக் காட்டும். காதலர்களுக்கிடையில கீரிட்டிங் கார்ட்ஸ் கிரிக்கெட் ஆடும். சுதந்திரதினம் என்னிக்குன்னு தெரியாதவங்ககூட காதலர் தினத்தை கடமையுணர்வோட கொண்டாடுவாங்க. அட எல்லாரும் கையில ஹார்ட்டைத் தூக்கிட்டு அலையறாங்களே ஏன் நமக்குன்னு ஒரு லவ் இல்லன்னு ஏக்கம் சுனாமியா வந்து நம்மள மூழ்கடிக்கும். வேணாம் ராசா வேணாம். டப்பாசு வெடிச்சாத்தான் தீவாளி கேக்குத் தின்னாத்தான் கிறித்துமஸ், பிரியாணி சாப்பிட்டாத்தான் ரம்ஜான் அதே மாதிரி காதலிச்சாத்தான் காதலர் தினம் கொண்டாட முடியும்னு தப்புத் தப்பா தத்துவம் பேசி எக்குத் தப்பா லவ்வுல சிக்கிச் சீரழிஞ்சிறாதீங்க!

- முகில்

மல்லாக்க படுத்து யோசிக்க வேண்டிய விசயம்

Cycle ஓடினா அது Cycling

அப்படி எண்டா ...Train ஓடினா அது Tranning-ஆ?

தேவானந்தா கனவில...

தேவானந்தா சும்மா போட்டுப் பாப்பமே என்று ஒரு போட்டித் தேர்வுக்கு அப்ளை பண்ணினார். தேர்வுக்கு நாலு நாளைக்கு முன்னால் கடிதமும் வந்து சேர்ந்துச்சு. ஒரு மண்ணும் படிக்கேல தேவானந்தா. பரிட்சைக்கு முந்தின நாள் இரவு படிக்காம நித்திரை வராம ரெண்டு குழுசையைப் போட்டுத் படுத்தார். அப்ப கனவில ஒரு கேள்விப் பேப்பர் வந்துச்சு. அதப் பாத்து வெலவெலத்துப் போயிட்டார் தேவானந்தா. அதான் இது!

❖ *உங்கள் பெயர் தேவானந்தாவா?*

அ) ஆம் ஆ) ஒத்துக்கொள்ளுறன் இ) சரி

❖ *நியூட்டனின் மூன்றாவது விதியைக் கண்டுபிடித்தவர் யார்?*

அ) கொலம்பஸ் ஆ) தேவானந்தா இ) குட்டிச்சாமியார்

❖ *இங்கிலாந்தின் கப்பிட்டல் எது?*

அ) uK ஆ) EnglAnD இ) ENGland

❖ *த.பி.பா (தயவுசெய்து பின்னால் பார்க்கவும்) என்பதன் விரிவாக்கம்?*

அ) தயவு செய்யாமல் பின்னால் பார்க்கவும் ஆ) தயவுசெய்து பிராண்டிப் பார்க்கவும் இ) த.பி.பா

❖ *Yயும் Aயும் அக்கா தங்கச்சி. Cயும் Eயும் ஒண்டவிட்ட தங்கச்சி. Yயும் Aயும் உறவுமுறை. Aக்கு C மாமி. E க்கு F சித்தி. F க்கு C சம்பந்தி முறை. C யை A கல்யாணம் கட்டினா F க்கு A என்ன முறை?*

அ) தூரத்துச் சொந்தம் ஆ) பக்கத்துவீட்டுக்காரன் இ) கடனாளி

❖ *ஒரு வேலையை 12 பேர் 8 நாட்களில் செய்து முடிக்க முடியும். 16 பேர் 6 நாட்களில் செய்து முடிக்க முடியும். 20 பேர் 4 நாட்களில் செய்து முடிக்க முடியும். அப்படி என்றால் அந்த வேலையை யாருமே செய்யவில்லை என்றால் அந்த வேலை எப்போது முடியும்?*

அ) நேற்று ஆ) நாளைக்கு இ) போயா அண்டைக்கு

❖ *ஐஸ் கட்டி தயாரிக்க என்ன மூலப்பொருள் தேவை?*

அ) பெரிய ஐஸ் கட்டி ஆ) மூளை இ) அடுப்பு

❖ *3 + 3 = ?*

அ) ஆறு ஆ) 6 இ) Six

❖ *X என்பது ஒரு இரட்டை எண். அதை Y ஆல் பெருக்கினால் 12 வரும். 3320 என்பது Xன் ஐந்தரை மடங்கு. Y மற்றும் Z டின் இரு மடங்குக் கூட்டுத்தொகை Xன் மூன்று மடங்கு பெருக்குத் தொகையின் நாலில் ஒரு பங்கு. X, Y, Z - இவற்றின் மதிப்புகளைக் கண்டறிந்து இரண்டால் பெருக்கி 7-ஐக் கழித்தால் இறுதியில் என்ன வரும்?*

அ) எரிச்சல் ஆ) தலைவலி இ) மனநோய்

❖ *கோழியின் தயாரிப்பான பின்வரும் பொருள்களில் எது முதலில் வந்தது?*

அ) ஓம்லட் ஆ) முட்டை புரோட்டா இ) காஃப் பொயில்

❖ *முதல் உலகப் போருக்கும் இரண்டாம் உலகப்போருக்கும் இடையில் எத்தனை உலகப் போர்கள் நடந்தது?*

அ) 33 ஆ) 1/2 இ) 0.0473

❖ *கீழ்க்கண்டவற்றில் உயிர் எழுத்துகள் எவை?*

அ) கடசதபற ஆ) ஞஙணநமன இ) உயிர்

❖ *நீங்கள் இறுதிக் கேள்வியை அடைந்து விட்டீர்களா?*

அ) தெரியவில்லை ஆ) புரியவில்லை இ) அறியவில்லை

❖ *இந்த கேள்விக்கு நீங்க என்ன பதில் அளிக்க விரும்புறீங்க?*

அ) ஒ... ஆ) உஹ்... இ) டுர்ர்ர்...

- சுண்டல்

சினித்துளி

மாமணி!

அடுத்தடுத்து சிக்கல்களில் மூழ்கி தவித்த சினேகா இப்போது கலகலப்பாகி விட்டார். தமிழக அரசு வழங்கிய கலைமாமணி விருது அவருக்கு மீண்டும் உற்சாகத்தை கொடுத்திருக்கிறது. விருது வாங்கிய அன்று மிகவும் குதூகலமாக இருந்தார். மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்த அவர் விருது வாங்கியபோது முதல்- அமைச்சரின் காலைத் தொட்டு வணங்கினார். சமீபகாலமாக பத்திரிகையாளர்களைக் கண்டாலே ஒதுங்கிய சினேகா, விருது பெற்ற அன்று சந்தித்த எல்லா நிருபர்களிடமும் சிரித்துச் சிரித்து பேசினார். விழாவுக்கு சென்ற சினேகாவின் தந்தை உட்கார இடம் கிடைக்காமல் தவித்தது தனிக்கதை. அதேன் இப்ப.

இம்சை!

ஷங்கர் தயாரிக்கும் "இம்சை அரசன் 23-ம் புலிகேசி" படத்தில் இரட்டை வேடம் ஏற்றுள்ள வடிவேலு, இலக்கிய தமிழ் பேசி நடித்து வரு கிறார். சரித்திர படம் என்பதால் யானைகள், குதிரைகள், கோட்டை, கொத்தளம் என்று படப்பிடிப்பை அமர்க்களப்படுத்தி வருகிறார்கள். குதிரை சவாரி என்றால் என்னவென்றே தெரியாத வடிவேலு இந்த படத்துக்காக குதிரையில் ஏறி வாள் சண்டை போட்டு ஷங்கரிடம் சபாஷ் வாங்கியிருக்கிறார். "நடிப்பு என்றால் என்னை மறந்து அதில் மூழ்கிவிடுவேன். அதனால் குதிரை சவாரி, வாள் சண்டை, சண்டை எனக்கு பெரிதாக தெரியவில்லை" என்று சிரிக்கிறார் வடிவேலு.

முரசு!

"ஆதி"யை தொடர்ந்து அடுத்த ரவுண்டுக்கு தயாராகி விட்டார் விஜய். புதிய படத்துக்கான கதை தேர்வு செய்யப்பட்டு விட்டது. படத்தின் பெயர் முரசு. ஏப்ரல் மாதம் படப்பிடிப்பு தொடங்குகிறது. சிவகாசி, திருப்பாச்சி, போன்ற படங்களை இயக்கி விஜயின் மார்க்கெட்டை ராக்கெட் வேகத்தில் உயர்த்தி கொடுத்த டைரக்டர் பேரரசுவின் தம்பி முத்து வடுகு படத்தை இயக்குகிறார். இந்த படம் தொடர்பான பல்வேறு ஒத்துழைப்புகளை கொடுக்க தயாராக இருக்கிறார் பேரரசு. அநேகமாக விஜயின் ஜோடியாக சித்திரம் பேசுதடி படத்தில் கதாநாயகியாக நடித்த பாவனா தேர்ந்தெடுக்கப்படலாம் என்கிறது கோலிவுட் வட்டாரம்.

நெஞ்சாங்கூட்டில்!

சுக்கிரன் படத்தில் இசையமைப்பாளராக அறிமுகமாகி சப்போஸ் உன்னை என்ற பாடலுக்கு இளைஞர்களை குத்தாட்டம் போடவைத்து தற்போது நெஞ்சாஞ்கூட்டில் நீயே நிற்கிறாய் என்ற டிஷ்யூம் பாடல் வரை உள்ளத்தை கிள்ளியிருக்கிறார் விஜய் ஆண்டனி. வீட்டின் மாடியிலேயே ரெக்கோடிங் தியேட்டர் கட்ட வேண்டும் என்பது என்னுடைய நீண்ட நாள் ஆசை. அது இப்போதுதான் நிறைவேறியிருக்கிறது. அம்மா, சகோதரி, மனைவி இவர்கள் அருகில் இருக்க, நினைத்த நேர மெல்லாம் மெட்டமைக்கிற சுகத்திற்கு இணையேது? வீடும், தியேட்டரும் அந்த சந்தோஷத்தை எனக்கு கொடுத்திருக்கிறது என்று நெஞ்சாங்கூட்டில் வைத்திருந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார் விஜய் ஆண்டனி.

சிறுதுளி!

அலைகள் ஓய்வதில்லை படத்தின் மூலம் இயக்குநர் பாரதிராஜாவால் அறிமுகப்படுத்தப்பட்டு தமிழ் சினிமாவில் 12 ஆண்டுகளுக்கும் மேலாக கதா நாயகியாக வலம் வந்த நடிகை ராதா தற்போது தன்னுடைய இரண்டாவது இன்னிங்ஸ் துவக்கவுள்ளார்.

❖ ❖ ❖

தமிழ்த்திரையுலகில் தான்தான் தன்னி கரற்ற படைப்பாளி என்ற அகந்தை சமீப காலமாக சேரனின் மூளைக்குள் ஒட்டிக் கொண்டுள்ளது. என்ன பேசுகிறோம் என்பது புரியாமலேயே பத்திரிகையாளர் கள் மீது ஈட்டி எறிவதிலேயே குறியாக இருக்கிறார்

❖ ❖ ❖

கே.பாலசந்தர் இயக்கும் நூற்றி ஓராவது படம் பொய். இதனை டூயட் மூவீஸ் சார்பில் நடிகர் பிரகாஷ்ராஜ் தயாரித்திருக்கிறார். இப்படத்தின் கேஸட் வெளியீட்டு விழா சமீபத்தில் சென்னை பல்கலைகழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் பிரம் மாண்டமாக நடைபெற்றது.

❖ ❖ ❖

நடிகை நமீதா படப்பிடிப்பில் நடித்து கொண்டிருந்த போது அவர் அணிந்து இருந்த மோதிரம் காணாமல் போய்விட்டது. அது காணாமல் போனது அவரை மிகவும் வேதனை படுத்தி விட்டது. இத்தனைக்கும் அது லட்சகணக்கான விலை மதிப்பு கொண்டது அல்ல. சில ஆயிரம் ரூபாய் தானாம், பின்னர் சொல்லி சிரித்தாராம்.

❖ ❖ ❖

தமிழில் முன்னணி நடிகராக உரு வெடுத்து இருக்கும் சூர்யா இப்போது நன்றாக நடனமும் ஆடுகிறார். அவர் கஜினி படத்தில் ஆடிய நடனம் எல்லோரையும் கவர்ந்து இருந்தது. சூர்யா நடனத்தில் இந்த அளவுக்கு முன்னேறி இருப்பதற்க்கு டான்ஸ் மாஸ்டர் பிருந்தா தான் காரணமாம். என்னுடைய ஒவ்வொரு நடன அசைவுக்கும் பிருந்தா மாஸ்டர் தான் காரணம். அவர் கற்று கொடுத்த வித்தையால் தான் இந்த அளவுக்கு நடனம் ஆடமுடிகிறது என்று கூறுகிறார்.

❖ ❖ ❖

கமல் சம்பாதித்த பணத்தை எல்லாம் சினிமாவுக்கே செலவு செய்து விடுகிறார் என்று திரைப்படத்துறையினர் சொல்வது உண்டு. அது உண்மைதான், கமல் சாரைப் பார்க்க அவருடைய வீட்டுக்குப் போனேன். அது பிரமாண்டமான பங்களா. ஆனால் அது வாடகை வீடு என்பதை அறிந்த போது அதிர்ச்சியாக இருந்தது. இதை வேட்டையாடு விளையாடு கேசட் வெளியீட்டு விழாவில் சொன்னவர் பார்த்திபன்.



"பாவனா"

முதல் படத்தின் மூலமே இப்படி ஒரு பாராட்டு கிடைக்கும் என நினைத்தீர்களா?

டைரக்ர உள்வாங்கி சிறப்பாக செய்யணும்னு முடிவு செய்தேன். டைரக்டர் மிஸ்கின் படத்தின் கதையைச் சொன்னபோதே என் கேரக்டருக்கு பாராட்டு கிடைக்கும் என்று நினைத்தேன். நான் நடிக்க வந்தபோது பயமுறுத்தினார்கள். புது டைரக்டர், புது ஹீரோன்னு! ஆனால் நான் கதையையும் கேரக்டரையும் மட்டுமே நம்பினேன். நம்பிக்கை வீண்போகல்ல.

ஆரியா படத்தில் என்ன கேரக்டர் பண்றீங்க?

'சித்திரம் பேசுதடி' படத்துல நடிச்சிட்டிருக்கும் போது கிடைச்ச வாய்ப்பு 'ஆரியா'. மாதவன் ஸார் ஜோடியா இதில நடிக்கிறேன். மெடிக்கல் காலேஜ் ஸ்டுடண்ட்டா வர்றேன். ரொம்ப வித்தியாசமான கேரக்டர். 'சித்திரம் பேசுதடி' படத்தில் எப்படி ரவுடிக்கு எதிரான கேரக்டரில் நடிச்சேனோ அது மாதிரி இதுல நானே ஒரு ரவுடிப் பொண்ணு.

நிஜத்தில் நீங்கள் எப்படிப்பட்ட கேரக்டர்?

சில சமயம் அமைதியான பொண்ணா இருப்பேன். ஆனால் சில சமயம் அதிரடியான பொண்ணாகவும் இருப்பேன். அதெல்லாம் என் மூடை பொறுத்த விசயம். நிறுத்தச் சொன்னாக் கூட முடியாது என்று சொல்லி விடுவேன். ஆனால் கோபப்பட மாட்டேன். அண்ணன் கூட விளையாட்டா சண்டை போடுவேன். அப்பா, அம்மா பாசத்துக்கு கட்டுபட்டவள் நான்.

நடிக்க வந்தது எப்படி?

கேரளாவிலுள்ள திருச்சூரில் பத்தாம் கிளாஸ் படிச்சுக்கிட்டிருந்தபோது டைரக்டர் கமல் ஸார் நம்மள் என்ற படத்தில் நடிக்க அழைத்தார். பிறகு மம்முட்டி, மோகன்லால், பிருத்திவிராஜ், திலீப் கூட கிட்டதட்ட இருபது மலையாள படங்களில் நடிச்சுட்டேன்.

நீங்க ஒரு சின்னப் பெண் மாதிரி இருக்கீங்க? எப்படி பெரிய ஹீரோக்களுடன் ஜோடிச் சேர்ந்து நடிக்கிறீங்க?

நான் கேரக்டரைப் பற்றித்தான் திங் பண்ணுவேன். அது பிடிச்சுப் போச்சுன்னா நடிப்பேன். பெரிய நடிகர்களுக்கும் நான் சூட் ஆவேன் என்று நினைத்துத்தானே என்னை நடிக்க அழைக்கிறார்கள்.

தமிழ், மலையாளம் இரண்டு மொழி படங்களுக்கும் என்ன வித்தியாசம்?

இரண்டுக்கும் இடையில் அதிகம் வித்தியாசம் இல்லை. மலையாளத்தில் குறித்த நாட்களுக்குள் படத்தை எடுத்து முடிப்பார்கள். படத்தில் எல்லா கேரக்டர்களுக்கும் முக்கியத்துவம் இருக்கும். ஆனால் மலையாளத்தை விட தமிழ் படங்களில் நடிப்பவர்களுக்கு அதிக புகழும், பணமும் கிடைக்கும்.

- ரவிராஜா

LINGA & CO

Legal Advisors and Commissioners for Oaths

தற்போது அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ள சட்டதிட்டங்களில் நீங்கள் சிக்கி தவிக்கிறீர்களா?
உங்களுடைய பிரச்சனைகளை கருத்தில் கொண்டு உங்களுக்காக செயல்படும் தகுதியும் திறமையும் வாய்ந்த சட்ட நிபுணர்களை தேடுகிறீர்களா?

WE SPECIALISE IN:
ALL ASPECTS OF IMMIGRATION AND NATIONALITY MATTERS
WORK PERMITS APPLICATIONS - ALL CATEGORIES
HIGHLY SKILLED MIGRATION PROGRAMME,
FAMILY REUNION VISAS FOR SPOUSES AND DEPENDANT RELATIVES,
ASYLUM APPLICATIONS AND HUMAN RIGHTS APPLICATIONS,
APPEALS AND BAIL APPLICATIONS, EEC RESIDENCE PERMITS,
TOURIST VISA EXTENSION, PERSONAL INJURY, EMPLOYMENT LAW

10 ஆண்டுகால அனுபவம் உள்ள, பல சட்ட நிபுணர்களைக் கொண்ட சட்ட நிறுவனத்திடம் இருந்து சேவையை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள் மேலும் பல தமிழ் பேசும் சட்டதரணிகளும் இணைந்து செயற்படுத்துகின்றனர்.

Linga & Co வணிக ஆலோசனைகளையும், **book Keeping** சேவைகளையும் தகுந்த முறையில் நியாயமான விலையில் வழங்குகிறது. **EUROPE**ல் பிரஜாவுரிமை உள்ளவர்கள் தங்கள் உறவினர்களை **Sponsor** செய்ய வாய்ப்பு உண்டு

46 HIGH STREET, COLLIERS WOOD, LONDON SW19 2BY
GENERAL LINE: **020 8544 9285** (4 LINES)
EMERGENCY LINE: **07771 646 441** / FAX: **020 8542 9530**

உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் அனைத்தும் இரகசியமாகப் பேணப்பட்டு உங்கள் வழக்கின் மேன்மைக்காக பயன்படுத்தப்படும்

ESTABLISHED IN 1994

சினிமா

நான் ரசித்த திரைப்பட காட்சிகள்



இசையும், சினிமாவும் அனைவருடைய வாழ்வின் அங்கம். இரண்டும் விரும்பாமல் வாழ்வது மிகக் கடினம். இப்போது ஒரு வயது நிரம்பாத குழந்தைகள் கூட சினிமா பாட்டிற்கு தலையாட்டி, தொலைக்காட்சிப் பெட்டியின் பக்கம் தலையைத் திருப்புவதைப் பார்க்க முடியும்.

நான் அதிகமாக சினிமா பார்க்காவிட்டாலும் கூட, ஏறக்குறைய அனைத்து சினிமா சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளும் விரல் நுனியில் இருக்கும். இதற்குக் காரணம், சிறுவனாக இருக்கும் போது, என்னை அதிகமாகத் தொட்ட ஊடகங்கள் ரேடியோவும், செய்தித் தாள்களும். விசயத்திற்கு வருகிறேன். இதோ எனக்குப் பிடித்த சினிமாக் காட்கள் - பின்னணி இசையின் அடிப்படையில்.

அண்ணாமலை

ஏலத்தில் கேட்ட தொகையை கட்டுவதற்காக தனது வீட்டை வங்கியில் அடமானம் வைத்திருப்பார், சரத்பாபு, அதனை வங்கி யிலிருந்து வாங்கி வரும் ஜனகராஜ், ரஜினி யிடம் கொடுப்பார். ரஜினி அதை வாங்கிவிட்டு, மனோரமாவைப் பார்பார். குஷ்பூவைப் பார்ப்பார். ஜனகராஜைப் பார்ப்பார். பின் மனோரமாவை அழைத்து அந்தப் பத்திரத்தை சரத்பாபுவிடம் கொடுக்கச் சொல்வார். அப்போது, மனோரமா ரஜினியிடம் நீ கோடி கோடியாகக் கொட்டும் போது கூட இவ்வளவு சந்தோசப்படலை..., என்று கூறி விட்டுச் செல்வார். அந்தக் காட்சியும், அதில் இடம் பெறும் வயலின் இசையும் அற்புதமாக இருக்கும். அதே வயலின் இசை, படத்தின் பிற்பகுதில் மூன்று-நான்கு இடங்களில் இடம் பெறும். (ஒன்று மகளை அடித்து விட்டு மனோரமாவிடம் பேசும் போது, ரஜினி மகள், குஷ்பூவிடம் ஒரு பையனின் கார் கண்ணாடியை உடைத்து விட்டேன் எனக் கூறுமிடம்).

கன்னத்தில் முத்தமிட்டால்

"சட்டென நனைந்தது நெஞ்சம்" என்ற அருமையான குறும்பாடல், இந்தப் படத்தில் இடம்பெற்றிருந்தது மாதவன், சிம்ரனிடம் மணம் புரிந்து கொள்ள சம்மதம் கேட்குமிடத்தில். அருமையான பாடல், மின்மினி பாடியது. இது தான் மின்மினி ரகுமானுக்குக் கடைசியாகப் பாடியது என நினைக்கிறேன். அந்த காட்சியும், பாடலும் மிக அருமையாக இருக்கும் அதன் பிறகு அவர் குரல் பாதிக்கப்பட்டு அதற்காக சிகிச்சை பெற்று வருகிறார்

முதல் மரியாதை

இதில் இரு காட்சிகள் எனக்கு மிகவும் பிடிக்கும். இரண்டுமே பெரும்பாலும் அனை வரும் தெரிவிக்கும் காட்சி தான். 1. சிவாஜி கல்லைத் தூக்கும் காட்சி. 2. சிவாஜி ராதா வீட்டில் சாப்பிடும் காட்சி.

முதல் காட்சியில், ஒரு அருமையான கிடார் இசையும், கிளாப் இசையும் இடம்பெற்றிருக்கும். இரண்டாம் காட்சியில் சிவாஜி ராதாவிடம் சாப்பாட்டின் அருமையை விவரிக்கும் போது, 'பூங்காற்று திரும்புமா' எனற பாடல் முதலில் சோகமாக பின்னணியில் இசைக்கப்படும் (வயலின் என்று நினைக்கிறேன்), சிறிது விநாடிகள் கழித்து மீண்டும் வேகமாக அதே ராகம், தபேலாவில் இசைக்கப்படும். அந்தக் காட்சி முடியும் தருவாயில் மீண்டும் அதே ராகம் புல்லாங்குழலில் இசைக்கப்படும். ஒரே ராகம் மூன்று வித்தியாசமான மனநிலைக்கு ஏற்றபடி, மூன்று இசைக்கருவில். அழகாக இருக்கும்.

இருவர்

தனது மனைவி போலிருக்கும் சினிமா நடிகை ஐஸ்வர்யா ராயை, மோகன்லால் காரில் வைத்து ஏற்றிச் செல்வார். அப்போது ஐஸ்வர்யா, மோகன்லாலிடம் 'என்னை புஷ்பா எனக் கூப்பிடுங்கள், என்பார். அதற்கு மோகன்லால் மறுக்கவே, காரில் இருந்து குதித்து விடுவார். குதித்தவரைக் காப்பாற்றி கட்டி அணைப்பார், மோகன்லால். அப்போது ஹரிணியின் குரலில் அற்புதமான ஓர் பின்னணி இசை ஒலிக்கும்.

பூவோடு வண்டு கண் தூங்கிப் போன
நேரத்தில்
ஆறோடு அலைகள் கண் தூங்கிப் போன
நேரத்தில்
விண்ணோடு மீன்கள் கண் தூங்கிப் போன
நேரத்தில்
என்னோடு காதல் உன் காதல் மலர்ந்து
கொண்டதே...

என்று ஒரு நிமிடம் வரும். அற்புதமாக இருக்கும். இரண்டாம் காட்சியில், மோகன் லாலின் பண்ணையார் வேஷம் அவரிடமி ருந்து பறிக்கப்பட்டு இன்னொரு நபரிடம் கொடுக்கப்படும். அவர் போலீஸ் வேடம் தரிப்பார். அப்போது ஒரு கிடார் இசை, சீரியஸாக வரும். அற்புதம் அற்புதம்.

- ஸ்ருசல்

விமர்சனம்

சித்திரம் பேசுதடி

பத்தோடு பதினொன்றாக இருக்கும் என்ற நினைப்பில் படம் பார்க்க உட்கார்ந்த சில நிமிடங்களிலேயே நமது எண்ணத்தை வண்டியில் ஏற்றி அப்புறப்படுத்தி விடுகிறது ஆரம்ப காட்சிகள்.

ரவுடிக் கும்பலிலிருந்து தப்பிய இளைஞன் ஒருவன் கழிவறைக்குள் பொறியில் சிக்கிய எலியாக மாட்டிக் கொள்கிறான். பாவம் பையன் கைமாதான் என்று நினைக்கும்போது குறுக்கே வருகிறது ஒரு உருவம். மூன்று ரவுடிகளுக்கும் அடி இல்லை இடியை கொடுக்க இருக்கையின் நுனிக்கு வந்துவிடுகிறோம். பையனை காப்பாற்றிய உருவம்தான் கதாநாயகன் நரேன். வெட்டி ஆபிசராக இருக்கும் நாயகனை ஆள்விட்டு கூப்பிடும் தண்டபாணி (காப்பாற்றப்பட்ட பையனின் தந்தை) அடியாள் வேலை கொடுக்கிறார். நரேனின் அடியாள் வேலை பாஸ்ட் மூவிங்கில் நகர்ந்து முடிக்க கல்லூரி மாணவி பாவனாவும் நரேனும் சந்தித்துக்கொள்கிறார்கள்.

முதல் சந்திப்பே தகராறாக ஒவ்வொரு சந்திப்பின்போதும் அது முற்றுகிறது. ஒரு கட்டத்தில் அந்த முற்றலே காதலாக கனிகிறது. எப்படிப்பட்ட கோட்டையும் காதலில் காணாமல் போய்விடுவதுதானே காலம் தொட்டு நிகழும் நிதர்சனம். அதுதான் இங்கும் நிகழ்கிறது. பாவனாவுக்காக அடியாள் வேலையை உதறி திருந்துகிறார் நரேன். காதல் வளர்ந்து கல்யாண பத்திரிகை வரை வரும் நேரத்தில்தான் நாயகன் - நாயகி இருவரின் வாழ்க்கை வேரில் கோடரி போடுகிறது ஒரு சம்பவம். அதை சஸ்பென்ஸாக வைத்துவிடுகிறோம்.

ஜாதி மதம் அந்தஸ்து ஆஸ்தி அழகு சந்தேகம் இதுதானே தமிழ்ச் சினிமாவில் காதலுக்கு தடையாக சொல்லப்பட்டு வரும் விஷயங்கள். இந்த கதையும் திரைக்கதையும் அப்படியொரு அதர பழசை தந்து விடவில்லை.

இதுவும் ஊசிப்போன காதல் மாவாகதான் இருக்கும் என்று நினைப்பவர்கள் கூட படம் பார்த்துவிட்டு வெளியே வரும்போது இது ரொம்ப புதுசுதாங்க என்று கற்பூரம் ஏற்றி சத்தியம் செய்வது சத்தியம்.

ஜோல்னா பையை தோளில் மாட்டி பேனா நோட்டை கையில் கொடுத்தால் ஒரு எழுத்தாளரை போலவும் கவிஞரை போலவும் தோற்றம் பெரும் நாயகன் நரேன் அடியாளாக ஆத்திரக்காரனாக காதலில் விழுந்ததும் தனது சுபாவத்தையும் நடத்தையையும் சின்ன குழந்தையாக மாற்றிக் கொள்பவனாக காட்சிக்கு காட்சி ஹீரோயிஸத்தின் எடுத்துக் காட்டிற்கு சுட்டுவிரல் காட்ட வைக்கிறார். கண்களில் நெருப்பு பற்றவைப்பதும் அடுத்த விநாடியே சுனாமியை சுருட்டிவைத்திருக்கும் ஆழ் கடலைபோல் அமைதியாகி விடுவதும் தேர்ந்த நடிகனாக அடையாளம் காட்டுகிறது. நாயகி பாவனா அழகு நடிப்பு இரண்டிலும் ஆச்சர்யமூட்டுகிறார்.

நாயகன் நாயகி மட்டும்தான் அழுத்தமான கதாபாத்திரங்களாக இருக்க வேண்டுமா!? இதோ கானா பாடும் உலகநாதன் நரேனின் நண்பர்களாக வரும் அஜயன் பாலா ஜெயாமதன் சிங்கார சுகுமாரன் பாவனாவின் தந்தை ரவிப்பிரகாஷ் உள்பட ஒட்டுமொத்த கதாபாத்திரங்களுக்கும் கைத்தட்டல் வாங்கித் தருகிறார் இயக்குனர். வில்லனாக வரும் 'காதல்' தண்டபாணி நடிப்பிலும் தோற்றத்திலும் அத்தனை காரம்.

நகைச்சுவை என்று தனி டிராக்கை ஓட்டி படச்சுருளை ஸ்வாகா செய்யாமல் கதா பாத்திரங்கள் வழியாக நகைச்சுவை விருந்து படைக்கும் உத்தி சூப்பர்.

உடம்பில் சல்லடை போட்டு லிட்டர் கணக்கில் ரத்தம் வடிய வைக்கும் இன்றைய சண்டை காட்சிகளிலிருந்து மாறுபட்டு ஆக்ஷன் காட்சிகளை கர்ப்பிணி பெண்களும் கைதட்டி ரசிக்கும் வகையில் பிரமாதப்படுத்தியிருக்கும் ஆக்ஷன் பிரகாஷுக்கு சண்டை போட்டாவது ஒரு விருது வாங்கித் தந்து விடவேண்டும்.

மகேஷ் முத்துசாமி ஒளிப்பதிவை ஒரே வார்த்தையில் விமர்சிப்பது என்றால் டைட்டிலின் முதல் வார்த்தையை சொல்ல லாம். இசையமைப்பாளர் சுந்தர் சி. பாபுவுக்கு இது முதல் படமாம். போங்க சார் பொய் சொல்லாதீங்க.... இந்த ஒட்டு மொத்த கலைஞர்களின் கைவண்ணத்தை சாறு பிழிந்து இந்த 'சித்திரத்தை' பேச வைத்திருக்கும் இயக்குனர் மிஷ்கினுக்கு அவசரமாக ஒரு மேடை போட்டு கௌரவித்தால் அதை செய்பவர்களுக்கே கௌரவம். 'சித்திரம் பேசுதடி' - நிஜம்தான்!

- விடுப்பு

Buy a House in UK with No Deposit

SP UNIQUE MORTGAGES
80, JMP House,
Dunstable,
LU5 4HE
01582-51834
or
07968724452
Fax 01582-53988



ILFORD town centre,
HARROW on the Hill,
KINGSTON
HATFIELD,
LEIGHTON BUZZARD,
HERTFORD town

மங்களகரமான சேவையை மகிழ்ச்சியுடன் தருகின்றோம்

உலகின் எப்பாகத்திற்கும் உங்களது பொருட்களை பாதுகாப்பாகவும், விரைவாகவும், குறைந்த செலவிலும் விமான மூலமாகவோ, கடல் மார்க்கமாகவோ, தரை வழியாகவோ அனுப்பிட உடன் தொடர்புகொள்ள வேண்டிய நிறுவனம்

Global Logistic Solutions

International and Domestic Courier Services for all documents and parcels at very competitive rates.

Our strategic alliance with DHL allows us to provide a reliable, fast and on-time delivery that is tailor-made for your individual or corporate needs.

Anywhere in the UK or the rest of the world. 'Point to Point Tracking' that lets you stay in touch with your shipments at all times.

Our Services

Both Businesses and Individuals:

- International Express Courier Service This is the best choice for sending urgent documents, parcels or packages of any weight to anywhere in Europe or the rest of the world.

Choose from:

- **EU Express**
- **Worldwide Document Express**
- **Worldwide Parcel Express**
- **European Road Service**
- **UK Domestic Courier Service**

Global Logistic Solution Services Ltd.
755 Harrow Road, Wembley,
Middlesex HA0 2LW UK
Tel: **020 8908 6947/6949**
Fax: **020 8908 3998**
Email: info@glslogistics.co.uk
www.glslogistics.co.uk

Happy Tamil New Year and Best Wishes from

SRI RATHIGA

SRI RATHIGA SOUTH INDIAN RESTAURANT

Specialists in Andhra, Kerala, Karnataka and Tamil Cuisines!

312, High Road, Ilford, Essex, IG1 1QW Tel : 020 8478 7272, www.srirathiga.co.uk

The Ilford restaurant opened in November 1999 and has established itself as one of the best Indian restaurants in London with 80 Seats, with ample car parking facilities behind the restaurant.

Private Function Room for 40 people! With parking for 20 cars.

We have the habit of winning 'Prestigious Awards' To mention a few...several awards from the Hospitality Industry

Time Out Magazine voted SRI RATHIGA among 'The Best Indian Restaurants' in London, for consecutive years.

We pride ourselves in our Quality, Variety and Taste of Food.

'Sri Rathiga is planning to open New South Indian Restaurants in London'.

For any functions, theme-events, parties, conferences, meetings we will do 'Out Door Catering' at your door step.

For all your catering needs contact us on
0208 478 7272



Have you heard of our **'Sweet and Food Festivals'**
Visit our web site:
www.srirathiga.co.uk

New Restaurant
at Station Road, Harrow!
The real taste of South Indian Food is coming to Middlesex
SRI RATHIGA SOUTH INDIAN VEGETARIAN RESTAURANT
57 Station Road, Harrow, Middlesex, HA1 2TY
Tel : **0208 863 8822**

SINDU MAHAL
EVENT PLANNERS LTD

274B Barking Road, East Ham, London, E6 3BA
Tel: 020 8477 1356 Mob: 07951 418 145

Enjoy the occasion in a Grand Style

Specialist Event Planners
Fulfills the tastes, standards and cultural customs of our contemporary generation

SINDU MAHAL
Restaurant
020 8471 6226

விழாவிற்கான உணவு வகைகளையும்
பலகார வகைகளையும்
நிரம்பிய சுவையுடன்
செய்து தருகிறோம்

DECORATION
(All types of functions)
DJ with club style lighting
Garlands
Boquets

INVITATION CARDS
Sweet/Cake boxes
Marquee hire
Cutlery/chair hire

FOOD CATERING
(All types of foods)
Cakes

SINDU MAHAL
Party Services
020 8477 1356

திருமணம், பூப்புனித நீராட்டு விழா,
பிறந்த நாள் அரங்கேற்றம்
போன்ற அனைத்து விழாக்களுக்குமான
அலங்காரங்களை புதிய வடிவில்
செய்து தரப்படும்
50 இருக்கைகள் கொண்ட **Party Hall**
உங்கள் நிகழ்வுகளிற்கு தகுந்தாற்போல்
சோடனை செய்து தயார்படுத்தி தரப்படும்
100 இடியாப்பம் **£8** மட்டும்!

ARRANGEMENT OF:
Venues
Priest
Servicemen
Merla Katcheries
Videography & Photography

நீங்கள் உங்கள் வைபவங்களை நடாத்த வேண்டும் என்றால் உடனே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் உங்களிற்கு தேவையான அனைத்து சேவைகளையும், தரமாகவும் மலிவாகவும் ஒரே பொதியாக வழங்கி உங்கள் நிகழ்வை சிறப்படைய செய்வோம்

தரமான பாகம்! தவறாத நேரம்! தரமோ நிரந்தரம்!